காரைக்கால்

அம்மையார்

புராணம்.

மூலமும்

அரும்பொருளுவமைச் செய்யுட்டிரட்டும்.

இவை

காரைக்கால்

குவொணமா பாடசாலை திரேகதேரும, ஒபிசியே தககாதெமியுமாகிய,

தம்பி-புருஷோத்தமப் பிள்ளையவர்களால்

தொகுககப்பட்டு

சென்னை

ஆனந்தா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

1906.

முகவுரை.

காரைக்கா லம்மையார் புராணமானது, ஸ்ரீ சேக்கிழார் நாயனாரா லருளிச்செய்யப்பட்டுள்ள பெரியபுராணத்துளொருபகுதி யென்பது அறிஞரெவரு மறியக்கிடந்ததே.

அப்புராணத்திற்குச் சில பண்டித சிரோமணிகள் உரை யெழுதி யிருக்கின்றார்கள். அறிவினுங் கேள்வியினு மெளியனாகிய யானும், அங்ஙனமோருரை எழுதவந்தேனல்லேன். மற்றென்னையெனின்? ஒரு நான்முகமாகப் பல நூற்களிலுள்ள விஷயார்த்தங்களை யுணர்த்தும் புத்தகங்கள், பிராஞ்சுபாஷையிலுள்ளனபோலத் தமிழிலுமிருக்கின் நலமென்னும் பேரவாவென்னைத் துரப்ப, பத்திரசம் பெருக்கெடுத்துச் சொற்சுவை பொருட்சுவை முதலியவற்றோடு பொலிவுற்று விளங்கும் அப்புராணத்தையே வியாசமாகக்கொண்டு, அதிலுள்ள வரும்பொருட்களுக்கு மேற்கோளாகப பற்பல நூற்களில், ஆங்காங்கு ஆன்றோர்களாற் கூறப்பட்டமைந்து கிடக்குஞ் செய்யுட்களிற் சிலவற்றை எடுத்துத் திரட்டுவானெண்ணினேன். அவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்யவேண்டி, நெடுநாளாகத் தமிழ் நூறகட் பலவற்றிலுஞ் சொன்னயம பொருணய முதலிய வழகு நிரம்பி மலிந்துகிடக்கும் அருஞ்செய்யுட்களிற் சிலவற்றை யெடுத்து, இயன்றவரையிற் புராணிகர் கருத்தொடு பொருத்தி, ஒரு நூலாகத் தொகுக்கலாயினேன்.

அமிழ்தினு மினிய தமிழெனு மடந்தை மாட்டெனக் குள்ள தண்டாக்காதலொன்றே இத்தகைய நூலொன்றைத் தொடங்க வற்புறுத்தி, நூலொடுபழகிய நுண்ணுணர்வில்லா யானும ஏதோ வொன்றை யச்சிட்டு வெளிப்படுத்தும் பழியையு மென்மீதிற் சுமத்திற்று. இது சமயசார்பை மேற்கொண்டு தொகுக்கப் பட்ட தன்றென்பதற்கு, யான் சைவசமயி யல்லனென்பதே போதியசான்றாகும்.

இந்நூலைத் தொகுப்பதற்குச் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பெருங்காப்பியங்களும், பன்னூற்றிரட்டு முதலியனவும் பேருதவி செய்தமையின், சங்கமருவிய நூற்களிற் சிற்சிலவிருந்து மிறந்தமைபோன்றமையின்,

II

(மணிமேகலை)

"...................அரும்பெறன் மாமணி
பொங்கு திரைக்கடல் வீழ்த்தோர் போன்று."

அவைகளையுணர்ந் துவக்கும் பேறற்றுத் தான்புற்றுக் கிடந்த தமிழுலகத்தவர்கட்கு, அவைகளை யச்சிட்டு வழங்கி, இன்றியமையா வுபகாரம்புரிந்து இருசுடர்வழங்கும் வையத்துளென்றுஞ் செல்லா நல்லிசை நிறுவிய மகாமகோபாத்தியாயர் உத்தமதானபுரம்-ஸ்ரீமத்-வே. சாமிநாதையரவர்கட்கும், இராமநாதபுரம் சுனம் - பாண்டித்துரைத்தேவர் முதலிய தமிழபிமானிகட்கும், ஏனைய பதிப்பாசிரியர்கட்கும் யானுமென்னனைய தமிழ் மாணவர்களும் எஞ்ஞான்றும் நன்றியறிதலுமுடையவர்களாயிருக்கும் கடமை பூண்டுள்ளோம்.

இந்நூலெழுதத் தொடங்கியதுமுதற் பூர்த்தியாகும்வரையிற் பலவாற்றானு மெனக்குப் பேருதவி புரிந்துவந்த காரைக்கால் வித்துவானும், பிரான்சு கவர்ண்மெண்டு வித்தியாசாலைத் தமிழ்ப் பிரதம பண்டிதருமாகிய ம-ள-ள-ஸ்ரீ - பா. வேங்கடராம நாயுடவர்கட்கும், புதுவைக் கவர்ண்மெண்டு வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதரும், எனதாப்த நண்பருமாகிய ம-ள-ள-ஸ்ரீ - சி. பங்காருபத்தரவர்கட்கும் என்னுடைய வந்தனத்தை நன்றியறிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

மேல்வரு மவையடக்கச் செய்யுட்களிற் பெரும்புலமை வாய்ந்த ஆன்றோர்களெல்லாந் தாங்களியற்றிய நூற்களுக்கு எவ்வளவோ தங்களை அநருகராக்கி யவையடக்கங் கூறியிருக்கின்றமையின், ஒன்றுக்கும் பற்றாதவனாகிய யானு மவையடக்கங் கூறு மாறெங்ஙனம்! எனது சிற்றறிவை விளக்குவதோர் மொழி தமிழிலெனக்குப் புலப்படாமையின், அவையடக்கங் கூறிலேனெனப் பெரியோரென்னை யிகழ்வரோ!

காரைக்கால்,

தம்பி - புருஷோத்தமன்.

III

மேற்கோளாக எடுத்துக் கொள்ளப்பட்ட

No.	நூற்கள்	செய்யுட்கள்.	No.	நூற்கள்.	செய்யுட்கள்.
1.	திருக்குறள்	17	36.	குசேலோபாக்கியானம்	18
2.	சீவகசிந்தாமணி	64	37.	கந்தபுராணம்	8
3.	சிலப்பதிகாரம்	9	38.	பெருந்தேவனார் பாரதம்	1
4.	மணிமேகலை	10	39.	நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி	1
5.	வளையாபதி	3	40	பட்டினத்தடிகள்	8
6.	குண்டலகேசி	1	41.	தாயுமானஸ்வாமிகள்	6
7.	பெரியபுராணம்	8	42.	பிரமோத்தரகாண்டம்	2
8.	கம்பராமாயணம்	54	43.	தேம்பாவணி	18
9.	தேவாரம்	9	44.	கூர்மபுராணம்	1
10.	திருமந்திரம்	3	45.	திருக்குற்றாலப் புராணம்	2
11.	நாலடியார்	20	46.	கூவத்துப் புராணம்	6
12.	ஔவையார் தனிப்பாடல்	6	47.	விநாயக புராணம்	3
13.	மநுஸ்மிருதி	6	48.	தணிகைப்புராணம்	3
14.	திருவிளையாடற் புராணம்	54	49.	நீதிநெறிவிளக்கம்	1
15.	நைடதம்	8	50	சேது புராணம்	2
16.	வில்லிபுத்தூரார் பாரதம்	2	51.	திருப்பெருந்துறைப்புராணம்	1
17.	அரிச்சந்திரபுராணம்	18	52	வாயுசங்கிதை	1
18.	நளவெண்பா	8	53.	திருக்களிற்றுப்படியார்	1
19.	காஞ்சிபுராணம்	17	54.	காசிகாண்டம்	16
20.	பத்துப்பாட்டு-முகவுரை	1	55.	திருச்சிற்றம்பலக்கோவையார்	1
21.	,, பொருநராற்றுப்படை	2	56.	சைவசமயநெறி	1
22.	,, பட்டினப்பாலை	3	57.	திருவாலங்காட்டுப்புராணம்	1
23.	,, மதுரைக்காஞ்சி	2	58.	கம்பர் தனிப்பாடல்	1
24.	சூளாமணி	1	59.	கஜேந்திர மோக்ஷம்	1
25.	புறப்பொருள் வெண்பாமாலை	1	60.	இளையபதிற்றுப் பத்தந்தாதி	1
26.	நன்னூல்	2	61.	சிசண்டியார்	1
27.	நலவழி	1	62.	அருணகிரிநாதர் திருப்புகழ்	1
28.	ஞானநெறி	3	63.	சிவஞானபோதம்	1
29.	அறநெறிச்சாரம்	3	64.	நீதிநூல்	19
30.	திரிகடுகம்	4	65.	அருணாசல மான்மியம்	1
31.	சிறுபஞ்சமூலம்	3	66.	தண்டலையார் சதகம்	1
32.	சிவதருமோத்தரம்	1	67.	சாவித்திரி	2
33.	திவ்யபிரபந்தம்	1	68.	இராமலிங்கசுவாமிகள் பாடல்	1
34.	சீகாளத்திபுராணம்	2	69.	அஷ்டபிரபந்தம்	11
35.	பிரபுலிங்கலீலை	42	70.	சீறாபுராணம்	2

அவையடக்கச் செய்யுட்டிரட்டு.

சீவகசிந்தாமணி.

கற்பாலுமிழ்ந்தமணியுங்கழுவாதுவிட்டா
னற்பாலழியுந்நகைவெண்மதிபோனிறைந்த
சொற்பாலுமிழ்ந்தமறுவும்மதியாற்கழீஇப்
பொற்பாவிழைத்துக் கொளற்பாலர்புலமைமிக்கார்.

முந்நீர்ப்பிறந்த பவளத்தொடு சங்குமுத்து
மந்நீருவர்க்கும் மெனின்யாரவை நீக்குகிற்பா
ரிந்நீரவென்சொற் பழுதாயினுங் கொள்பவன்றே
பொய்ந்நீரவல்லாப்பொருளால் விண்புகுதுமென்பார்.

குண்டலகேசி.

நோய்க்குற்ற மாந்தர் மருந்தின் சுவை நோக்ககில்லார்
தீக்குற்ற காதலுடையார் புகைத்தீமை நோக்கார்
போய்க்குற்ற மூன்று மறுத்தான் புகழ்கூறுவேற்கென்
வாய்க்குற்ற சொல்லின் வழுவும்வழு வல்லவன்றே.

பெரிய புராணம்.

அளவிலாத பெருமையராகிய
அளவிலாவடியார் புகழ்கூறுகேன்
அளவுகூடவுரைப் பரிதாயினும்
அளவிலாசை துரப்பவறைகுவேன்.

தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர்தம்
பொருவருஞ்சீர் புகலலுற்றேன்முற்றப்
பெருகுதெண் கடலூற்றும் பெருநசை
யொருசுணங்கனை யொக்குந்தகைமையேன்.

செப்பனுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொருட் குரையாவருங் கொள்வரால்
இப்பொருட்கென்னுரை சிறிதாயினு
மெய்ப்பொருட்குரியார் கொள்வர்மேன்மையால்

அருளினீர்மைத் திருத்தொண்டறிவருந்
தெருளினீரிதுசெப்பு தற்காமெனின்
வெருளின்மெய்ம் மொழிவானிழல்கூறிய
பொருளினாகுமெனப் புகல்வாமன்றே.

வில்லிபுத்தூராழ்வார் மகாபாரதம்.

கன்னபாக மெய்களிப்பதோரளப்பினால்கதைமுன்
சொன்னபாவலன் றுகளறுசுகன்றிருத்தாதை
யன்னபாரதந்தன்னை யோரறிவிலே னுரைப்ப
தென்னபாவமற் றென்னை யின்றென் சொலாதுலகே.

மண்ணிலாரணநிகரென வியாதனார்வகுத்த
வெண்ணிலா நெடுங்காதையையானறிந்தியம்பல்
விண்ணிலாதவன் விளங்குநீ டெல்லையையூமன்
கண்ணிலாதவன் கேட்டலுங் காண்டலுங் கடுக்கும்.

முன்சொலாகிய சொல்லெலா முழுதுணர்முனிவன்
றன்சொலாகிய மாப்பெருங்காப்பியந்தன்னைத்
தென்சொலானுரை செய்தலிற்செழுஞ் சுவையில்லாப்
புன்சொலாயினும் பொறுத் தருள் புரிவரே புலவோர்.

முன்னுமாமறை முனிவருந்தேவரும் பிறரும்
பன்னுமாமொழிப் பாரதப்பெருமையும் பாரேன்
மன்னுமாதவன் சரிதமுமிடை யிடைவழங்கு
மென்னுமாசையால் யானுமீதி யம்புதற்கிசைந்தேன்.

திருவிளையாடற் புராணம்.

நாயகன் கவிக்குங்குற்ற நாட்டிய கழகமாந்தர்
மேயவத் தலத்தினோர்க்கென் வெள்ளறிவுரையிற்குற்ற
மாயுமாறரிதன் றேனுநீர் பிரித்தன்னமுண்ணுந்
தூயதீம்பால்போற்கொள்க சுந்தரன் சரிதந்தன்னை.

கவைக்கொழுந் தழனுச் சுவைகண்ட ஞானிமையோர்
சுவைக்கவின்னமுதாயின துளக்கமில் சான்றோ
ரவைக்களம் புகுந்தினிய வாயால வாயுடையார்
செவிக்களம் புகுந்தேறுவசிறியனேன் பனுவல்.

பாயவாரி யுண்டுவர் கெடுத்துல கெலாம்பருகத்
தூயவாக்கிய காரெனச் சொற்பொரு டெளிந்தோ
ராயகேள் வியர்துகளறுத்தால வாயுடைய
நாயனுர்க் கினிதாக்குப நலமிலேன் புன்சொல்.

அல்லையீ தல்லை யீதெனமறைகளுயன்மைச்
சொல்லினுற்றுதித்திளைக் குமிச்சுந்தரனுடற்
கெல்லையாகுமோ வென்னுரை யென்செய்கோவிதனைச்
சொல்லுவேனெனு மாசையென் சொல்வழி கேளா.

காஞ்சிப்புராணம்.

இழித்த சொற்புணர்த்தெளியனே னியம்பியகவியுங்
கழித்தவை வகையிலக்கணவழுவுக்குக் காட்டாப்
பழித்திடா தெடுத்தாளுவர்பல்வகைச் சுவையுங்
கொழித்த நாவினராகிய வழுத்தபுகுணத்தோர்.

எழுத்துப் போலியு மெழுத்தெனவாளுவரதுபோற்
புழுத்தநா யினேன் பிதற்றியசெய்யுட்போலியையும்
பழுத்தகேள்வியோர் கைக்கொள்வரென்பதுபற்றி
விழுத்தநாணினேன்சிவகதைவிளம்புதற் கிசைந்தேன்.

நெறிவழாவுமை பூசனைபோனெறி பிறழ்ந்தோ
னெறிதருங் கலுங்கைக் கொளுங்கச்சி யெம்பெருமாற்
கறிவின்மேலவர்காப்பியப்பனுவல்போலறிவின்
குறிபிலேன் கவிப்புன் சொலுங்கொள்வது வழக்கால்.

கம்பராமாயணம்.

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

நொய்தி னுய்யசொன் னூற்கலுற் றேனை
வைதவைவின் மராமர மேழ்தொளை
எய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே.

வைய மெண்ணை யிகழ்வு மாவெனக்
கெய்தவும் மிதியம் புவதியாதெனில்
பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே.

துறையடுத்த விருத்தத் தொகைக் கவிக்
குறையடுத்த செவிகளுக் கோதில் யாழ்
நறையடுத்த வசுண நன்மாச் செவிப்
பறையடுத்தது போலுமென் பாவரோ.

முத்தமிழ்த் துறையின் முறைபோகிய
உத்தமக் கவிகட் கொன்றுணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ.

அறையு மாடரங்கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச் சருங் காய்வரோ
இறையு ஞான மிலாதவென் புன்கவி
முறையி னானுணர்ந் தாரு முனிவரோ.

தேம்பாவணி.

முறையடுத்தருளுளா லோருண் மூழ்கிய வுவப்பிலன்ன
துறையடுத்தள்ளியுண்ணுந் துணிவிலானென்னை நோக்கிற்
குறையெடுத்தனை யென்றன்னோர் கொடுஞ்சினத் துருக்கனன்றோ
பறையெடுத் துலகங் கேட்பப் பழித்தெனை நகைக்கனன்றோ.

வண்டமிழினிதிற் கேட்டமடக் கிளிகிளற்றும் புற்சொற்
கொண்டமிழ்ந் துரைப்பநூலோர் குறையெனக் கேளார்கொல்லோ
வுண்டமிழ்தமிழ்ந் தாலிலன்ன வுலகொருங் காஷ்வாள்தெருன்ன
பண்டமிழ் துண்டியான் புற்பாவொடுக்கக் கேட்பார்.

வருந்திய நசையாளனும் வரைந்தவைவரைந்து காட்டத்
திருந்திய தமிழ்ச்சொல்லில்லாற் செவிபுலன்கைப்ப நல்லோர்
பொருந்திய குறைகளைக்கிற்பணர்ந்த டட்கலத்தைப்பாரா
தருந்திய வமுதுநன்றேலருத்தியோடருந்தல் செய்வார்.

பிரபுலிங்க லீலை.

அடலுறுமல்லமனரிய சீரொடு
படுதலினயந்து பாராட்டும பண்முறை
மடனிகு முலைகமென் மொழியை வசதவர்க்
கடலினுமூழ்குவர் காலமொன்றினே.

அரிச்சந்திர புராணம்.

நீர்கொள்வார் பாலோடு நேருற்றாற் பதர்கொள்வார் நெல்லோ
டுற்றால்
நார்கொள்வார் பூவுற்றால் வேர்கொள்வாரதிற் சிறிது நறையுண்
டாயின்
சீர்கொள்வார் புன்சொல்லுஞ் செஞ்சொல்லுஞ் சேர்ந்தொன்றிற்
சேராப்புன்சொல்
யார்கொள்வா ரென்பது சற்றறியாமற் சிறியேனு வரைக்கின்
றேனே.

புருடனார்க் கேந்திழையார் பொருளாபபதெனப் பிறர்தம்
பொருளை வெளவுந்
திருடனார் மேலவருக்கறமுரைப்பதெனச் சிறிய தெள்கு துள்
ளிக் [குக்
கருடனார்க்குப் பறவைகற்பிப்பதெனவனந்தங் கண்ணுளார்க்
குருடனார் வழிகாட்டலெனப் பெரியோர்முன் சிறியேன் கூற
லுற்றேன்.

தண்டலையார் சதகம்.

வள்ளுவர் நாலாதிபல நூலிலுளவரும் பொருளை வண்மையாக
வுள்ளபடி தெரிந்துணர்ந்த பெரியவர்கண் முன்னுமொருவன்
போலப்

பள்ளமுது நீருலகிற் பரவுபழமொழி விளக்கம் பரிந்துகூறல்
வெள்ளைமதியினன் சொல்லத் தெருவதனி லூசிவிற்கும் வினைய
தாமே.

சைவ சமயநெறி.

தேசிகனைக்காற்றுமிரந் தீருமுயிர்க் கிந்நூலி
னாசறுஞ் சொல்லாய்ந்தவர் நோக்கார்.

நளவெண்பா.

வெந்தறுகண் வேழத்தை வேரிக்கமலத்தின்
தந்துவினாற்கட்ட சமைவதொக்கும்-பைந்தொடையில்
தேன்பாடுந்தார் நளன்றன் றெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்றவிது.

குசேலோ பாக்கியானம்

சனகடன் முகிலைப பார்த்தெ னிருவரைக்
கழிபயிமன்னுயிர்க கெலாமினிதாப
னையெனக் கேளாதெனினுபம
முகிலே புரியுமென் செய்யுளின் புகரை
நினைவரு முழுதா லுணர்ந்தவரகற்றி
நீடுல கினுக்கினிதாக்க
வனையவையான் செகாதிருந்திடினு
மதுபுரிந்திடல வர்க்கியல்பே.

திருக்குற்றால புராணம்.

புகழ்தரு மறைக்குறோலோன் புடார்ச்சுன புரத்தின்மேன்மை
நிகழ்தரநிகழ்த்தவல்லை நீசொலென் றெனது நெஞ்சே
யிகழ்தரவெழுந்தநாணு மிரசையுந் தினம்போராடி
யகழ்தர நாணந்தோற்ற தாசையே வென்றதம்மா.

ஔவையார்.

நல்லார்பிறர்குற்றநாடார் நலந்தெரிந்து
கல்லார்பிறர்குற்றங் காண்பரோ—அல்லாத
வென்போல்வாரென்னை யிகழ்வரோ வென்கவிக்குப்
பின்பாரோ சொல்வார் பிழை.

சீறு புராணம்.

படித்தலத்தெழுகடல் குலகிரி நிலைபதற
வெடுத்துவீசிய சண்டமாருதத் தினுக்கெதிரே
மிடித்துநொந்த சிற்றெறும்பொரு மூச்சுவிட்டதுபோல்
வடித்தசெந்தமிழ்ப் புலவர்முனியான் சொலுமாறே.

அடியடித்தொரும் வழுவலால் விதிவிலக்கறியேன்
படிபடித்தசெஞ் சொற்புலவோர் முனம்பகர்தல்
இடியிடித்திடுமாரவாரத் தினுக்கெதிரோர்
நொடிநொடிப்பது போலுமொத்திருந்த தென்னூலே.

கந்த புராணம்.

ஆனசொற்றமிழ் வல்ல வறிஞர்முன்
யானுமிக்கதை கூறுதற்கெண்ணுதல்
வானகத்தெழும்வான் கதிரோன்புடை
மீனிமைப்ப விரும்பிய போலுமால்.

குற்றமே தெரிவார் குறுமாமுனி
சொற்றபாவினு மோர்குறை சொல்வராற்
கற்றிலாவென் கவிவழுவாயினு
முற்றுநாடிவல்லோ ருய்த்துரைக்கவே.

நீதி நூல்.

வெயிலினைச் சோதிசெய்வான் விளக்கிடல் போலுங்காகங்
குயிலினுக் கிசையுணர்த்துங் கொள்கையே போலுநட்ட
மயிலினுக் குணர்த்துங் கானவாரண மெனவும்யாவும்
பயிலுல கிற்குநீதி பகரயான் றுணிவுற்றேறல்.

பானுவின் கதிரையுண்ட பளிங்கொளி செய்தல்போலும்
வானுலாங் கொண்டல்பெய்யு மழையினைத் தழையிற்றாங்கித்
தானும்பெய் தருவைப்போலுந் தமிழொரு மூன்றுமாராய்ந்
தானுவார் கவிசொல்வோர் முன்னறிவிலேன் பாடலுற்றேன்.

முடவரே யாடவந்தர் முன்னின்று பார்த்துவக்கத்
திடமொடு மூகர் பாடசெவிடர் கேட்டதி சயிக்கக்
கடலுல கினிற்கண் டென்னக் கனவினுங்கலையைத் தேரா
மடமைமி[illegible]யனுலகநீதி வகுத்திடத் துணிந்தேன் மன்றே

பயன்கொள்வோரதனை நல்கும் பசுவுருவிலதென் றோரார்
வியன்சினைவளைவு நோக்கார் விளைந்ததீங்கனி பறிப்போர்
கயங்கொள்சேறகற்றித் தெண்ணீர்க்கைக் கொள்வாரென்னூலி
னயங்கொள்வதன்றிப் பாவினவையை நோக்கார் மேலோரே

வேலைவாயுண்ட நீரை மேகஞ் சிந்தினுமே சிந்துங்
காலிடைக் கொண்ட நீரைக்கழனியக் காற்கு நல்கும்
பாலர்கற்றவையாசான்பாற்பகர்வர் யானு முணர்ந்த
சிலர்பாற்கற்ற தன்றோர் செவியுற நவின்றேனம்மா

வழுவொழித் தாளன்மேலோர்வழகெனலாவிந்நூலைத்
தழுவுமின்னனவன் னோத்தாழ்ந் திடன்மிகை கீழோரைத்
தொழுதிரப்பினு மாசொன்றேதுற்று வரவமைவாளா
வழுதிரததலிற் பேறில்லை யாதலின்மௌன நன்றால்.

சிறப்புப்பாயிரம்.

புதுவை வித்துவான்,

மகா-ள-ள-ஸ்ரீ பு. அ. பெரியசாமிப்பிள்ளை

அவர்கள் இயற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

தேன்மலர்ப் பொகுட்டு நான்முகப் புத்தேள்
படைத்தவிவ் வுலகிற் பரனரு டன்னாற்
சேக்கிழார் பெருமா னிருவாய் மலர்ந்த
புகழுறும் பெரியர் புராணத் தொன்று
வறைகா ரைக்கா லம்மையார் புராணந்
தனையா தரவாத் தான்கொண் டதற்கே
யரும்பொரு ளுரைக்குறிப் பாங்காங் கெழுதியு
மிலைமறை காயெனப் பலநூ லதனு
ளருகிக் கிடக்கு மருஞ்செயுள் பலவு
முவமை கொடுத்து மொருநூ றொகுத்துப்
பலநூல் களினும் பழகிய வறிவையிவ்
வொருசிறு நூலே தருமெனக் கருதி
யச்சிட் டருளின னன்னவ னியாரெனிற்
கடலெடுத் தெறியுங் குடவளை முத்த
மறுகெலா நிறைந்து மடவார் நடக்கப்
பருக்கைக் கற்போ லுறுத்தலிற் சிவப்புற்
றடிமலர் பொருஅ தஞ்சி யொதுங்கு
மதுவையூற் றும்பொழிற் புதுவையம் பதியான
சாற்றரு மவோக்காத் தம்பிப் பிள்ளையு
மெய்ம்மை சேர்கற்பி னம்மணி யம்மையு
மிழைதவக் கடலி லெழுந்த சந்திரன்

மழையென வழங்குஞ் செழுமலர்க் கரத்தான்
பிராஞ்சுப் பாடையிற் பெரிதும் வல்லவ
னமிழ்தென விளங்குந் தமிழெனப் படுமோ
ராழ்கட லதனுண் மூழ்கிய புலவன்
பற்பல பாடை பயின்ற நாவலன்
அன்புஞ் சாந்தமு மருளு மீகையு
மென்பன வோருரு வெடுத்தெனப் பொலிவோன்
புருஷோத் தமனெனப் புகலொரு பெயர்க்குத்
தக்கசற் குணங்கள் சார்ந்திடப் பெற்றோன்
மிக்க "ஓப் பிசியே தக்கா தெமி" யெனுந்
தீத்தர் பெற்றுத் திகழும் பெருமையான்
நலமார் புதுவை நகர்க் கொலேஜ் கல்வே
திரெக்தே ராகச் சிறக்குஞ் சீமான
புகன்றிடு மென்பாற் பொன்போ லன்பன்
தம்பியென் னுந் தனிப்பெய ரோனே
யன்னவன் றனக்கு மன்னுமிவ் வுலக
மென்னகைம் மாறிங் கிழைத்திடு மம்ம
வாழ்குக வன்னோன் மனைவியக் களுடன்
மங்கல மாக வாழ்குக மன்னோ.

புதுவைக் கவர்ன்மெண்ட் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
மகா-ள-ள-ஸ்ரீ சி - பங்காருப்பத்தரவர்கள்
இயற்றிய

ஆசிரியப்பா.

உலகெலா மென்ன வொருவ னடியெடுத்
துதவிடப் பெற்றவ் வுத்தம னருளாற்
சேக்கிழார் பெருமான் றிருவாய் மலர்ந்த
புரைதபு பெரியர் புராணத் தொன்று
மிக்கெழில் பெறுகா ரைக்கா லம்மையார்

புராணந் தனக்குப் பொருந்து மிடந்தொறுஞ்
சொற்சுவை பொருட்சுவை துதைந்தழ குறறுப்
பண்ணா லதனுட் பாவிக் கிடக்கு
மருஞ்செயுள் பற்பல வாங்காங் கெடுத்தே
யுவமை கொடுத்து முறைக்குறிப் பெழுதிய
மணிகா ரைக்கா லம்மையார் புராண
வரும்பொரு ளுவமைச் செய்யுட் டிரட்டென
வொருநா லொருகுத்தனைத யுளக்கனி வதனு
னச்சிட் டுலகினுக் கருளின னம்ம
அன்னவ னியாரெனி னறைகுதுங் கேண்மோ
கடலொரு புடையினிற் கல்லெனக் கறங்கத்
தடம்பணை யொருபுடை யிடம்பட வுடுத்துப்
பொற்றேர் புனைந்தென வுற்றபூ வரசு
வளர்ந்திரு மருங்கு மலர்ந்து வயங்கப்
பீடுபெற வகுத்த மாடமலி மறுகின்
எழின்மிகப் படைத்த பொழில்சூழ் புதுவைப்
பதிக்க ணறிஞர் மதிக்க வாழ்வோன்
பெரும்புகழ் பூண்டு பிறங்கு மவோக்காத்
தம்பிப் பிள்ளை தவத்தினிற் றோன்றியிப்
பெருங்குணக் குன்றைப் பெற்றவன் றந்தை
யென்றோற் றான்கொ லென்றோற் றான்கொ
லெனப்புவி யெடுத்தெடுத் தியம்பிட நின்றவன்
மெய்ம்மை பொறுமை மேன்மை யடக்க
மன்புகண் ணோட்ட மாதிய வாகப்
பொருந்துசற் குணத்தாற் புருஷோத் தமனெனப்
பகரும் பாக்கியம் படைத்தவ னம்ம
தன்னைப் போலவே மன்னிய பிறருங்
கலைக்கடன் மூழ்கிக் களித்திடு பாக்குக்
கங்கணங் கட்டிய கருணைக் குன்றம்
பிறங்கு மினிய பிராஞ்சுப் பாடையில
வரம்பறு கல்வி சிரம்பப் பெற்றவன்
அமிழ்தினு மினிக்குந் தமிழ்ப்பாடையினு

யிலக்கிய விலக்கண மலக்கறப் பயின்றோன்
கற்றவர் புகழூங் கல்விக் களஞ்சியம்
கணிதா டவியிற் களிக்குஞ் சீயம்
பரோப காரம் படைத்த சிந்தையன்
குணமெலா மோருருக் கொண்டெனப் பொலிவோன்
பொன்னே யன்ன வென்னரு நண்பன்
தக்க ‘‘ஒப்பிசியே தர்கா தெமி’’ யெனு
மெடல்பெற் றிட்ட விழுமிய சீரான்
நிலவும் புதுவைக் கலவைக் காலேஜ்
திரெக்தே ரென்னத் திகழ்ந்திடுஞ் செம்மல்
தக்கோர் புகழுந் தம்பி யென்னு
மெழிற்பெயர் கொண்ட விருந்தவத் தோனே
பன்னூல் கலையும் பயின்ற வறிவை
யிந்நூ லொன்றே யினிது தருதலின்
செந்தமிழ் பயில்வோர் சிரத்திற் கொள்வரால்
ஆதலி னதற்கு நன்றி யறியக்
காசினி யென்றுங் கடமை பூண்டதால்
வாழிய வன்றோன் மனைவி மக்கள்
வாழிய வாழிய வாழிய மன்றோ.

காரைக்கால் கவர்ண்மெண்ட் பாடசாலைத்
தமிழ்ப் பிரதம பண்டிதர்
மகா - ள - ள - ஸ்ரீ. பா-வெங்கடராம நாயடு
அவர்கள் இயற்றிய

நிலமண்டில வாசிரியப்பா.

ஏரார் பசுந்தோட் டிலகுறு செங்கேழ்
வாரார் சீதமென் வள்ளையங் கொடிமிசைப்
பாய்தலிற் பம்புறும் பவளக் காடென
ஏய்வுற நுண்டா தெண்டிசை போர்ப்பப்

புதுமணங் கமழ்ந்து பொங்கொரு கோடி
மதுகர முரலுமொண் வனசப் பொகுட்டிடைத்
திருமக ளிலங்குந் தெய்வதப் பொய்கையங்
கரைவயிற் கங்குல் கதிரவற் கொதுங்கிக்
குடிபுகுந் தென்னக் குளிர்நிழ லுறுசெந்
தொடைநறூ லூற்றுந் தோமறுதேமாந்
தண்டலை யினேறத் தொண்டொடி மகளிர்
பண்டொடர் பாடலின் வண்டல் பயிலவக்
கோட்டிடை யிருந்துவாழ் கீதக் குயிலெலாஞ்
சேட்டிளம் பல்லவச் செங்கதிர் சுலவுறக்
கோதுதோ றுதிர்ந்தக் கொம்பனூர் கான்மரைப்
போதின்வாய் வீழ்வுறும் பொற்பார் மாண்பது
மின்னென விளங்குசெம் மேனியம் மகளிர்
கின்னரக் குரனலங் கேட்டுமற் றெய்துவான்
அனலிடை மூழ்கியோ ரருந்தவ மியற்றினன்
மனமுவந தர்ச்சனை வழிபடு மாறெனுஞ்
சவியது பொருந்திச் சார்வுறு மேதிசெய்க்
குவளைகண் மிதிப்பக் கொப்புளித் தெழுநறுக்
கோரைக் காலெலாங் குதிகொளப் பாயுமூர்
காரைக்கா லெனுங் கவினக ரென்ப
அத்தலந் தன்னி னவதரித் திடுசிவ
பத்திசே ரடியார் பவந்தெறு சுசீலை
புனித வதியெனும் பொங்குசீ ரம்மையார்
நனிபுகழ் விளக்குமோர் நற்பெரும் புராணத்
தாங்காங் குள்ள வற்புதப் பொருட்டெலாம்
பாங்கார் வள்ளுவப் பனுவன முதலவாம்
பண்ணூற் கடலுட் பாந்து கிடந்தநன்
மின்னூர் நித்தில மேற்கோ ளெல்லாந்
துரீஇத் தொடுத்தனன் றுலங்குநூற் புலவோர்
மரீஇக் களித்திடு மாறுவா னமுதென
வீங்குநீர்ப் பிறழ்வுறு மென்சேல் கைதையம்
பூங்குறும் பராகப் பொடிமெய் பொழுதத்

தாம்பலம் பசுமுகை யசைதலிற் சாரையாம்
பாம்பின் றலையெனப் பரந்துநன் றோங்கிடைப்
பொன்னார் புரிசைப் புதுவையம் பதியுளா
னன்று வலரெலா நவிலுறு சீர்த்தியான்
விண்மணி யாகும் வெயிலவன் போன்றொளிர்
வெண்மணி யென்னுமோர் விரிபுகழ்க் குலத்துளான்
றும்பிசூழ் குவளையந் தொடையல்சேர் மார்பினான்
தமபிப் பிள்ளையின் தவத்தினி துதித்தோன்
சற்குண சிகாமணி தமிழனுஞ் சலதிதோய்
விற்பனன் வேறுள கலையினும் விதரணன்
மந்தர கிரியெனு மணிநெடுந் தோளுடைச்
சுந்தரன் றிருமுகந் தோய்வுறு விலாசன்
மன்னுமா நிதியுளான் மன்னுபே ருயிரெலாந்
தன்னுயிர் போலெனுந் தயாநிதி புருஷோத்
தமனெனுந் தம்பிப் பிள்ளையாம
எமதுநண் மணியெனு மிருந்தகை யோனே.

புதுவை-ஸ்ரீ சுவேதபதுமாசன அக்ஷரசாலைக்கதிபர்
ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீநிவாச ஆறுமுகம்பிள்ளை
யவர்கள் இயற்றிய

நேரிசை வெண்பாக்கள்.

பொன்மருவு கின்ற புதுவையினிற் றம்பியென [பன்
மன்பெயர்கொண் டோன்மகவா வந்துதித்தோ—னென்னனன்
றந்தையறி வேதநயன் றன்னறிவ தென்னுஞ்சொன்
னந்தாவ ணங்காத்தா னால். (1)

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்லைச்—சகமதனிற்
பொன்றுமா னின்றிடற்காப் போந்த முயல்வனந்த
நன்றாற்றி னான்கனிவி னால். (2)

உத்தியோகத்திற்கா வுட்கிளர்லோ டேப்ராண்மை
யித்திசையி ேனார்புகழ வேகற்றே—சத்திகொடாள்
வார்கழகத் தாசானு மன்னினான் றந்தைதனைப்போ
லோர்மதிப் பான்றோரா லுற்று. (3)

இத்தகையன் மிக்க வினியதமிழ் நூற்பலவாய்ந்
துத்தமகா லம்போக்கு வோன்றேயவ—பத்திமிக
வுள்ளான் புருஷோத் தமனென் றுரைபெயரைக்
கொள்வோனண் பன்பெரியர்க்கு. (4)

காரைக்கா லம்மை கருதரும்பு ராணத்தின்
சீரைவிளக் கப்பலநூ றேடியே—நேரையுறு
பாவனந்தஞ் சேர்த்துப் பதிப்பித்தா னச்சதனில் (5)
யாவருஞ்சொல வான்சுகுணனும்.

காரைக்கால் கவர்ண்மெண்ட் பாடசாலைத் தமிழ்ப்

பண்டிதர் ம-ா ா-ஸ்ரீ முத்துவேல் முதலியார்

அவர்கள் இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

உலகுபுகழ் புதுவைநக ருறுவே ளாள
ருயர்குலத திற் றம்பிதவத் துதித்த தோன்றல்
அலகிலருட் குண முடையா னணிகா ரைககா
லம்மையார் புராணத்தி லரும்பொ ருட்குப்
பலகலையாய்ந் தருஞ்செய்யுள் பலமேற் கோளாப்
பகர்ந்தச்சிட் டுலகினுக்குப் பரிந்த ளித்தான்
புலவர்கள்சொற் கொடையுடை யான் கலைவிநோதன்
புருஷோத்த மத்தம்பிப் புலவன் மன்னே.

காரைக்கால் - கவர்ன்மெண்டு மன்னவன் பாடசாலைத்திரெக்தேர் ஸ்ரீமத் ஆ. தியாகராஜ ஐயர் அவர்கள் இயற்றிய

எண்சீர் விருத்தம்.

பூமணக்கும் பொழில்களெலாம் புயன்மணக்கும் புதுவா
புரிமணக்குந் தம்பியையனும் புகழ்மணக்கும் புலவன்
பாமணக்குந் தமிழ்க்கலையாம் பரவையினுட் படிந்து
பயன்மணக்கு மருஞ்செய்யுள் பலவெடுத்துக் காட்டி
ஆமணக்குங் காரைக்கா லம்மைபுரா ணத்தி
னரும்பொருளை நனிவிளக்கி யச்சிட்டே யீந்தான்
மாமணக்கு மதுபடிக்க வாய்மணக்குங் கேட்க
மகிழ்ந்தெடுக்கச் செவிமணக்கு மணக்குங்கை மன்னே

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

திருத்தொண்டர் புராணமென்னும்

பெரியபுராணம்.

முதற்காண்டம்

திருநின்ற சருக்கம்.

காரைக்காலம்மையார் புராணம்.

ஒருபோத கொச்சகக்கலிப்பா.

1 மானமிகுதருமத்தின் வழிநின்று வாய்மையினி
லூனமில்சீர்ப் பெருவணிகர்குடிதுவன்றி யோங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானன்மிசை யுலவுவளம் பெருகுதிருக் காரைக்கால்.

"கொண்டேகு" மென்றும பாடபேதமுண்டு.

இப்பாட்டில் ஆசிரியர் தலத்தினை 'ஓங்குபதியென்று விசேடித்ததானது,.

" தண்ணீருங் காவிரியே தார்வேந்துஞ் சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே—பெண்ணாவா
ளம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு."

என்ற ஔவையார் திருவாக்கில் மண்ணாவதுஞ் சோழமண்டலமே யென்று சிறப்பிக்கப்பட்ட சோழநாட்டின்கண் உள்ளதனாற்போலும்.

"வளம்பெருகு திருக்காரைக்கால்" என்றமையான்
மணிமேகலை.

அமர முனிவன கத்தியன் றனாது
கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவை

கோனிலை திரிந்து கோடை நீடினுந்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை.

யாயகாவிரியாறே யீண்டு அரசலாறெனப் பாய்ந்து பெருவளப்பந் தரு தலைக்கொண்டு இங்ஙனம் உரைத்தார்போலும் ஆசிரியர். காவிரிநதியின் வளத்தைப் பின்வருஞ் செய்யுட்களாலறிக.

பத்துப்பாட்டு.

பொருநராற்றுப்படை.

“ எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவுங் கோடெரி நைப்பவு
மருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானங் கடற்கோண் மறப்பவும்
பெருவற னாகிய பண்பில் காலையு
நறையு நரந்தமு மகிலுமாரமுந்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குரைபுனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடு கோடாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடு.

பட்டினப்பாலை.

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி

வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனி.

"பெருவணிகர் குடிதுவன்றி யோங்குபதி" என்று வாணிபத்துக் குரியவர்களான வைசியர்களை விதந்து கூறியவாற்றான் அது இக்காலத்தி லிருப்பதுபோலவே முற்காலத்தும் வாணிபத்திற் சிறந்திருந்த தென்பதுமட உணரப்படும்.

"மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில் சீர்ப்பெரு வணிகர்" என்றது.
"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம்பேணிப
பிறவுந் தமபோற் செயின்" என்றதிருக்குறளின்படிக்கு.

பத்துப் பாட்டு.

பட்டினபபாலை.

புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்பநாடிக்
கொள்வதூஉ மிகைகொளாதுகொடுப்பதூஉங்குறைபடாது
பல்பண்டம் பகர்ந்து வீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கை.

குசேலோபாக்கியானம்.

"அன்னியர் பொருளுந்தத்த மரும்பொருளென்ன வுள்ளத்
துன்னியொன்ற நந்தமாகவு ஞற்றும் வல்லபத்தாற் கண்ட
வென்னரு மிரும்பூதெய்து மெழின்மிகும் வணிகரென்று
மன்னிவாழ் வெய்துமிக்க மறுகுகள்பலவயங்கும்."

என்ற செய்யுட்களிற் கூறியுள்ளவாறு கொடுப்பது குறைவுங் கொள்வது மிகையுமாகாமற் பிறர்பொருளையுந் தம்பொருளைப் போலக்காத்து வியாபாரஞ் செய்தலாகிய நடுவு நிலைமையினிற்றன்முதலிய தருமத்தால் வருங் கீர்த்தியுடைமை நோக்கியென்க,

பெருவணிகர் குடியென்றதும் ௩-ம் செய்யுளில் வணிகர் பெருங்குலம் என்றதும் அம்மையார் இப்பர், கவிப்பர், பெருங்குடியர், என்னும் வணிகர் மூன்று பாலருள் பெருங்குடியர் வகுப்பில் அவதரித்ததை நோக்கிவந்தன போலும். வணிகர் மூவகையரெனப்படுதற்பின் வருஞ் செய்யுளானறிக.

சீவசம்போதனை.

'இப்பர் கவிப்பர் பெருங்குடி வாணிகரென்
றொப்புடைய மூவருமா கருங்காறு—றப்பில
மதியடியே றுணரிசை மேநாகினர்கள் காணு
நிதியுடையா ராவார் நிலத்து.'

2 'வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்தனார் தவத்தா
லங்கவர்பாற் றிருமடந்தை யவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார்.'

தனதத்தனார் தவத்தால் என்று அம்மையாரைப் பெற்றமையை விசேடித்தது:

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்லபிற"

என்னுந் திருக்குறளின்படி அவரையறி வறிந்த மக்கட்பேறாகவடைந்த வருமை நோக்கி யென்க. இங்ஙனமாய பேற்றினருமையைக் கூவத்துப் புராணம்.

"மெத்துகின்ற விழுமிய சாதியையா
டெய்த்த லின்றியிருமை யின்புந்தரும
புத்திரற் பெறும புண்ணியம் வாழ்க்கைதா
னதத்தவத்தினு மாறறச் சிறந்ததே"

என்ற செய்யுளானும இப்பேற்றைக் குறித்துத் தனதத்தனார் தவஞ்செய்ய விழைந்தமை யாவருக்கும் ஒப்பமுடிந்த தென்பதைக் காசிகாண்டத்தில்,

"எத்திருவுடையரேனு மின்கனி மழலைச் செவ்வாய்ப்
புத்திரனிலாதோ ரென்றும் பொறியில ராயவாற்றுன்
மெய்த்தவம் புரிந்துமைந்தர்ப் பெறுவதே விழைவர்யாரு
முய்த்தநன் மகவுமோரேழ் பான்மையாபுணர்ப்பர்மேலோர்.

என்று வந்தமையானும், அங்ஙனமாய தவமுடையார்க்கே அரும்பெறன் மகப்பேறு உண்டாமென்பதைத் திருவிளையாடற்புராணத்து

"தருமமா தவத்தின்பேறு வருத்தபா தவத்தின் பேறு
பெருமைசால் காமநோற்ற பெருந்தவப் பேறு வெய்தற்
கருமையாம வீடுநோற்ற வருந்தவப் பேறு விந்தத்
திருமகனென்று தமமில் விழுய்மகிழ் சிறப்பச் சென்றார்."

"பொருமித முனக்கேன் பிள்ளைப் பேறற்றபாவிநீ யென்
னருமை நன்மகளைலன்றே விருமையு மடைவா யென்னப்
பெரிது நாணடைந்து மேலைக்காயினும் பிள்ளைப்பேறு
தருதவம் புரிவே னென்றுத் தனபதிதவமேற் செல்வான்."

என்று கூறப்படுவதனானுமறிக. பொங்கியபேரழகென்றது, இயற்கையாலுஞ் செயற்கையாலு மமைந்து பலவகைப்பட்ட ◦ வமங்களுக்கிடமாய் விளங்கும் அழகின் பெருக்கம். அதன் றிறத்தைப் பின்வருஞ் செய்யுட்களானறிக.

சிலப்பதிகாரம் மனையறம் படுத்தகாதை.

குழவித் திங்களிமையவ ரேத்த
வழுகொடு முடித்த வருமைத் தாயினு
முரிதி னின்னோ டுடன்பிறப் புண்மையிற்
பெரியோன் றருக திருநுதலாகென
வடையார் முனையகத் தமர்வேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண் டாகலி
னுருவி லாள னொருபெருங் கருப்பு வி
லிருகரும் புருவ மாகவீக்க
மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலிற்
றேவர்கோமான் றெய்வக் காவற்

படைநினைக் களிக்கவத னிடைநினைக் கிடையென
வறுமுக வொருவனோர் பெறுமுறை யின்றியு
மிருமுறை காணு மியல்பினி னன்றே.
யஞ்சுடர் நெற்றி யொன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்க ணிரண்டா வீத்தது
மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞைநின்
சாயற் கிடைந்து தண்கா னடையவு
மன்ன நன்னுதான் மென்னடைக் கழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவு
மளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழு மமிழ்துங் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியு
மடநடை மாதுநின் மலர்க்கையி னீங்கா
துடனுறை வுமரீஇ யொருவா வாயின
நறுமலர்க் கோதைநின் னலம்பா ராட்டுநர்
மறுவின் மங்கல வணியே யன்றியும்
பிறிதணி யணியப் பெற்றதை யெவன்கொல்
பல்லிருங் கூந்தற் சின்மல ரன்றியு
மெல்லவிழ் மாலையொ டென்னுற் றனர்கொ
ணான நல்லகி னறும்புகை யன்றியு
மான்மதச் சாந்தொடு வந்ததை யெவன்கொ
றிருமுலைத் தடத்திடைத் தொய்யி லன்றியு
மொருகாழ் முத்தமொடுற்றதை யெவன் கொ
றிங்கண் முத்தரும்பவுஞ் சிறுகிடை வருந்தவு
மிங்கிவை யணிந்தன ரென்னுற் றனர்கொன்
மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
யரும் பெறற்பாவா யாருயிர்மருந்தே
பெருங்குடி வாணிகன் பெறுமடமகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
வலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ.

பிரபுலிங்கலீலை மாயை பூசைகதி.

வீரவேள் வளையாத செங்கரும் பவன்வில்லி
னாரிமேலிடா மலர் மறுவிலா நகைமதியங்
காருறாத மின்கடற் பிறவாத வின்னமுதம்
வேரிலாத பூங்கொடியென விளங்கினண் மாயை.

3 'வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
னணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காத றதும்பவரு மொழிபயின்றார்.'

"தணிவில்பெரு மனக்காத றதும்பவரு மொழிபயின்றார்" என்று மழலைச் சொல்லால் ஒழிவிலா மகிழ்ச்சி விளைந்தமையை விளக்கினர். இங்ஙனம் விளைதலைத் திருக்குறளில்.

"மக்கண்மெய் தீண்ட லுடற் கின்பமற்றவர்
சொற் கேட்ட லின்பஞ் செவிக்கு"

குழலினிது யாழினி தென்பதம மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்" என்றும

பாரதத்தில்

"கல்லாமழலைக் கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லாலுருக்கி யழுதோடித் தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சிமைந்த
ரில்லாதவர்க்கு மனைவாழ்வினினிமை யென்னும்"

என்றும்

தேம்பா வணியில்.

பானலங் கழைநலம் பகரியாழ் நலந்
தேனலங் கடந்தமென் குதலைத் தீஞ்சொலை
வானல முளம்படச் செவிகள் மாந்தினேல்
யானலங் குயிர்விட லினிய தாபரோ.'

என்றும்

நள வெண்பாவில்

"சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலு
மென்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாத செவி." என்றும்,

சீகாளத்தி புராணத்தில்

"அரிகொள் பொன்புனை கிண்கிணி தண்டையோ டணிந்த
தருண மென்றளிர்ச் சீறடித் தளர்நடைச் சிறுவர்
மருவருந் தமிசெவ் வாம்பல வாய் மழலையா முதம்
பருகிலாத செவிப்புழைபின் செவியெனப் படுமோ." என்றும்.

பிரபுலிங்கலீலையில்

"குழலுமியாழு மினியவெனக் கூறு வண்ணமென் கனிவாய்
மழலை மொழிந்து முடற்கின்ப மருவவோடிமேல் வீழ்ந்தும்
விழைபுமகிழ்ந்தின் புகவிளைமை விளையாடுந்தகருநறு சுவையடிசில்
செழியசிறுகையாலளைந்து துகுசெய்தாண் மேராக மீன்றோரை"
என்றும்.

நைடதத்தில்

"விம்மி மின்னுடை மருங்கொசிய வீங்கிய
கொம்மை வெம்முலை யிளங்குதலை மென்மொழிச்
செம்மைய வருமகப் பெறுதிலையேயார்க்
கிம்மையு மறுமையு மின்பமில்லையால்."

என்றும் வருவனவற்றாலுணர்க.

4 'பல்பெருகற் கிளையுவப்பப் பயில்பருவச் சிறப்பெல்லாஞ்
செல்வமிகு தந்தையார் திருப்பெருகுஞ் செயல்புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார் விடையவர்பா
லல்கியவன் புடனழகின் கொழுந்தெழுவ தெனவளர்வார.'

"தாதையார்'—"வளர்ந்தார்"

என்றும் பாடபேத முண்டு. செல்வமிகுதாதையா ரென்று விசேடித்தமையால், தனதத்தனருடைய செல்வப் பெருக்கின்றிறத்தைப் பின் வருஞ் செய்யுட்களிற் கூறியுள்ளவாறு விதந்து கூறினா ரென்க.

சீவகசிந்தாமணி.

விழுக்கலஞ் சொரியச் சிந்தி வீழ்ந்தவை யெடுத்துக் கொள்ளா
வொழுக்கின ரவர்கள் செல்வ முரைப்பரி தொழிக வேண்டா
பழுக்குலைக் கமுகுந் தெங்கும் வாழையும் பசும்பொ னாலு
மெழிற்பொலி மணியி னாலுங் கடைதொறு மியற்றி னாரே.

திருவிளையாடற் புராணம்.

செயிரிற் றீர்ந்தசெம் பொன்னினாற் றிண்ணிலைக் கதவம்
வயிரத் தாழுடைத் தவர்கடை வாயிலு மென்று
லயிரிற் றீர்ந்தபே ரறிஞரு மனையர்தஞ் செல்வத்
தியலிற் றுமென வரையறுத் திசைப்பதை யெவனோ

எரிக்கு ழும்பொறி யனையசெம் மணிகட ரெறிபொன்
வரிச்சு ரும்புநேர் மரகத முத்துவாள் வயிரம்
தெரிப்ப ருந்துகிர் சிந்தின செல்லுந ளொன்றுக்
கரிப்பர் கையகப் படுவன வாயிரத் திரட்டி.

“அறிவரு ளாதார வடக்கம் வாய்மைமெய்ச்
சுறவுநல் லொழுக்கமே தூய்மை யென்றிவை
யுறவொடு குழவியா முடன்வ ளர்ந்திட
பருவமு நமகிதன் மகள்வ ளர்ந்தனள்.”

என்று அக்கமாதேவியாரது வளர்ச்சியைச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறியவாறு அம்மையார் சிவநேசம் வளரத்தாமும் அழகுமுடன் வளர்ந்தா ரென்பாராகி “அக்கியவன் புடனழகின் கொழுந்தெழுவதென வளர்ந்தார்” என்றா ராசிரியர்.

5 வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
யண்டர்பிரான் றிருவார்த்தை யணையவரு வனபயின்று
தொண்டர்வரிற் றொழுதுதா யியர்போற்றத் துணைமுலைகள்
கொண்டுநுசுப் பொதுங்குபதக் கொள்கையினிற் குறுகினார்

“கொங்கைப் பொறையைக் கொண்டு மருங்குற் கொடிவாட
வங்கைக் குடநெய் பெய்தழ லென்ன வழகெய்தி

நங்கைக் கிணைகண் டிவ்வுலகெங்கு நாமமன்ன
மங்கைப் பருவ மன்னவினன் முற்றணைப் போகவி

வாதிற் கெதிரொன்று மொன்றெழுதல் போன்முலை வந்துற்றும்
பேதைப் பெண்போற் காமமுளத்திற் பிறவாமற்
பாதிப் பெண்மை யினனு மின்பப் பதிதன்னைச்
சாதிக் கெட்டாத நாதனைப் பாடுந் தலைப்பட்டாள்."

என்று அக்கமாதேவியாரது மங்கைப் பருவத்தைச் சிவப்பிரகாசசுவாமிகள் வர்ணித்தவாறு இங்கு அம்மையாரது மங்கைப் பருவத்தை "வடல் பயின் வனவெல்லாம்" என்ற செய்யுளால் ஆசிரியர் வர்ணித்துள்ளாரென்க.

6 நல்லவெண வுறுப்புநூ லவருரைக்கு நலநிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூறவரு மாட்சியினு
மில்லிகவாப் பருவத்தி லிவர்கண்மர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்.

"நல்ல வெணவுறுப்பு நூலவருரைக்கு நல நிரம்பி" என்றதனுற் சாமுத்திரிகா நூலுணர்ந்த பெரியோர்கள் இவ்வாறமைந்திருந்தால் நல்லனவென்று கூறும் முப்பத்திரண்டிலக்கணங்களும் புனிதவதியாரிடத்தில் அமைந்திருந்தனவெனப் பெறப்பட்டது. அவ்விலக்கண வியல்பைப் பின்வருஞ் செய்யுட்கள் சிலவற்றாலுந் தமிழ்க்காப்பியங்களில் நிரம்பிக்கிடக்கும் அளவற்ற பிறவற்றாலுமறிக.

கூந்தலின் சிறப்பு.

சீவகசிந்தாமணி.

எண்ணெயு நானமு மிவைமூழ்கி யிருடிருக்கிட்
டொண்ணறுந் துகிற்கிழி பொதிந்துறை கழித்தனபோற்
கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்
வண்ணப்போ தருச்சித்து மகிழ்வாருந் தகையவே.

அரிச்சந்திர புராணம்.

முகிலைவென் றறலைக் கடிந்துமை வலைத்தை
முனிந்துபொற் கடுக்கையை முடிக்கி

அகிறூம புகையுந் தகரமும பழுகு
மனை இப்பனி நீரிலே நனைந்து
பகலவ றுடைந்த மைசயினுல் வெளங்கிய
பலமலர்த் தாரணிந்த தவமே
புகலொசாக கருகி யிருபு ண்டாலித்
தெழுந்தன தெழுந்தா ல நறுபானா.

நைடதம்.

நீணிற முகிலைப் பசும்பொன் வலமை
நெடுந்திரை கொழித்தமிழ்தன் னறலை
பானலங் கொண்ட பணிமொழித் துவராயப
வாநெடுங் கரியபெரை கூந்த
றேனின முரைபு தாழ்தந்து தாழ்ந்து
சினைபலாத் தொடை பேதமை வேய்ந்து
தானமும் பூந்த காமந்த னி
னளிருன குழயிருந் தாதே.

கண்களின் சிறப்பு.

சீவகசிந்தாமணி.

வேலைவாய சிவலிய கடை சிவந்து கருமணிப்பா
பாலெந்தத்துப பதித்தன்ன பாயபாய்ப் புனிவமைந்து
மாலுறுபய மகிழ்செய்வ மாண்பினதுக படிர்தமுமே
போலகுணத்த பொருகயறகண் செவியுறப போந்தகன்றனவே

அருங்கயம விசும்பிற பாய்கு பனிச்சிறு சிரலை யஞ்சி
யிருங்கயந் துறந்து திங்களி டங்கொண்டு கிடந்த நீல
நெருங்கிய மணிவிற காப்ப நீண்டுலாய்ப பிறழ்வ செங்கேழ்ம
கருங்கய லலல கண்ணே யெனககி ரேபாக நிறைரே.

அரிச்சந்திர புராணம்.

மடலிளை கயலைக கணையை மென பிணையைக
காவியைக கருவிள மலரை

வடுவினைக் கொடிய மறலியை வலையை
வாளைவே றற்குநீண் டகன்று
கொடுவினை குடிகொண் டிருப்புறந் தாவிக்
குமிழையுங் குழையையுஞ் சீறி
விடமெனக் கறுப்புற் றரிபரந் துன்கை
வேலினுங் கூரிய விழியாள்.

நைடதம்.

குமிழ்மிசை மறிந்து குழையெதிர் நடந்து
கொலைகெழு தொழின் மறலியைப் பயிற்றி
யமிழ்தினின் விளைந்து நஞ்சினிற் கருகி
யையரி சிதறிமை தோய்ந்து
கமலமென் மலரை வனப்புகுத் தியவேற்
கண்ணிணை மான்பருந் துணைகளு
நமதெனக் கவர்ந்து கொண்டவேற் படையான்
றடங்கணின் செயலகவர்ந் தனவே.

முகத்தின் சிறப்பு.

சீவக சிந்தாமணி.

குழவிக்கோட் டிளம்பிறையுங் குளிர்மதியுங் கூடினபோ
லழகுகொள் சிறுநுதலு மணிவட்ட மதிமுகமுந்
தொழுதாற்கு வரங்கொடுக்குந் தொண்டைவாய்த் தாமுறுவ
லொழுகுபொற் றொடுமுகக்கு முருப்பசியை யுருக்குமே.

அரிச்சந்திர புராணம்.

செருக்குமோ கனசெந் திருமக ளுறையுஞ்
சேயிதழ்த் தாமரை மலரும்
பெருக்குமா மறைநா லுரைத்தநான் முகத்தோன்
பிறந்தசெங் கமலமும் வெள்க
முருக்குமாம் பலுமென் காவியுங் குமிழு
முல்லையும் வள்ளொடு மலர்ந்து

திருக்கிளர் கமல மிதுவெனச் செவ்வி
திகழ்வெயர் செறிதிரு முகத்தாள்.

நளவெண்பா.

செந்தேன் மொழியாள் செறியளக பந்தியின்கீ
ழிந்து முறிவென் றியம்புவார் — வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
யேவாளி தீட்டு மிடம்.

இடை யழகு.

சீவகசிந்தாமணி.

அகிலார் புகையலாற் சாந்தணியாள் பூசசாரச் செல்லாள் செல்லிற், பகமேல் பகைவளர்த்த பாவைசிறு நுசுப்பொன் றுண்டே பாவ, மிகமேலங் கிளமுலைமேற் சாந்தெழுதி முத்தணிந்து பூவுஞ் சூட்டப், பு நிமேலந்து பின்பருங்குன் மெய்குழற்ற யிது கண்டு முளமே பாவ.

கொடியார் குளிர்முத்தஞ் சூட்டி வைத்தார்
கொல்வாரை குங்குமச்சே றட்டினார்க
ளடிசார்ந்து வாழ்வாரை யம்முலைகாடோ
யழித்திடுமேற் றமே யழித்திடுகவென்
றொடியாத மாத்திரையா லுண்டேநுசுப
பிருந்துகாண் பாருமுள ரேசெங்க
ணெடியான் மகன்சிலைபு மார்புவைத்த
நிழன்மதியோ வாண்முகமோ நோக்கிக்காணீர்.

அரிச்சந்திர புராணம்.

அறநதிகழ் தவமு மகிலமு மிதனை
லழியுமேன் றயன்படைத் திலனே
சிறந்தவேல் விழியை முன்படைத தயர்ந்து
செங்கரஞ் சோர்ந்ததோ திகைத்து
மறந்ததோ கரந்து வைததோ களப
வனமுலைப பொறைசுமந் துருகி

இறந்ததோ வுளதோ வில்லையோ வினிமேற்
செய்ததோ வறியொணா திடையே

நளவெண்பா.

என்று நுடங்குமிடை யென்னாமே யொழுகு
நின்ற கவிகை நிழல்வேந்தே — யொன்றி
யறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து.

நடையழகு.

சீவகசிந்தாமணி.

சீறடிய கிண்கிணி சிலம்பொடு புலம்ப
வேறுபடு மேகலைகள் பொலமின்னு மிழற்றச்
சேறுபடு கோதைதிளை வண்டுகிளை பாட
நாறுமலர் கொம்பு நடை கற்பதென வந்தாள்

அரிச்சந்திர புராணம்.

கமுகபூ மலருங் கலைவாய் மழுங்குங்
கதிர்மணிப் பணிகளுங் கமழ்ந்து
கொடியென வினைந்து நிறைவுறப் பூத்த
கொம்பென வசைந்தசைந் தொசிந்த
யடியிணை பாயிற் படப்பொருந் தஞ்சி
யன்புறு கடகரிப் பின்போம்
பிடியெனக் கன்னி நடைபயி லன்னப்
பெடையென மடநடை பெயர்வாள்.

நளவெண்பா.

பூமனையாள் வாழ்கின்ற புட்குலங்கள் யாவுமுன்
பாமனையாள் வாழ்கின்ற பதியிருந்தைகள் — காமன்
படைகற்பான் வந்தடைந்த நான் மையல்கொடு யாம் பாந்
நடைகற்பான் வந்தடைந்தோ நாம்.

மொழியழகு.

அரிச்சந்திர புராணம்.

பயிர்களை நந்தனவும் பட்டாடை மருமும்
பண்ணைகள் நாளுக்கவெள் ளெனப்பு
புயிர்பெறற பொருட்டும் பனிகரும் பாகு
மொழுகிய தேனுமா ம்ருதுங்
குயிலினிற் குரலுங் கிளியினின் மொழியுங்
குழலும் யாழுங் குழைத்திழைத்து
பயிலியற் சாயல வாணுதற் றனக்கு
மனையாள் வருந்தனென் மொழியாள்:

பத்துப் பாட்டு.

பொருநராற்றுப் படை.

"அறற்போற் கூந்தற் பிறைபோற் றிருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்க
ணிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிதீர் வெண்பன்
மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதி
ணாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தி
னாடமைப் பணைத்தோ ளரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தண் மெல்விரற்
கிளிவா யொப்பி னொளிவிடு வள்ளுகி
ரணங்கென வுருத்த சுணங்கணி யாகத்
தீர்க்கிடை போகா வேரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியி னிறைந்த கொப்பூ
ழுண்டென வுணரா வுயவு நடுவின்
வண்டிருப் பன்ன பல்கா ழல்கு
லிரும்பிடித் தடக்கையிற் செறிந்து திரள்குறங்கிற்
பொருந்து மயிரொழுகிய திருந்து தாட்கொப்ப
வருந்துநாய் நாவிற் பொருந்தகு சீறடி"

இங்ஙன மாயினும் அம்மையார் வனப்பானது சிற்றின்ப எண்ணத் தைத் தவிர்த்துப் பேரின்ப வுணர்வையே பயக்கு மெனக் கொள்க. இவ்வா றே தேம்பாவணியிலுங் கூறப்பட்டுள்ளது.

"வில்லே வியகோல் விழியா ரறைதீஞ்
சொல்லே யுயிருண் ணெனவே சொலுவா
கொல்லே தகிலாக் குதலைச் சொனலா
ணல்லே யுயிர்காக்கு நவின்ற சொலாள்

பல்லும் விழியும் பவளத் திதழுஞ்
சொல்லுங் கனியுஞ் சொலுமொண் ணுதல்கொள்
வில்லுங் கரமும் விரிசீ றடியும்
செல்லுந் திசைசெல் லுறழ் செல்லருளே

"மல்குபெரு வனப்புமீக்கூரவரு மாட்சியினால், இல்லிகவாப்பருவ மென்றது" மிக்க பேரழகு அதிகரிக்க வந்த பெருமையினால் வீட்டினின்றும் வெளிப்படாத மங்கைப்பருவ மென்றபடி. அப்பருவம் நிரம்பப் பெற்றமக ளிர் தம்மனைக் காவல் நீங்கிப் பிறர் மனைக் கேகுதல் உரிய வொழுக்கமல் லாமையைக்காசி காண்டத்தில்.

"எய்ப்பு மிற்றுறந் தேகல ரில்லைகள்
தையலார் முகங் காணினுஞ் சாம்புவார்
மையில் காதலர் வருதொலைவை யாயினுஞ்
செய்தி ரொன்றனுஞ் செய்தன மென்பரால்.

வனையுந் தங்கலன் மாற்றவட் கீயினு
முனிவு செய்கலர் மூப்பினர் சேர்வுறத்
தனியிற் சேர்கலர் தாம்பிற ரிற்புகார்
புனித நெஞ்சுடைப் புண்ணிய மாதரே"

என்று வருவன வற்றானும்

"பிறரிற் சேர்கிலர் பெண்மையின் மூத்தவர்
மறைவினன்றி மனையிற் றனித்திரார்"

என்பதனானுமறிக.

7 "நீடியசீர்க் கடனுகை நிதிபதியென் றுலகின்கட்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபிற் சேயிழையை மகட்பேசி
மாடமலி காரைக்கால் வளநகரின் வரவிட்டான்."

"பேச" என்றும் பாடபேத முண்டு. "தேடவருந்திருமரபு" என்றது

மநுதர்மசாஸ்திரம், 3 ம் அத்தியாயம், 7 ம் சுலோகத்தில், விவாகசம்பந்தத்தில் நீக்கவேண்டுமென்று விதித்துள்ள பத்துக்குலத்திலுமொன்றுபடாத தோஷ நீங்கிய குலமென்க.

குசேலோபாக்கியானத்தில்.

"மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டு
நேசமிக் குடையாள் கொண்க னினைப்பறிந் தொழுகு நீரா
டேசறு வாய்மை யுள்ளாள் சினந்திட லென்று மில்லாள்
பேசதிண் கற்பு வாய்ந்தாள் பெற்றதே கொண்டு வப்பாள்."

என்று வந்ததூஉம் இக்கருத்தைநோக்கியே யென்றறிக.

"சொற்றொறு பிற்றிதன் பெற்றி யென்றனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவுந்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே."

என்ற நன்னூற் சூத்திரத்தின்படித் தோஷம் நீங்கிய குலத்திற் பெண்ணைக்கொள்ள வேண்டுமென்பதுபோலவே பெண்ணைக் கொடுத்தலும் அத்தோஷம் நீங்கிய குலத்திலேயே யென்பது பெறப்பட்டது. இதைவிட்டுப் பொருண்முதலிய வீண பிரயோஜனங் கருதித் தகாதகுலத்திற் பெண்ணைக் கொடுப்பதால வருங்குற்றத்தை,

"இம்மை நேர்பயன் கருதியே தகாதவ ரிடத்திற்
கொம்மை வார்முலை மகட்கொடை நேர்ந்தவக் கொடியா
ரம்மை யாழ்நிரயத் திடை வீழ்ந்தன ரழுந்தித்
தம்மை நோக்கின ரொருவரு மின்றியே தளர்வார்."

என்ற சிவப்பிரகாசசுவாமிகள் கூறியவாற்றானுணர்க.

8 வந்தமூ தறிவோர்கண் மணங்குறித்தம் மனைபுகுந்து
தந்தையாந் தனதத்தன் றனைநோக்கி நீபயந்த

பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
முந்தைமர பினுக்கேற்கு முறைமைமணம் புரிகென்றார்."

"றணைநேர்ந்து" என்றும் பாடபேதமுண்டு.

9 "மற்றவனு முறைமையினன் மணமிசைந்து செலவிடச்சென்
றுற்றவர்க ளுரைகேட்ட நிதிபதியு முயர்சிறப்புப்
பெற்றனன்போ லுவந்துதனிப் பெருமகற்குத் திருமலியுஞ்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவைவினைத் தொழில்
பூண்டான்."

10 "மணமிசைந்த நாளோலை செலவிட்டு மங்கலநா
ளணையவது வைத்தொழில்க ளானவெலா மமைவித்தே
யிணரலங்கன் மைந்தனையு மணவணியி னெழில்விளக்கிப்
பணைமுரச மெழுந்தார்ப்பக் காரைக்கால் பதிபுகுந்தார்."

"மங்கலநாளணையவதுவைத்தொழில்களானவெலாம்" என்றது புனிதவதியார் திருக்கலியாண மகோற்சவ ஆரவாரங்களை யென்க, அவ்வைபவத்தை மேல்வருஞ் செய்யுட்களிற் கூறியுள்ளவாறுணர்க.

கம்பராமாயணம்.

தோரண நடுவாருந் தூணுறை பொதிவாரும்
பூரண குடமெங்கும் புனைதுகில் புனைவாருங்
காரணி நெடுமாடங் கதிர்மணி யணிவாரு
மாரண மறைவாணர்க் கமுதினி தடுவாரும்

அன்னமென் னடையாரு மழவிடை யனையாருங்
கன்னிநன் னகர்வாழை கமுகொடு நடுவாரும்
பன்னரு நிரைமுத்தம் பரியன தெரிவாரும்
பொன்னணி யணிவாரு மணியணி புனைவாரும்

சந்தன மகினாறுஞ் சாந்தொடு தெருவெங்குஞ்
சிந்தினர் திரிவாருஞ் செழுமலர் சொரிவாரு
மிந்திர தனுநாணு மெரிமணி நிரைமாடத்
தந்தமில் விலையாரக் கோவைக ளணிவாரும்

தளங்கிளர் மணிகாலத் தவழ்சுட ரிமிழ்தீப
மிளங்குளிர் முலையார்நற் பாலிகை யினமெங்கும்
விளிம்புபொன் விரைநாற வெயிலொடு நிலவீனும்
பளிங்குடை யுயர்திண்ணைப் பகுதியின் வைப்பாரும்

மந்தர மணிமாட முன்றிலின் வயினெங்கு
மந்தமி லொளிர்முத்தி னகனிரை யொளிவீச
விந்திர னெடுவான மீனலர் குவதென்னப்
பந்தரி னிழல்வீசப் படாவெயில் கடிவாரும்

வயிரமி ழொளியீனும் மரகத மணிவேதிச்
செயிரறு மொளிதீபஞ் சிலதியர் கொணர்வாரும்
வெயிலவிர் வியபொன்னின் மிடைகொடி மதிதோயு
மெயிலினி னடுவாரு மகிலெரி யிடுவாரும்

பண்டியி னிறைவாசப் பனிமலர் கொணர்வாருந்
தண்டலை யிலையோடு கனிபல தருவாருங்
குண்டலம் வெயில்வீசக் குரவைகள் புரிவாரு
முண்டைகொண் மதவேழத் தோடைக ளணிவாரும்

கலவைகள் புனைவாருங் கலநல தெரிவாரும்
மலர்குழன் மலைவாரு மதிமுக மணியாடித்
திலகமு னிடுவாருந் திகழ்கை யணிவாரு
மிலவிதழ் பொலிகோல மெழில்பெற விடுவாரும்

தப்பின மணிகாசுஞ் சங்கமு மயிலென்றை
ரொப்பனை புரிபோது மூடலி னுகுபோதுந்
துப்புற ழிளவாசச் சுண்ணமு முதிர்தாதுங்
குப்பைக ளெனவாரிக் கொண்டனர் களைவாரும்

மன்னவர் வருவாரு மறையவர் நிறைவாரு
மின்னிசை மணியாழி னிசைமது நுகர்வாருஞ்
சென்னியர் திரிவாருஞ் சிலதியர் செறிவாருங்
கன்னலின் மணவேலைக் கடிகைக டெறிவாரும்

கணிகையர் தொகுவாருங் கலைபல பயில்வாரும்
பணியணி யினமுத்தம் பலவித நிலமன்ன
ரணிநெடு முடியொன்றென் றறைதலி னுகுமம்பொன்
மணிமலை தொகுமன்னன் வாயிலின் மிடைவாரும்

கேடகம் வெயில்வீசக் கிளரயி னிலையினக்
கோடியர் நெடுவிஞ்சைக் குஞ்சர மதுபோல
வாடவர் திரிவாரு மரிவையர் களிகூரு
நாடக நவில்வாரு நங்கையுயிர் கவர்வாரும்

கதிர்மணி யொளிகாலக் கவர்பொரு டெரியாவா
றெதிர்சுடர் தரமின்னுற் றெழுதலி னிமையோரு
மதுவிரி குழலாரு மதிலுடை நெடுவான
மதுவிது வெனவோரா தலமரு வுறுவாரும்

தேர்மிசை வருவாருஞ் சிவிகையில் வருவாரு
மூர்தியில் வருவாரு மொளிமணி நிரையோடைக்
கார்மிசை வருவாருங் கரிணியில் வருவாரும்
பார்மிசை வருவாரும் பண்டியில் வருவாரும்

முத்தணி யணிவாரு மணியணி புனைவாரும்
பத்தியி னிமிர்செம்பொற் பலகலன் மகிழ்வாருந்
தொத்துறு தொழின்மாலை யரிகுழ லணிவாருஞ்
சித்திர நிறைதோயுஞ் செந்துகில் புனைவாரும்

விடணிகர் விழியாரு மழுதெனு மொழியாருங்
கிடைபுரை யிதழாருங் கிளர்நகை யொளியாருந்
தடமுலை பெரியாருந் தனியிடை சிறியாரும்
பெடையன நடையாரும் பிடியென வருவாரும்

உண்ணிறை நிமிர்செல்வ மொருங்குறை செலவென்றுங்
கண்ணுற லரிதென்றுங் கருதுத லரிதம்மா
வண்ணுறு சுடர்வானத் திந்திரன் முடிசூடும்
மண்ணுறு திருநாளே யொத்தத மணநாளே.

நைடதம்

இமிழ்கடி முரசங் கறங்குதோ ரணத்தை
யெழினகர் மாந்தர்தஞ் செவியி
னமிழ்தருத் தென்னத் தவழ்தரு மகிழ்வுற்
றணிவிழ வருதோ மறுகிற்
கமழ்நறுந் தாற்றுப பாளைவாய்க் கமுகுங்
கன்னலுங் கதலியு நடுவா
ருமிழ்கதி ரெறிக்கு மணிநெடுங் கொடிக
ளுயர்விசும் பகடுற நிரைப்பார்

சேணுயர் பரிதி தழும்புற நிவந்த
செழுமணித் தோரணை நடுவார்
வாணில வொழுகு மணிவடம் புனைந்து
வயங்குபொற் றசும்புக ணிரைப்பார்
பாணிகர் வரிவண் டெளர்ந்துதே னுகரும்
பணிமலர்த் தாமநாற் றிடுவார்
தாணுறை கழித்து விரிகதி ரெறிக்குஞ்
சுடர்மணிச் செறிதுக டைப்பார்

மைந்தரோ டியைந்தவர் பரிந்த
மணிவடக் குப்பைக ளகற்றிச்
சந்தமென் குழம்பா னன்னில மெழுகித்
தண்மலர்ப் பாலிகை யமைப்பா
ரிந்திர தனுவிற் றிகழ்தரச் சாந்து
மெரிமணிச் சுண்ணமு மிறைப்பார்
நந்தலில் விளக்க மணிசெய்பொற் றகளி
நறுநெய்பெய் தொளிபுற விடுப்பார்

ஐயரி சிதறு மழைமதர் நெடுங்க
ணஞ்சன மெழுதுவார் சாந்தந்
தொய்யில்வெம் முலையி னிலவு கொப்புளிக்குந்
தூமணிப் பிறைவட மணிவார்

மையிருங் கூந்தல வகிர்ந்துதேன் மூரலு
மட்டுவார் பூந்தொடை புனைவார்
நையுநுண் மருங்கிற் கதிரொளி பரப்பு
நகைமணி மேகலை புனைவார்

சிலம்பரிச சிலம்பு பஞ்சிமேற பணிகளுஞ்
சீறடி கவின்செயப புனைவா
ரெலவளை திருத்தி யாடமை பணைத்தோ
ளெழில்பெறத தொயிலவரைந திடுவா
ரல்லியங் காமல மென்மலாக கவறறு
மடியினி லலத்தக மணிவார்
வில்லுமிழ் மொருகாழ் முத்தணி யணிவார்
விரைகமழ தெரியல்கை புனைவார

கதிரமதி தவழு மாடநீண் முகப்பிற
காழுகிற தீமபுகை யிடுவார
முதுமறை வாணர்க இன்னமு தடுவார்
மொய்கதிர வெயிலகரந தொழிய
மதிநில வொழுகு நித்திலப பநதர்
பாணுற வயின்வயி னிரைப்பார
சதிமுறை தவறுந தண்ணுமை கறங்கக
கூத்தியர் தனிததனி நடிப்பார்.

எழிறிகழ் கன்னிக கமுகமென் பிடறறி
னிசையெழீஇ யினிதுபாட டயர்வார
செழுமலர்க் காந்தண் முகிழ்விரல சேப்பத
திவவியா ழின்னரம புளர்வார
முழுநெறிக குமுத முகைநெரிந தெனவாய்
முகிழ்க்கருங் குரவைகள் புரிவார
கொழுமலர் வளைக்கை கொட்டிவே ணெடுங்கட்
கோதையர் குரவையாட டயர்வார்

இருங்கடற் றோன்று மழகதி ரேய்க்கு
மெரிமணிச் சிவிகையின் வருவார்

கரும்புவிழ்ந் தாற்ற மும்மதம் பொழியுஞ்
சூழிமால் யானையிற் புகுவார்
திருந்துமொண் கழிய கூந்தன்மான் றேரிற்
சேட்டிளம் பரிதியிற் செல்வார்
பொருந்தமண் டோயா தகல்விசும் பகவும்
பொங்குளைப் புரவியிற் போவார்

விரைகமழ் முல்லை முகைநிக ரடிசில்
வெள்ளியங் கிரியெனக் குவிப்பார்
கருணையுங் கன்னற் கட்டியுந் தேமாங்
கனிகளும் வயின்வயி னிரைப்பார்
திரைபொரு கடலி னறுநெயும் பாலுந்
தெறுத்தொறும் பெருக்கெடுத் தோட
வெரிபகம் பொன்னங் கலம்பல பரப்பி
யிரவலர்க் கின்னமு தளிப்பார்.

சீவகசிந்தாமணி.

இலக்கணையாரிலம்பகம்.

அரிபொற் கிண்கிணி யணிகிளர் சிலம்பொடு சிலம்புந்
திருவச் சீறடிச் செழுமலர்க் கொழுங்கயன் மழைக்க
ணுருவ நுண்ணிடை யொளிமணி வருமுலை யுருவா
ரெரிபொன் மேகலை யிலக்கணை கடிவினை நொடிவாம்.

விளங்கு வெண்டுகி லுடுத்துவெண் சாந்துமெய் பூசித்
துளங்கு மஞ்சிகை துளைசிறு காதினுட் டுளங்க
வளங்கொண் மாலைகள் சூடிமுத் தணிந்தவண் முரசங்
களங்கொள் வேழக்கி னெற்றினர் கடிமுர சறைவான்.

கேண்மின் கேண்மின்கள் யாவரு மினியன கேண்மின்
பூண்மி னித்தில மணிவடம் பூசுமின் சாந்தம்
வாண்மி னுண்ணிடை வருந்தினுஞ் சூட்டணிந் தழகா
ராண மாகிய வருவிலை வண்ணைப்பட் டுடுமின்.

பிள்ளை வெண்பிறைச் சிறுநுதற் பெரும்பட்ட மணிமி
னுள்ள மேனியு மொளிர்மணிக் கலங்களிற் புனைமின்

வள்ளல் வாய்மொழி யான்படு பாலமிர் தல்லா
லுள்ள மேனினும் பிறவுணாப் பெறீஇ ரெழுநாளும்.

வாழை மல்கிய மணிக்குலை கமுகொடு நடுமின்
குழை நாற்றுமின் குமங்க ளிற்குடம் பரப்பி
யாழின் பாடலு மாடலு மரங்குதோ றியற்றிப்
போழு மல்விகப் பொனப்பல பொலங்கொடி பெடுமின்.

வேறு.

முரச மார்ந்தபின் மூவிரு நாள்கள் போய்
விரைவொ டெங்கணு மெள்ளளை விம்மின
புரையில் பொன்மணி யாழ்குழ றண்ணுமை
யரவ வாணி னதிர்ந்த வணிமுழா.

போகு மாமழை போழ்ந்து புதக்கொரு
மாக மேந்துவ போன்மணித் தோரண
மாக நாற்றின தாம மணிக்குட
மேக மாநகர் வீதி நிறைந்தவே.

ஆடன் மங்கையர் கிண்கிணி யார்ப்பொலி
பாட லின்னொலி பண்ணமை யாழொலி
போடு கொண்முழ வின்முழக் கீண்டிய
மாட மாநகர் மாக்கட லொத்ததே.

வேறு.

நிரந்து நன்னறு நெய்யு நீநதபெய்
திரந்து பாலமிர் தெங்கு மூட்டுவார்
பரந்து பூநதுகில் பன்ப ணிக்கலஞ்
சுரந்து கொள்கென சுமக்க னல்குவார்.

வருக்கை யின்பழம் வாழை யின்கனி
திருக்கொண் மாங்கனி தெளித்த தேறலின்
கருப்புச் சாற்றொடு கலந்து கைசெய்து
புரித்த தெங்கிள நீரும் பூரிப்பார்.

கூந்த லேந்திய கமுகங் காய்க்குலை
யாய்ந்த மெல்லிலை பளித மாதியா
மாந்தர் கொள்ளைகொண் டுண்ண மாநில
மேந்த லாம்படித் ததன்றி யிட்டுவார்.

வழுவின் மாநதரு மாவு மல்கிய
தொழுதி தன்னையான் சுமக்க லேனென
முழுது மண்மகண் முற்றும் வாய்திறந்
தழுதிட் டாணெயும் பாலு மாகவே.

வேறு.

கொடியெழுந் தலமருங் கோயில் வாயில்கண்
மடலெழுந் தல்மருங் கமுகும் வாழையு
மடியிருந் துகிலுடை மாக்க ளூடியும்
புடைதிரள் பூரண குடமும் பூத்தவே.

துளங்குபொற் குழைகளுந் தோடுஞ் சுண்ணமுங
கிளர்ந்தகில் சாந்துபூக் கமழ்ந்து கேடில்சீ
ரிளங்கதி ரெறிமணிப் பூணு மாரமும்
விளங்கிமே லுலகினை வெறுப்பித் திட்டதே.

ஷ காந்தருவ தத்தையா ரிலம்பகம்

வளைநிற வார்செநெ லரிசி பண்டியோ
டளவறு சருக்கரைப பண்டி யார்நனை
யிளவியல் பயறுபெய் பண்டி யுப்புநீர்
விளைவமை பண்டியின் வெறுத்த தாங்கொர்பால்

சினைத்துணர் முழுவன பலவின் றீங்கனி
கனைத்து வண்டுழல்வன வாழை மாங்கனி
யெனைத்துள கிழங்குகாய் குருகொ டேந்திய
சனத்திறைற் றகைத்திடம் பெறுது தாரொணர்பால்.

பரகத மணிப்பசுங் காய்கொள வாழைகுலை
கவர்பழுக் காய்க்குலை கனியக காவுறீஇ

இவர்தரு மெல்லிலைக் காவு மேந்திய
உவரியாய்ச் சொரிந்திடம் பெறாது தாமொர்பால்.

சண்பகந் தமநகந் தமால மல்லிகை
தண்கழு நீரொடு குவளை தாமரை
வண்டின மிசைகொள வாசப் பூச்சுமை
கொண்டவர் குழாம்பொலி வுற்ற தாங்கொர்பால்.

II. அளிமிடைதார்த் தனதத்த னணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே செயன்முறைமை செய்தமைத்துத்
தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழ்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள்.

"தெளிதருநூல விதிவழியே செயன்முறைமை செய்தமைத்துக்கலியாணஞ் செய்தார்கள்" என்றது மறையில் சோதிடாங் கத்துள் வணிகர்க்குக் கூறிய நெறியிலே பிறழா மணவினை முடித்தார்களெனப் பொருளுடைத்து. புனிதவதியார் தனதத்தர்களைப் போலவே பெருங் குடியர் குலத்தி லுதித்தோராகிய கண்ணகி கோவலன் மங்கல வைபவத்தை இளங்கோவடிகளும் சீவகன்தத்தையார் இவர்கள திருக்கலியாணச் சிறப்பைத் திருத்தக்க தேவரும் விவரித்து விளக்கியதைப் பின்வருஞ் செய்யுட்களிற்காண்க.

சிலப்பதிகாரம்.

" இருபெருங் குரவரு மொருபெரு நாளான்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்துழி
யானையெருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்.

அவ்வழி

முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம்வெண்குடை
யரசெழுந்த தொர்படி யெழுந்தன வகலுண் மங்கல வணியெழுந்தது.
மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணத்து
நீலவிதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலியொருமீன் றகையாளைக் கோவலன்

மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ்செய்வது காண்பார்க ணோன்பென்னை
விரையினர் மலரினர் விளங்குமேனிய
ருரையினர் பாட்டின ரொசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதைய
ரேந்திள முலையின ரிடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்தபாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்ந்த மூரலர்
போதொடு விரிகூந்தற் பொலனறுங் கொடியனார்
காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமற்
றீதறுகென வேத்திச் சின்மலர் கொடுதூவி
யங்கணுலகி னருந்ததி யன்னாளை
மங்கல நல்லமளி யேற்றினார்."

சீவக சிந்தாமணி.

இன்னிய முழங்கியார்ப்ப வீண்டெரி திகழவேதந்
துன்னினர் பலாசிற்செய்த துடுப்பினெய் சொரிந்துவேட்ப
மின்னியல் கலசநன்னீர் சொரிந்தனன் வீரனேற்றான்
முன்னுபு விளங்குவெள்ளி முளைத்தெழ முருகனன்னான்.

இட்டவுத் தரியமின்னு மெரிமணிப் பருமுத்தார
மட்டவிழ் கோதைவெய்ய வருமுலை தாங்கலாற்றா
நெட்டிருங் குழலினாளை நேர்வளை முன்கைபற்றிக்
கட்டழல் வலங்கொண்டாய்பொற் கட்டின்மே லேற்றினானே.

மன்னர்க்கும் மன்னர்க்கு பின்னோர்க்கும் விவாக கிரியைகளில் தந்திரத்தானு மந்திரத்தானுஞ் சிறிதே வேறுபாடுளதான். புனிதவதியார் திருக்கலியாணச் செயல்களைப் பின்வருஞ் செய்யுட்களிற் கூறியுள்ளவாறு அநுமானித்தலும் பொருந்தும்.

சீவக சிந்தாமணி.

முத்துமிழ் திரைகளங்க மொய்கள்பா தாலமுத்தீ
யொத்தன வேலைவெள்ளி யொளிகட னன்குநாண

வைத்தனன் மறையுணர்ந்தி வானைகுண மென்னுஞ்சாலி
வித்திமே லுலகத்தின்பம் விளைத்துமெய் கண்டனீரார்.

தருமணற் றருப்பையார்ந்த சமிதையிம் மூன்றினும
விரிமல ரணிந்தகோல வேதிகை யியற்றியானெ
யொருமணி யகலுட்பெய்தோர் பொன்னக லார்ந்தநூப
மிருமணி யகலுணீர்பெய் திடவயி னிரீஇயினாரே.

நெற்பொரி நிறையப்பெய்து நிழலுமிழ் செம்பொன்மூழிக்
கற்புரி கடவுளான்பா லவிபொடு கலப்ப வைத்து
முற்பெரி யானையாகத் தருப்பையான் முடிந்துமூன்று
பொற்புரி வரையும்பொய்தீர் சமிதைக ளிரண்டும்வைத்தார்.

மந்திர விதியின்மாண்ட சிறுவிரற் றருப்பை சூழ்ந்து
முந்துற பொழிந்தநெய்யை முனைமுகிர் தருப்பைதன்னான்
மந்திரித் துமையமுக்கான் மண்ணிமற் றதனை நீக்கிச
சிந்தித்து மறையிற்செந்தீத் தண்டுலத் தங்கண்வைத்தார்.

தண்டுலத் தகத்திற்சாண்மே லெண்விரற் சமிதைதன்னான்
கெண்புரை யவருமெத்தத் துடுப்புநெய் சொரிதலோடுங்
கொண்டழற் கடவுள்பொங்கி வலஞ்சுழன் றெழுந்ததென்ப
தெண்டிரை வேலியெங்குந் திருவிளை யாடமாதோ.

கரையுடைத் துகிலிற்றோன்றுங் காஞ்சன வட்டின்முந்நீர்த்
திரையிடை வியாழந்தோன்றத் திண்பிணி முழவுஞ்சங்கு
முரசொடு முழங்கியார்ப்ப மொய்கொள்வேன் மன்னரார்ப்ப
வரசரு ளரசனெய்பொற் கலசநீ ரங்கையேற்றான்.

குளிர்மதி கொண்டநாகங் கோள்விடுக் கின்றதேபோற்
றளிர்புரை கோதைமாதர் தாமரை முகத்தைச் சேர்ந்த
வொளிர்வளைக் கையைச்செல்வன் விடுத்தவ ளிடக்கைபற்றி
வளரெரி வலங்கொண்டாய்பொற் கட்டிரு னேறினானே

விளங்கொளி விசும்பிற்பூத்த வருந்ததி காட்டியான்பால்
வளங்கொளப் பூத்தகோல மலரடி கழீஇயபின்னை
யிளங்கதிர்க் கலத்தினேந்த வயினிகண்ட மர்ந்திருந்தான் [தான்.
றுளங்கெயிற் றுழுவைதொல்சீர்த் தோகையோ டிருந்ததொத்

கம்பராமாயணம்.

மங்கல முரசின மழையி னார்த்தன
சங்குகண் முரன்றன தாரை போரெனப்
பொங்கின மறையவர் புகலு நான்மறை
கங்குலி னொலிக்குமா கடலும் போன்றவே.

சங்கினந் தவழ்கட லேழிற் றந்தன
இங்கலி லருமறை தெரிந்த தீர்த்தங்கள்
கங்கையே முதலிய கலந்த நீரினால்
மங்கல மஞ்சன மரபி னாடியே.

நீந்தருங் கடலென நிறைந்த வேதியர்
தோய்ந்தநூன் மார்பினர் சுற்றத் தொன்னெறி
வாய்ந்தநல் வேள்விக்கு வசிட்டன் மையற
ஏய்ந்தநற் றருப்பையே யா புனிதி னெய்தினான்.

தண்டிலம் விரித்துநற் றருப்பை சாத்தியே
மண்டலம் விதிமுறை வகுத்து பொன்மலர்
கொண்டவை சொரிந்தெரி குழும ஊட்டினன்
பண்டுள மறைநெறி பாவிச் செய்தனன்.

வேறு.

மன்றலில் வந்து மணத்தவி சேறி
வென்றி நெடுந்தகை வீரனு மார்வத
தின்றுணை யன்னமு மெய்தி யிருந்தார்
ஒன்றிய போகமும் யோகமு மொத்தார்.

கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளும்மென நீயென்
மாமக டன்னொடு மன்னுதி யென்னாத்
தாமரை யன்ன தடக்கையி னீந்தான்.

வெய்யக னற்றலை வீரனு மந்நாள்
மையறு மந்திர முற்றும் வழங்கா

நெய்யமை யாவுதி யாவையு நேர்ந்தான்
தையற லிர்க்கை தடக்கை பிடித்தான்.

இடப்படு தோளவ ளோடுமை வெள்ளி
தொடங்கிய வெங்கனல் சூழ்வரு போதின்
மடம்படு சிந்தையண் மாறு பிறப்பின்
உடம்புயி ரைத்தொடர் கின்றதை யொத்தாள்

வலங்கொடு தீயை வணங்கினர் வந்து
பொலம்பொரி செய்வன செய்பொருண் முற்றி
இலங்கொளி யம்மிமி தித்தெதிர் நின்ற
கலங்கலில் கற்பி னருந்ததி கண்டார்.

மற்றுள செய்வன செய்து மகிழ்தர
முற்றிய மாதவர் தாண்முறை சூடிச்
கொற்றவனைக் கழல் கும்பிட லோடும
பொற்றொடு கைகொடு நன்மனை புக்கான்.

கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம
தாயினு மன்பொடு தாழ்ந்து வணங்கா
ஆயத னன்னை யடித்துணை சூடித்
தூயசு மித்திரை தாடொழு லோடும.

அன்னமு மன்ன வரும்பொன மலர்த்தாள்
சென்னியு னைந்தனள் சிந்தையு வந்தா
கன்னிய ருந்ததி காரிகை காண
நன்மக ளுக்கிவ ணல்லணி யென்றார்.

12. மங்கலமா மணவினைகண் முடித்தியல்பின் வைகுநாட்
டங்கள்குடிக் கொருபுதல்வி யாதலினாற் றனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுட
னங்கணமர்ந் தினிதிருப்ப வணிமாட மருங்கமைத்தான்.

"அரும்புதல்வி" என்றும்; "இனிதிருக்க" என்றும் பாடபேத முண்டு.

"தங்கள்குடிக் கொருபுதல்வி யாதலினாற றனதத்தன்

பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்
அங்கணமர்ந் தினிதிருப்ப வணிமாட மருங்கமைத்தான்."

என்பது தங்கள் குடிக்கு ஒரு புதல்வியாதலால் அவரை விட்டுப் பிரிந்திருக்கமாட்டாத தனதத்தன் அவரைத் தானுறையு மிடத்திலேயே அமர்ந்திருக்கச் செய்வது புத்திரவாஞ்சைக் குரியசெயலா யிருக்க அதைவிட்டு வேருேரிடத்தை மருங்கமைத்து அதில் அமருவித்ததானது தன் மருமகற்கு வேட்டகத்தில் நிலையுறுவதால் உண்டாகும தோஷ நிவிர்த்தியின் பொருட்டுப் போலும். வேட்டகத்திலிருப்பதனுற் ரேஷமுண்டா மென்பதை,

நைடதத்தில்.

"மிக்கவெஞ் சமத்திடை வெருவி யோடின
ரொக்கலுன் புறத்தனி யுலகில் வாழுநர்
புக்குவேட் டகத்தினி லுண்ணும் புன்மையோர்
மக்களுட் பதடியென் றுரைக்கும் வையமே."

என்று கூறியுள்ளார் பெரியோர்.

13. மகட்கொடையின்மகிழ்சிறக்கும்வரம்பிறனங் கொடுத்ததற்பி
னிகர்ப்பரிய பெருஞ்சிறப்பி னிதிபதிதன் குலமகனுந்
தகைப்பில்பெருங் காதலினுற் றங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினின் மேம்படுதன் மேவினுன்.

மகட்கொடை என்றது கன்னிகாதானமென்னும் வடநூல் வழக்குநோக்கியும்

"எந்தப்பெண்களின் பந்துககள பணம்வாங்காமல தானஞ்செய்கிருர்களோ அது விற்கிரயமன்று அவர்கள்தாம் அந்தப் பெண்ணினிடத்தில் தயையும்அன்பும் உடையவர்களாயிருக்கிருர்கள்."

என்று மநுதர்ம சாஸ்திரம் 3 ம் அத்தியாயம், 54 ம் சுலோகம் விதித்தலைநோக்கியுங் கூறியபடியென்க. தகைப்பில் பெருங்காதலினுற்றங்குவளமனைபெருக்கி என்று அம்மையாரும் பரமதத்தனும் மனைவளம் பெருக்கியதற்குஅவ்விருவர்க்கும் ஒருமித்துள்ள காதலை விசேடித்துக் கூறியவாறு

திருக்குறள்.

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

கூர்மபுராணம்.

தருமமெனும் பண்டமிடுஞ் சகடமா மனைவாழ்க்கை
கருமநுகம் பிணித்துமனைக் காதலியுந் தானுமென
விருவராய் முறைசெலுத்தி னெத்துணைத்தூ ரமுஞ்செல்லு
மொருவராய்ப் பூண்டிழுப்பி னோரிறையுஞ் செல்லாதால்.

நன்னெறி.

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதிலொரு கருமஞ் செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கொன்றுங்
கண்ணிரண்டு மொன்றையே காண்.

ஔவையார்.

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. என்றும்

அறநெறிச்சாரம்.

மருவிய காதன் மனையாளுந் தானு
மிருவரும் பூண்டுய்ப்பி னல்லா—லொருவரா
லில்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று.

வினைகாத்து வந்த விருந்தோம்பி நின்றான்
மனைவாழ்க்கை நன்று தவத்திற்—புனைகோதை
மெல்லிய னல்லாளு நல்லள் விருந்தோம்பிச்
சொல்லெதிர் சொல்லா ளெனில். என்றும்

திருச்சிற்றம்பலக் கோவையார்.

காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ
ராகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமா

மேகத் தொருவ னிரும்பொழி லப்பல வன்மலையிற்
றோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்பதுன்பங்களே.

என்றும்,

நீதி நூல்.

ஆவியின்றி யுடலமிலை யுயிரின்றி
பாவியிலை பதார்த்தத்தா
தேவியனு மிருவருந் தேசு மேக நருவரு
செழுமலருந் தேனும் போல
மேவியவ ரிருவருமே நல்லாது
முரண்செய்யல் விளங்குமெய்யுஞ்
சீவனுமொன் றோடொன்று போமாடி
பழிநகதொக்குஞ் செய்யுங்காலே.

மணியுமொளி யும்போலாண் மகனுமனை
வியும்பொருந்தி வாழ்வாரேற்
பிணியுறார் நலனெனினும் பொருள்செல்வர்
நகுல முறவெய் பொருநாட்பாப் புறப்போற்
றணியாத பகைமையுற் றுநல்லாரே
லுயிரற்ற வுடக்கின்றாது
பணிகண்மிகப் பூட்டு பலங்காரத்தொக்கு
மவர்செல்வப் பயன்றனாரா.

என்றுங் கூறியிருப்பனவற்றைக் காண்க.

வரம்பிரணப் மொடுத்த என்றார் இவ்வாறே சீதனப் பொருளாக அளவில்லாத பொருள்களை வீமராஜன் தன் மகளாகிய தமயந்திக்கு வழங்கியதை நைடதத்திலும், ஜனக மகாராஜன் சீதைக்கு வழங்கியதை இராமாயணத்திலுங் காண்க.

நைடதம்.

பண்ணமை கலின மான்றே ராயிர மிரட்டி பாய்மா
வண்ணலங் களிநல் யானை யாயிரத் தறுபத் தொன்பான்
கண்ணகன் விசும்பு பூத்த கற்பகத் தருவி னோடு
மண்ணிழிந் தனைய பேரு ளைம்பதும் வழங்கி னானே.

பொருதிரைப் புணரி யீன்ற பொலன்கொடி யனைய செவ்வி
யரிவைய யிருபதந் தையா யிரவர்நல் லரங்கி லாடும
வருமுலைப் பவளச் செவ்வாய் வனிதைய ரெழுநூற் றெண்ம
ரிருபது கோடி செம்பொ னிதினில் வழங்கி னானே.

பொழிகதிர் மணிசெய் கட்டில் புனைமலர்ப் பாயல் பைம்பொ
னிழைபயில் வண்ணப் பேழை யினியசா தாற்றி போடு
நிழறவழ் மணிக்கண் ணாடி நிதிக்கல முகத்தி வைய்ந்த
வொழுகொளிக் கவரி யின்ன வுடைமைபல நல்கி னானே.

கம்பராமாயணம்.

எண்ணில் கோடி பொன் னெல்லையில் கோடி
வண்ண வுநங்கல மங்கையர் வெள்ளம்
கண்ணக னிட்டப் பாரகந் தூப
பெண்ணி னனங்களை யாவும் பெறுமென்றார்.

14. ஆங்கவன்ற னில்வாழ்க்கை யருந்துணையா யமர்கின்ற
பூங்குழலா ரவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீ
ழோங்கியவன் புரிகாத லொழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனையறத்தின் பண்புவழா மைப்பயில்வார்.

"மையிற்பயில்வார்" என்னும் பாடபேதமுண்டு. மனையறத்தின் பண்புவழாமை பயில்வதாவது.

திருக்குறள்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை

என்றபடிக்கும்,

காசிகாண்டம்.

கொழுந னுண்டபின் றுணுகர் கொள்கையும்
விழித்த பின்றுயின் றஞ்சலு மென்றுயி

லெழுதன் முன்னெ யெழுதா பேயன் மேரு
பழுதில் கற்புடைய பாவையர் செய்கையே

இனிய கேள்வர் புணரி னெதிர்ந்தின்று
துணிகொ ணெஞ்சொ டெதிர்மொழி சொல்கிலா
ரினிய கேள்வ ரெறியினு மன்பொடு
கனிவர் நெஞ்சகங் கற்புடை மாதரே.

எய்து மிற்றுறந் தேகல ரில்லகை
றையு லார்முகங் காணினுந் சாம்புவார்
மையில் சாதலர் வந்தவை யாயினுஞ்
செய்தி ரென்றலுஞ் செய்தன மெண்பரால்

விழவு கண்ணுறன் மேதகு நோன்புறல்
பழுதி றாநதி யாடுதல் பண்ணவர்த்
தொழுது வாழ்த்துத றேமறு கற்பினோர்
கொழுந ரேவலி னன்றிக் குறிக்கொளார்

மேவு காதலி னுள்ள மிளைப்பத்தல்
லேவு முன்னர்க் குறிப்பி னியற்றுவார்
தாவி லன்பர் தமையலர் தூற்றிடப்
பூவை யன்னவர் புன்முக நோக்கிலார்.

இல்ல றத்திற் கியைவன வீட்டுவா
ரல்ல செய்தே வறிதி னழிக்கிடார்
புல்லு காதல ராயுட் பொலிவுற
மல்ல லோங்கணி மஞ்ச ளணிவரால்

அழகின் வீக்கஞ் சிறிதில ராயினு
மொழிவி னோய்நிரம் புற்றன ராயினுங்
கிழவுத் தன்மைய ராயினுங் கேள்வரைப்
பழுது சொல்கலர் பண்பின் முயங்குவார்.

அன்பர் துஞ்சிடிற் றுஞ்சுத லாங்கவர்
துன்ப மெய்திடிற் றுழமைத் துன்புற
வின்ப முற்றிடி னின்புறுந் திருக்கலை
மன்பெ ருந்தவங் கற்புடை மாதர்க்கே

அறந்த வாத்தம தன்ப ரருளிஞற்
றுறந்து ளோர்பிறப் போர்தொழில் செய்குநர்
சிறந்த தொல்குலத் தெய்வம் பகவிருந்
திறந்து ளோர்க்கும் பகுத்தினி தாண்பரால்

கொழுநன் சொற்கட வாதுறை கொள்கைய
வழுவி னல்லறம் வான்றவ ராற்றுத
லெழுது தெய்வம் பராய்மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே.

வாள்வி ழிக்குல மங்கைய ரன்பர்பொற்
றாள்வி ளக்கிய தண்புனல் கங்கையக்
கேள்வ ரேகினர் தேவர்கண் மூவரி
லாளு மெய்ம்மை யடிகளென் றெண்ணுவர்.

தானை தன்னினுந் தன்னையர் தன்னினு
மாதர் மென்மொழி மைந்தர் தம் மாரினுங்
கோதில் கற்புடை யார்தங் கொழுநர்பாற்
காதல் கூர்ந்து களிமகிழ் வெய்துவர்.

என்ற படிக்கும்,

பிரபுலிங்க லீலையில்.

குரவர்தா மியைந்து கொடுத்தில ராயிற் குமரவேளனையவ ரேனு
மருவரா விற்பர் தந்தைதாய் தங்க ளாணையி னெழுகுகன் னியர்தா
முருவிலா ரெனினுங் குரவருண் மகிழ்வுற் றுதவுறி னனையவர் தம்மைப்
பரவுவான் கடவு ளாகவே நினைந்து பண்பொடும் பயிலுவ ரன்றே

என்றபடிக்கும்,

நாலடியாரில்.

குடநீ ரட்டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனையாட்சி யாள். என்றபடிக்கும்,

சீவகசிந்தா மணியில்.

சாமெனிற் சாத ஞெ தறன்னவன் றணநத காலப
பூமனும் புனைத லின்றிப பொற்புடன் புலம்ப வைகிக்

காமனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவை யொப்பார் தேர்ந்தவன் செல்ல நீர்ப்பார்.
என்றுபடிக்கும்,

பெருந்தேவனார் பாரதத்தில்.

பாரணியா மென்புருவர் காதலர்க் காதலரை
யாரணியா ரம்பொழுதே யன்புறுத்தி—யோரா
மனங்குழையப் பண்ணா மகிழ்விப்பா ரன்றே
கனங்குழையார் தங்கள் கடன். என்றுபடிக்கும்,

கூர்மப் புராணத்தில்.

மிடியினர் புன்மரினர் விருத்தர் நோயினர்
வழியில நூறாயினும் வயதேர் மூவா மொருவ
கொடியவ ராயினுங் கொழுநர் தாமவை
மடியில ரன்புறப் பேணுடைய மாதரே. என்றுபடிக்கும்,

வளையாபதியில்.

நாடொறு நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு மனமைய பெய்யெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்கால்
பாடு சான்மிகு பத்தினிக் காவதே. என்றுபடிக்கும்,

திரிகடுகத்தில்.

நல்விருந் தோம்பலி னட்டாளா மவைகலு
மில்புறஞ் செய்கலி னீன்றதாய்-தொலைந்தவயின்
மக்கட் பெறலின் மனைக்கிழத்தி யிம்மூன்றுங்
கற்புடையாள் பூண்ட கடன். என்றுபடிக்கும்,

சிறுபஞ்சமூலத்தில்.

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்விருந் தோம்பித்-திருவாக்குந

தெய்வத்தையு மெஞ்ஞான்று மேத்தற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. என்றபடிக்கும்,

திவ்வியபிரபந்தத்தில்.

கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினுங்
கொண்டானை யல்லா லறியாக் குலமகள் போல்
விண்டோய் மதிள் புடைசூழ் விற்றுவக் கோட்டம்மானே
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே. என்றபடிக்
[கும்,

குசேலோபாக்கியானத்தில்.

நின்னுடைய மனைக்கிழத்தி நிரப்புப்பெருந் தீமைபயினு
மன்னுடைய பொற்காதுாச் சேர்வில பாண்பினளோ
தன்னுடைய வுயிர்நின் றனையேயனு தன்மைபயில்
உன்னுடைய வருத்தைப்பக்கத் தகச்செல வொருந்துவளோ

சொன்னகா ரியங்கடந்து சொன்னபடி பிழைப்பவளோ
பொன்னடிய வரிணைமலர் பெயர்த்திடப்பாரா வியல்பினளோ
தன்னைப்புநாயகன் பழித்தாற் றுறந்தைப்பாத நகக்கவளோ
பன்னருமா மறையுணர்ந்த பலகலைதேர் குணக்குன்றே

ஆர மைச்சரேர் மதிய மாட்டுப்பணிக்
கோர டிச்சியாய்ப் பணியி லாணிடைச்
சாரி லன்னையாய்ச் சமைவர் கற்புடை
நாரி மாரென நவிலுவர் நல்லவர். என்றபடிக்கும்,

திருக்குற்றாலப்புராணத்தில்.

சிறுகாலை யட்டில்புக லருந்தியுறச் சமைத்தலருமை திருத்தி
யூட்டல்
மறுகாலை யெண்ணெய்து விருந்தமைத்தன் மகப்பெறுதன் மடநா
ணச்சம்
பெறுகாலை யின்புறுதன் முன்னுறங்கல் பின்னுறங்கல் பின்னெ
ழாத
லுறுகாலை தொழுதெழுதல் பன்னிரண்டு மாதர்காக்கற் புடை
யோர செய்கை, என்றபடிக்கும்,

சிலப்பதிகாரத்தில்.

கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்கு துயரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்த நாடென்னு
மத்தகு நல்லுரை யறியா யோநீ. என்றபடிக்கும்,

நீதிநூலில்.

தந்துணைவர் வடிவமிலா முடமெனினுங் கிழவரெனிற் றனையரொப்பா
மதகுணரா யாற்றுமா மொழியுமா யனையாய பாதா ணைவர்
வந்தழுதுண் டுறங்கியபின் றுயின்றுண்டு துயின் றழுதுணைமுன்னெழுந்து
பந்தழுறுங் கருமமெலா முடிப்பர்கற்பி னணிபூண்ட படைக் கண்ணாரே
வினைப்பகைதீர் பெரியரில்வாழ் வினிற்கலந்து நின்றாலும் வேத நாதன்
றனைப்பரவி நினைக்கவென்று மொழியார்போற் கற்பின்மிக்க தையலார்த
மனைப்பணிகள் செய்தாலுந் துயின்றாலுங் கனவினுந்தம் மணவாளர் மாட்டு
நினைப்பொழியார் கணவருடன் மனமொன்றாய்க் கலந்து நிற்பர் பாரேதா, என்றபடிக்கும்,

இல்லறத்தினியல்பு சிறிதுந்தவறாமல் நற்குண நற்செய்கை யுடையளா யொழுகுத லென்றறிக.

15. நம்பாடி யாரணைந்த நல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்னு நவமணியுஞ் செழுந்துகிலு முதலான

**தம்பரிவி னுலவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்து
மும்பர்பிரான் றிருவடிக்கீழ் பூணர்வுமிக வொழுகுநாள்.**

"நம்பரடி யாரணைந்தா லலதிரு வமுதளித்தும்" என்றார் இங்ஙனமே சிவனடியவர்க்கு அளித்தலை.

நறைபடு கனிதேன் பெய்த பாலொடு நறுநெய் வெள்ள
நிறைபடு செம்பொன் வண்ண பாகுகனி கனிமிக்க சோறு
குறைவற வுண்டு வேண்டும் பொருள்களுங் கொண்டு மின்னன்
மறைமுத லடியார் தம்மை வழிபட்டுத் தருத்து வார்கள்.

என்ற திருவிளையாடற் புராணச் செய்யுளானறிக "பரிவினுலவர்க்குத் தகுதியின்வேண்டுவ கொடுத்தும்" என்றார். அன்புளவழி இட்டவை சிறத்தலும், அஃதில்லாவழி அவைசிறவாமையும் நோக்கி. இவற்றை,

நாலடியாரில்.

கழுநீருட் காரடகே னும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிர்தாகும் — விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய். என்றும்,

குசேலோபாக்கியானத்தில்.

அரியவன் பணிற்கொடுத்த விழிந்தநீர் பினுஞ்சிறந்த
திரியுமன் பணிற்கொடுத்த விழிந்ததே சிறந்ததேனும்.
பெரியவர் புகழப்பட்ட பெருந்தவக் குசேலமேலா
னரியவன் பிணையுமூட்டி யொருபிடி யவறின்றனே. என்றும்,

பிரபுலிங்கலீலை.

ஆதர விலையேயல் வேண்டி மறுத்தினிற் பொருளோர் செம்பொற்
பூதர வளவளித்தும் பொருளழி வளவே யாகும்
ஆதர வுளதே னல்கும் பொருளணு வளவென் றாலும்
பூதர மெனவளர்ந்து புண்ணிய பொருளளிக்கும்,

ஆதர வுடையான் செய்யு மல்லவு நல்ல வாகு
மாதர விலாதான் செய்யு நல்லவு மல்ல வாகு
மாதர வதனு லாவிக் கருந் துணை யின்ப முத்தி
யாதர வலாது வேறொன் றளித்திடக் கண்டதுண்டோ. என்றும்,

கம்ப ராமாயணம்.

முன்பிற் சிறந்தா ரிடையுள்ளவர் காதன் முற்றப்
பின்பிற் சிறந்தார் குணநன்றிது பெற்ற யாக்கைக்
கென்பிற் சிறந்தாயதோ ரூற்றமுண் டென்ன லாமே
யன்பிற் சிறந்தாயதோர் பூசனை யார்க ளுண்டே.

வருநதே னதுவென் றுணை வானவன் வைத்த காத
லருந்தே னினியாது மென்னுளை நிரம்பி னல்லாற்
பெருந்தேன் பொழிசார னின்னன்பு பிணித்த போதே
யிருந்தே னுகர்ந்தே னிதினுங் கினியீவ துண்டே. என்றும்,

ஔவையார்.

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
வன்பில்லா ளிட்ட வமுது.

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—உரம்பெருத்த
புள்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும். என்றும்,

கூறுவனவற்றா லுணர்க.

16. **பாங்குடைய நெறியின்கட் பயில்பரம தத்தனுக்கு**
மாங்கனிக ளோரிரண்டு வந்தணைந்தார் சிலர்கொடுப்ப
வாங்கவைதான் முன்வாங்கி யவர்வேண்டுங் குறையளித்தே
யீங்கிவற்றை யில்லத்துக் கொடுக்கவென வியம்பினான்.

17. **கணவன்றான் வரவிடுத்த கனியிரண்டுங் கைக்கொண்டு**
மணமலியு மலர்க்கூந்தன் மாதரார் வைத்ததற்பின்

பணவரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்ட
ருணவின்மிகு வேட்கையினு லொருவர்மனை யுட்புகுந்தார்.

உணவின்மிகு வேட்கையினு லொருவர்மனை யுட்புகுந்தார், என்றமையின், ஈண்டுப பசி நோயின்றன்மை அறியத்தகுந்ததாயிற்று, அதனை,

கொழுந்துவிட டெரியு முத்தழல் வளர்க்குங்
  கோதிலா முனிவருந் சிறுர்க
ளழுந்துபட் டேங்க வெழும்பசி யொழிக்க
  வனாமிலா தயங்கினா ரந்தோ
முழுங்குரீ பொன்பான் புராணன் னோர்ந்தோர்
  மூபலா துயிர்நிற்கு மென்று
வழங்குவ ரசொன் மறிதினைக் கடலெருப்
  பண்ணிடத் நண்மையேய யாமே, என்னுங்

குசேலோபாக்கியானச் செய்யுளானும்,

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்து போம்.

என்ற நல்வழிச் செய்யுளானு முணர்க.

18. **வேதங்கண் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு**
நாதன்ற னடியாரைப் பசிதீர்ப்பே னெனநண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதந்தீர் நல்விருந்தா யின்னடிசி லூட்டுவார்.

வேதங்கள் மொழிந்த பிரான் என்றது நான்கு வேதங்களை நான்கு திருமுகங்களாற் குருபரம்பரை விளங்கக்கூறியருளிய சிவபெருமானை னப் பொருள் கொள்ளுதலை

"மறை முதற் கிளந்த வாயான்" என்னுஞ் செய்யுளாலும்,

வேதமே முதலா யுள்ள வியன்கலை யனைத்துந் தொன்று
ளோதினு னவனே யெங்கட் குரைத்திட வுணர்ந்தா மன்றே

யீதுநீ யவற்றிற் காண்டி யாருமொன் றாகக் கொண்டாய்
பேதையே பெரிது மென்னப் பிதாமக னினைய சொற்றான்.'

என்னுங்

கந்தபுராணச் செய்யுளானும்,

ஆதி யானை யமரர் தொழப்படு
நீதி யானை நியம நெறிகளை
யோதி யானை யுணர்தற் கரியதோர்
சோதி யானைக்கண் டீர்தொழற் பாலதே.

ஓதித் தொருநூ லுமில்லை போலு
 முணரப் படாததொன் றில்லை போலுங்
காதிற் குழையிலங்கப் பெய்தார் போலுங்
 கவலைப் பிறப்பிடும்மை காப்பார் போலும்
வேதத்தோ டாறங்கஞ் சொன்னார் போலும்
 விடஞ்சூழ்ந் திருண்ட மிடற்றார் போலு
மாதிக் களவாகி நின்றார் போலு
 மாக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே.

என்ற தேவாரங்களானும்,

இன்னும், 'வேதங்கள மொழிந்தபிரான்' என்றதற்கு வேதங்களால் மொழியப் பட்டவனெனப் பொருள்கோடலு மொன்று. அதனை,

மறைமுதல் கலைக ளெல்லா மணிமிடற் றவனே யெங்கு
நிறைபர மென்றும் பூதி சாதன நெறியீ தென்று
மறைகுவ தறிந்துந் தேறா ரறிவெனக் கலந்தி யாந்த
முறையின்வீ டுணர்ந்தோர் போலத் தெளிந்தது மறி வெள்ளம்

எனவருந் திருவிளையாடற் புராணச் செய்யுளானறிக.

'மெய்த்தொண்டர் நிலை' யென்பதைப் பின்வருஞ் செய்யுட்களிற் கூறி யுள்ளவாறு கொள்க.

சிலப்பதிகாரம்

ஞான நன்னெறி நல்வரம் பாயோன்
றானங் கொள்ளுந் தகைமையின் வருவோன்
றளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வளைந்த யாக்கை மறையோன்.

சீவகசிந்தாமணி.

அணங்கர வுரித்ததோ லனைய மேனியன்
வணங்குநோன் சிலையென வளைந்த யாக்கையன்
பிணங்குநூன் மார்பினன் பெரிதோர் புத்தக
முணர்ந்துழப் பெழுதின தொப்பத் தோன்றினான்.

ஆசிரியர் மெய்த்தொண்டரென்றாரேனுஞ் சிவபிரானே அடியவருருக் கொண்டெழுந்தருளின ரென்பது ஸ்தலபுராணத்தின் துணிபு.

'நாதன்றனடியாரைப் பசி தீர்ப்பேன்' என்பதனால் புனிதவதியாருக்கு மாகேசுரபூசையிலுள்ள உறுதியை விளக்கினாராசிரியர். சிவனடியார்களைச சாதிகுணங்குறியாது சிவனெனவே புத்திபண்ணவேண்டு மென்பதற்குப் பிரமாணமாகப் பின்வருஞ்செய்யுட்களைக கொளக

தேவாரம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத தருவ ரேனு
மங்குவா ரவர்செல்வம் மதிப்போ மல்லேம
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகி
லங்கமெலாங் குறைநதழுகு தொழு நோயரா
யாவுரித்துத் தின்றுழலும புலைய ரேனுங
கங்கைவார் சடைக்கரநதார்க் கன்ப ராகி
லவரன்றே யாமவணஙகுங் கடவு ளாவார.

சிவதருமோத்தரம்.

புலையரே யேனு மீசன் பொலன்கழ லடியிற் புநதி
நிலையரே லவர்க்குப பூசை நிகழ்ததுத னெறியே யென்றுந
தலையரே யெனினு மீசன் றமரைத் தாளி னேச
மிலரெனி லியற்றும் பூசைப பலநதரு வாரே யாரே.

பிரமோத்தரகாண்டம்.

எள்ளற் படுகீழ் மக்களெனு மிழிந்த குலத்தோ ரானும்
வள்ளற பரமன் றிருநீறு மணியு மணிநத மாண்பினரை

யுள்ளத் துள்ளே யிருபோது முணர்ந்து தெருண்டு சிவனெனவே
கொள்ளத் தகைய வறிவினரே பிறவிக் கடலிற் குளியாதார்.

பிரபுலிங்கலீலை

பந்த மகன்ற சிவபத்தர் பாதம் விளக்கும் புனற்குழியில்
வந்து பிறந்து மூழ்கியதில் வைகும் புழுவின் பெரும்பேறு
முந்து கங்கை முதலவா முற்றும் படிந்து தீவினைகள்
சிந்து மந்த ணூளருமே சேரா ரென்று மறைசாற்றும்.

வேறு.

விள்ளரு நற்சிவ வேடத் தோர்பொருள்
கொள்ளைகொள் கிற்பினுங் குறைகள் கூறினும்
பிள்ளையை யறுப்பினும் பிழைகள் செய்யினு
மெள்ளுத லிலனெனி லீசற் கன்பனே.

சங்கமந் தனக்கொரு சாதி யுன்னினெ
னங்கையி னமர்தரு மரற்கு முன்னினேன்
சங்கர னெடுசரந் தம்மில் வேறெனு
மங்கவ னறிவரு மளற்ற ழுங்குவான்.

இம்மாகேசுர பூசையிற் சிறந்த புண்ணியம் பிறிதில்லையென்பதை மேல்வரும் பிரமாணங்களாலறிக.

திருமந்திரம்.

படமாடக் கோயிற் பரமற்கொன் றீயி
னடமாடுங் கோயி னம்பற்கங் காகா
நடமாடுங் கோயி னம்பற்கொன் றீயிற்
படமாடுங் கோயிற் பரமற்கங் காமே.

தண்டறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமு முண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தி யெடுத்திசைத் தானே.

அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்

பரம யோகி பகலூண் பலததுக்கு
நிகரில்லை யென்பது நிச்சயந் தானே.

ஆறிடு வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதின்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனி லோர்பிடி பேறது வாகுமே.

தேவாரம்

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

தாயுமானசுவாமிகள்

மறமலி யுலக வாழ்க்கையே வேண்டேன்
வந்துநின் னன்பர் தமபணியா றறமது நினைக்கின்.

அருணாசல மான்மியம்.

சோணாசலத்தி னுயர்ந்த க்ஷேத்திர மில்லை
பஞ்சாக்ஷரத்தி னுயர்ந்த மந்திர மில்லை
மகேச்சுரருபத்தி னுயர்ந்த தரும மில்லை
சிவாகமத்தி னுயர்ந்த சாஸ்திர மில்லை.
"பாதங்கள் விளக்க நீர் முன்னளித்து" என்றார்.

அதிதியானவன் தன் வீட்டிற்கு வந்தமாத்திரத்தில காலகழுவ நீர் தருதல் முன்னஞ் செய்யவேண்டிய உபசாரமாதலினாலே இதனை வடநூலார் பாத்தியமென்ப. இவ்வுபசாரத்தை மநுதாமசாஸ்திரம் ௩-ம் அத்தியாயம் 99-ம் சுலோகத்தில் "வீட்டிற்குச் சுயமாக வந்த அதிதிக்குக் காலுக்குத் தண்ணீர்கொடுத்து ஆசனத்திலுட்காரவைத்துத் தன் வீட்டிலிருக்கும் பதார்த்தங்களுடன் அன்னமிட்டு விதிப்படி யுபசாரஞ் செய்யவேண்டியது" என்று கூறியிருத்தலைக் கொண்டும், திருவிளையாடற் புராணத்தில்,

நவமணிக் கலன்பூத் தபூங் கொப்பரி னட்ட நீர்
துவரிதழ்க்கனி வாயினள் சுவாகதங் கிலைவென்

றுவமையற்றவர்க் கருக்கிய மாசன முதலிய
பவமகற்றிய வடிமலர் பரவு பூசைப் பணிந்தாள். எனவும்,

சீவகசிந்தாமணியில்

நானமுறைத் தாங்குநறு நீரவளை பாய
மேனிகிளர் வெண்டுகிலும் விழுப்பொனியல் பூணும்
பானலங்கொ ணங்கிலவி பவித்திரமு நல்கத்
தானமர்ந்து தாங்கியமை தவிசினமிசை யிருந்தான் எனவுங்
கூறியிருத்தலைக் கொண்டுமறிக.

19. **கறியமுதங் குதவாதே திருவமுது கைகூட**
வெறிமலர்மேற் றிருவனையார் விடையவன்ற னடியாரே
பெறலரிய விருந்தாநற் பேறிதன்மே லில்லையெனு
மறிவினரா யவரமுது செய்வதனுக் காதரிப்பார்.

"அடியாரே பெறலரிய விருந்தாநற் பேறிதன்மே லில்லையெனும் அறிவினராய்" என்று அம்மையாருக்குச் சங்கமபத்தியிலுள்ள ஊற்றத்தை விளக்கினார். அவ்வூற்றத்திற்குக் காரணமான அந்தப் பத்தியின் மாக்ஷியை:

கற்றவர் கடவு டானஞ் சேர்ந்தவர்க் களைக ணில்லா
ரற்றவ ரந்த ணாள ரன்றியு மனைய நீரார்க்
குற்றதோ ரிடுக்கண் வந்தா லுதவுதற் குரித்தன் றாயிற்
பெற்றவிவ் வுடம்பு தன்னாற் பெறும்பய னில்லை மன்றோ. என்ற

சூளாமணிச் செய்யுளாலும்,

அங்கவரைக் காணப் பெறுகிற்றிற் கங்கைநீ ராடற் பேறு
மங்கவர்பாற் பேசப் பெறினகில தீர்த்தமுந் தோய்ந்தோ ராவ
ரங்கவர்க்குச் செய்பூசை யண்டருக்கு மூவருக்கு மாகுங் கண்டா
யங்கவர்க்கே தான மளிப்ப ரவர்தம்பா லேற்பர்நல்லோர்." என்ற

காஞ்சிபுராணச் செய்யுளாலும்,

தேவர்க டேவ னங்கோர் சீர்கெழு மறையோன் போலாய்
மேவிய காலை யம்மை விரைந்தெதி ரேகி மற்றென்
காவலர் தம்பா லன்ப ரிவரெனக் கருதி யன்னான்
பூவடி வணங்கி வேண்டும் பூசனை புரிந்து நின்றாள்.

என்று உமையவளுக்கே அடியார் பத்தியிலுள்ள ஊற்றத்தை விளக்கி வருங் கந்தபுராணச் செய்யுளானும்,

அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்து
ளதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்று
ளதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை
யதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய். என்ற

திருவிளையாடற்புராணச் செய்யுளானும்,

வீட்டு நன்மை விளைநில மாயிலோர்
நீட்டு தங்கா மென்று நினைதகருண்
மாட்டு வித்தென வந்திரா போர்கரத
தீட்டு வான்பொரு ளெண்ணில தாமரோ. என்னுந்

தேம்பாவணிச் செய்யுளானுமறிக.

20. **இல்லாளன் வைக்கவெனத் தம்பக்கன் முன்னிருந்த**
நல்லநறு மாங்கனிக ளிரண்டினிலொன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினு
லல்லறீர்ப் பவரடியார் தமையமுது செய்வித்தார்.

படைத்து மனமகிழ்ச்சியினுலென்றது அறப்பயனை முற்றுணர்ந்த புனி தவதியார் ஈந்துவத்தலைவிளக்கியவாறு; ஈதன் மாட்சிமையைப் பின்வருஞ் செய்யுட்களானுணர்க.

குறள்.

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீதலி யையாக் கடை.

நல்லா றெனினுங் கொளறீது மேலுலகை
மில்லெனினு மீதலே நன்று.

அற்று ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றுன் பொருள்வைப் புழி.

மணிமேகலை.

ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோ
ராற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே.

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது
தானஞ் செய்யென ....

சீவகசிந்தாமணி.

முருந்தனைய தூமுறுவன் முற்றிழையார் சேரி
யிருந்திளமைக் கள்ளுண் டிடைதெரித லின்றிக்
கருந்தலைகள் வெண்டலைக ளாய்க்கழியா முன்னே
யருந்தவமுந் தானமு மாற்றுமினே கண்டீர்.

உடற்றும் பிணித்தீ யுடம்பினுயிர் பெய்திட்
டடுத்துணர்வு நெய்யாக வாற்றறு வையாகக்
குடித்துண்ணுங் கூற்றங் குடில்பிரியா முன்னே
கொடுத்துண்மின் கண்டீர் குணம்புரிமின் கண்டீர்.

வேறு.

கருங்கடற் பிறப்பினல்லால் வலம்புரி காணுங்காலைப்
பெருங்குளத் தென்றுந்தோன்றா பிறைநுதற் பிணையனீரே
யருங்கொடைத் தானமாய்ந்த வருந்தவந் தெரியின்மண்மேன்
மருங்குடை யவர்கட்கல்லான் மற்றையர்க் காவதுண்டே

அட்டுநீ ரருவிக்குன்றத் தல்லது வயிரந்தோன்றா
குட்டநீர்க் குளத்தினல்லாற் குப்பைமேற் குவளைபூவா.

விட்டுநீர் வினவிக்கேண்மின் விழுத்தகை யவர்களெல்லாற்
பட்டது பகுத்துண்பாரிய பார்மிசை யில்லையன்றே.

நரம்பொலி பரந்தகோயி னன்னுதன் மகளிர்தாமும்
பெரும்பலிச சோற்றினீதல் பெரிதரி தாகுமேனும்
கரும்பொலி கோதையார்த மனைவயிற் றாண்டோறாட்டு
மரும்பலி யனைத்துமீயி னதுபொருட் குன்றுகண்டீர்.

அற்றவர் வருத்தநீக்கி யாருயிர் கொண்டுநிற்குந்
துற்றவீ யீதல்செம்பொற் றுறக்கத்துக் கேணியாகு
முற்றுயி ரோம்பித்திங்கே னூறென்று துறப்பின்யார்க்கு
மற்றுறை யில்லையாண் டூமவிண் ணுநுமடி யவன்றே.

வேறு.

மாசித்திங்கண் மாசின சின்னத் துணிமுள்ளி
னூசித்துன்ன மூசிய வாடை யுடையாகப்
பேசிப்பாவாய் பிச்சையெனக் கையக லேந்திக்
கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்.

நாலடியார்.

எத்துணை யானு மியைந்த வளவினாற்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்—மற்றைப்
பெருஞ்செல்வ மெய்தியக்காற் பின்னறிது மென்பா
ரழிந்தார் பழிகடலத் துள்.

துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும்.

எனதெனதென் றிருக்கு மேழை பொருளை
யெனதெனதென் றிருப்பன் யானுந்—தனதாயிற்
றானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது.

முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள — கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

இம்மி யரிசித் துணையானும் வைகலு
நும்மி லியைவ கொடுத்துண்மின் — உம்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர்.

நடுவூருள் வேதிகைச் சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச — வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்க
ளிடுகாட்டு ளேற்றைப் பனை.

இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்று
மறப்பயன் யார்மாட்டுஞ் செய்க — முறைப்புதவி
னையம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்ப
ரிடித்து முழங்கியதோர் யோசனைபோர் — கேட்ப
ரடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

குசேலோபாக்கியானம்.

ஒருசிறு தருமமேனு முஞற்றிடா திரப்போர்வந்து
தருநிகர் கரத்தாயென்று சாற்றினுங் கொள்ளாராகிக்
கருணைசற் றின்றியெல்லை கடந்திடத் துரந்துமீள்வார்
மருவுபல் கிளையுமோம்பார் வளம்படைத் தென்பெற்றாரே.

கைப்பொருள் பெற்றஞான்றே கடவுளா லயத்திற்கிந்து
மெய்ப்படு புராணநூல்கள் விருப்பொடு கேட்டுவந்தும்
வைப்பென விரப்போர்க்கீந்தும் வருபவ ருளரேற்கூற்ற
மொய்ப்புயத் தண்டந்தப்பி முன்னவ னின்பத்தாழ்வார்.

அறநெறிச்சாரம்.

செல்வத்தைப் பெற்றால் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்ல
தான மறவாத தன்மையரேல் அஃதென்பர்
வானத்து வைப்பதோர் வைப்பு.

கந்தபுராணம்.

துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவு நல்கி
யிறந்தவர்கள் காமுறு மிருங்கட னியற்றி
யறம்பலவு மாற்றிவிருந் தோம்புமுறை யல்லாற்
பிறந்தநெறி யானுளதோர் பேருதவி யாதோ.

காஞ்சிப் புராணம்.

கொடையே யெவர்க்கு மெய்ப்பேறுங்
கொடுக்கு நெறியிற் பிறழாத
கொடையே யாருந் தன்வழியி
னொழுகச் செய்யுங் குறைதீர்ந்த
கொடையே பகையை யுறவாக்குங்
குலவும் பூதமனைத் தினையுங்
கொடையே புரக்குமென் றுள்ளங்
கொள்ளப் புகன்றான் கவுதமனே.

தணிகைப் புராணம்.

திரைசெய் நீர்விழுஞ் சிலையினைப்
புணையன்றிச் சிலைகரை யேற்றாற்
புரைசெய் பாவத்தி னழுந்தினோர்
தமைப்புரை யொழிந்தவர் தாமன்றி
நிரைசெய் மேற்கதி செலுத்தவல்
லாரலர் நிகழ்கரி சினரற்றா
லுரைசெய் பாத்திர மபாத்திர மறிந்தளித்
தொழிக்க நற்பயன் வேட்டோர்.

தருக்குறுஞ் செல்வமெய்திற் றருக்கினாற் பிழைகளெல்லாம்
பெருக்குநல் கூரினந்தோ பிறருழை யிரந்து சேறன்
மரித்தலிற் றுயரமீண்டும் வந்தவர்க் கிரக்கமற்றுக்
கரத்தன்மற் றதனினூங்குக் கடுந்துய ரறிவிலார்க்கே.

விநாயக புராணம்.

இரப்பவன் வாளாதேக விலனெனு மெவ்வங்கூறு
திரப்பினை யிரப்பனன்று மிதனினன் றுவதாகு
மிரப்பவ னிலனெனன்றூர வியம்பியவெவ்வஞ் சொலலென்
றிரப்பினும் பிறர்பாற்கூறு திரக்கமோ மடதன்மைநதா

சாதல்வந் தடுத்தகாலுந தனக்கொரு சாதலின்றிப
பூதல மிறக்குங்காலும புகழுடம பிருக்குமந்தக்
கோதறு புகழின்யாக்கை கொடையினாற் செல்வங்கூர
வாழ்தலை யுடையாரன்றே வானமும் வணங்குநீரார். [தானே

வைத்துப பொருளைத் தானுகரான் வழங்கா னிருந்துஞ் செத்
செத்த பின்ன ரென்செய்வான் பியார் கொள்வ ரீட்டுதலான்
மெத்தும் வருத்த மேயன்றி வேறொன் றில்லை யாதலினாற்
பொத்தும் வெறுக்கை நன்றியுறல் புசிதது வழங்க லேயாகும்.

கூவத்துப் புராணம்.

மனைகடோறுமுற் றிரந்திடு கபாலியுண் மகிழ
வனகமால்விடை யூர்நதுவந் தெளிதினி லருளக
கனைகருங்கட லுலகினிற் செய்வது கருதின்
வினைகடீர்ந்திடு தானமே யன்றிவே றுளதோ.

இகத்தி னன்கொடைப் பெருமையை யறிநதுளோ ரில்லென்
றகத்தி னுமமு முரைசெயா ரவாரி தாகத
தொகுத்த வோர்பொரு ணல்குவ ரென்பதென் றுணிந்து
மிகுத்த வாவியுங் கொடுப்பரால் வேண்டுமுன் விரும்பி.

பட்டினத்தடிகள் பாடல்.

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்துமண் மே
லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற

குறிக்கும்செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திறக்குங்குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே

நாயாய்ப்பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியுந்
தாயார்வயிற்றி னரராய்ப்பிறந்து பின்சம்பன்னராய்க்
காயாமரமும வறளாங்குளமுங் கல்லாவுமென்ன
வீயாமனிதரை யேன்படைத்தாய் கச்சியேகம்பனே.

முற்றொருவர்பிற் செய்த முறைமையால் வந்தசெல்வ
மிற்றைநாட் பெற்றோமென் றெண்ணாது பாரப்பனமே
யற்றவர்க்கு மீயாம லன்பூசை யேயாராமற்
கற்றவர்க்கு மீயாமற் கண்மறந்து விட்டனையே.

நன்னெறி.

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்றுபுயன் முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்றன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

திரிகடுகம்.

ஈதற்குச் செய்க பொருளை யறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாது
மருள்புரிந்து சொல்லுக சொல்லை யிம்மூன்று
மிருளுலகஞ் சேராத வாறு.

இல்லார்க் கொன்றீயு முடைமையு மிவ்வுலகி
னில்லாமை யுள்ளு நெறிப்பாடு—மெல்லுயிர்க்குத்
துன்புறுவ செய்யாத தூய்மையு மிம்மூன்று
நன்றறியு மாந்தர்க் குள.

நீதிநெறிவிளக்கம்.

வள்வன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோ
னல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
யருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்.

இராமாயணம்

வெள்ளியை யாதல விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லா
லெள்ளுவ வென்சில வின்னுயி ரேனுங்
கொள்ளுத றீது கொடுப்பது நன்றால்

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொடு ரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனு
மீந்தவ ரல்ல திருந்தவர் யாரே.

சிறுபஞ்சமூலம்.

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சா
னிகழ்ந்தவை யின்புறா னில்லார்—மொழிந்தவை
மென்மொழியா னுண்ணெறிற் றிவானேல் விண்ணோரா
லின்மொழியா லேத்தப் படும்.

புறப்பொருள் வெண்பாமாலை.

முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையு
மெல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
யிரவாம லீந்த விறைவர்போ னீயுங்
கரவாமை யீதல் கடன்.

தேம்பாவணி.

வீட்டு நன்மை விளைநில மாதிமேலோர்
நீட்டு தங்கர மென்று நினைக்க கரங்கள்

மாட்டு வித்தென வந்திரப் பார்கரத்
தீட்டு வான்பொரு ளெண்ணில தாமரோ.

*ஈய்ந்து தாமுமில் லாரென வாயபின்
காய்ந்து தீய்ந்த குளங்கடி தோண்டெறுத்
தோய்ந்து லாயரு ளாற்றொழில் செய்துயிர்
வாய்ந்து வாழ்வு மீகை வழங்குவார்.

உழுதுண் பாருயிர் வாழ்பவர் மற்றெலாந்
தொழுதுண் பாரெனிற் றுந்தொழில் செய்தபின்
ணுழுதுண் பார்கொடை கோடலில் லாயின
பொழுதுண் பாரிலி யாரெனப் பூசவே.

நாக் கணங்கு கனிந்து நவின்றசொல்
நோக் கணங்கு கண்ணோடட நொதுத்தகை
யூக் கணங்கிடுந் தானமென் றுள்ளுவார்
கோக் கணங்கொடு வோங்கு குலத்தினர்.

நீதி நூல்.

சாந்தமார் வறியர்போலத் தற்பரன் வருவான்றுவென்
றேந்துகை வீடுகொள்ளென் றேந்துகை யாமக்கையி
னீந்தபொன் விலைபோல்வீட்டுக் கிட்டபொன் னுமன்னுரைக்
காய்ந்திலை யென்போர்வெண் டோங்கதியென்பார்போலுமாதோ

இரவலர் தம்மையெள்ளு மேழைகா ளியம்பக்கேளீர்
நரகைமோக் கத்தைவிற்க நண்ணிய வணிகரன்னோர்
பரகதி யவரைத்தாங்கும பண்பினர்க் கீவரள்ளல்
கரவுளார்க் கீவரொன்னி னவர்தகை நழறலென்னே.

21. மூப்புறுமத் தளர்வாலு முதிர்ந்துமுடி கியவேட்கைத்
தீப்பசியி னிலையாலு மயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவையடிசின் மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயின்மென் குழன்மடவார் செயலுவந்து போயினர்.

மூப்புறுமத்தளர்வு என்றது வயோதிககாலத்தி லுண்டாகுந் தளர்ச்சி
யென்க. இதன் திறத்தை அருணகிரிநாதர் திருப்புகழில்,

"தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்துக்
கலகலெ னப்புக் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத்—தடுமாறி
தடிகொடு திக்கிக் கக்கல பெருத்திட்
டசனமும் விக்கிச சத்தி யெடுத்துச
சளியு மிகுந்துப பித்தமு முற்றிய—பலகாலுஞ்
சிலதயி லத்திட் டொக்க வெரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளிய வடித்துத் துற்றுட னுற்றிட்—டுயிர்போமுன்
சிலபுகழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடி யைப்பற் றித்தொழு துற்றுச்
செனன மறுக்கைக் குபரபு முத்திக்—கருள்வாயே
கலனை விசித்துப் பற்கறை யிட்டுப்
புரவி செலுத்திக் கற்கொடு வெற்பைப்
பகடு நடத்தித திட்டென வெட்டிப்—பொருசூரன்
கனபடை கெட்டுத் தட்டற விட்டுக்
குரைகடல் குக்குக் குக்கிட வெற்றிக்
களிமயி லைசசித் ரத்தி னடததிப்—பொருகோவே
குலிசன் மகட்குப பொற்புய முற்றுக்
குறவர் மகட்குச் சித்தமு முற்றுக்
குளிர்புன முற்றுத் தத்து புனத்திற்—றிரிவோனே
கொடிய பொருப்பைக் குத்தி முறித்துச
சமரம விளைத்துத் தற்பர முற்றுக்
குருகிரி யிச்சித் தத்தொ டிருக்கும்—பெருமாளே."

என்றுந் திவ்விய பிரபந்தத்தில்

முற்ற மூத்துக் கோலு ணையா முன்னடி நோக்கிவளைந்
திற்ற கால்போ றள்ளி மெல்ல விருந்தங் கிளையாமுன்
பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலை யூடுயிரை
வற்ற வாங்கி யுண்ட வாயான் வதரி வணங் குதுமே.

நீப்பனியி னீர்கையாலு மயர்ந்தணைந்த என்றதனாற் பனிநோயின் கொடுமையை விளக்கியபடி. அதனை மேல்வருஞ் செய்யுளிற் கூறியவாற்றானறிக.

மணிமேகலை.

குடிப்பிறப் பழிக்கும விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவிய தூ தீர்த்தோ
ரிசைச்சொ லளவைக் கென்னா நிமிராது.

சிற்க இத்திப் பசியானது குழவிகளாதி துறவிகளீறு வெவ்வுயிர்களையும் ஆற்றொணுத்துயரிலாழ்த்துவதென்பதும் தபோபலத்திற் சிறந்த கௌசிக மாமுனிவருமே வறட்கால மொன்றிலுற்ற கொடும் பசியைத் தணிப்பதன் பொருட்டு, நாயின் ஊனைத் தின்னப் புகுந்தாரென்பதும், மேல்வருஞ் செய்யுட்களில் விளங்குவன காண்க.

குசேலோபாக்கியானம்.

அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற் றில்லையென வழுமாலோர்சேய்
சிந்தாத கஞ்சிவாக் கிலையெனக்கன் றையெனப்பொய் செப்புமோர்சேய்
முந்தார்வத் தோர்சேய் மிசையபபோகும்போ தினிலொருசேய் முடுகி யீர்ப்ப
நந்தாமற் றச்சேயு மெதிரீர்ப்பச் சிந்துதற்கு நயக்குமோர்சேய்.

மணிமேகலை.

புன்மரம் புகையப் புகையழற் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி
னரசுதலை நீங்கிய வருமறை யந்தண
ணிருநில மருங்கின் யாங்கணுந் திரிவோ
னரும்பசி களைய வாற்றுவது காணான்
றிருந்தா நாயூன் றின்னுத லுறுவோன்.

விஸ்வாமித்திரமுனிவர் பசியின்கொடுமையால் நாயூன் தின்பதற்கு முயன்றாரென்பதை மனுஸ்மிருதி ௧0-ம் அத்தியாயம் ௧0௮-ம் சுலோகத்தினுங் காண்க.

22\. **மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா கியவணிக**
னுற்றபெரும் பகலின்க ணேங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் னீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாருங் கடப்பாட்டி னூட்டுவார்.

பொற்புற முன்னீராடி என்றார், இதற் கேற்ப

'உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலுந்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றுந
தூஉய மென்பார் தொழில்,

என்று நல்லாதனாரும் கூறுவர். கடப்பாட்டினூட்டுவார் என்றது கற்பினையுடைய புனிதவதியார் தங்கணவனை யூட்டு முறையினாலே யுண்பித்ததைக் கூறியபடி. இது கற்பிலக்கணங்களுள் ஒன்றாதலைப் பின்வருஞ் செய்யுட்களிற் காண்க.

குசேலோபாக்கியானம்.

மணமக னுடம்பு போற்ற வல்லவெண் மனைவி யேயென்
றுணர்வினோர் மொழியு மாற்ற முவள்செய நோக்கிய போலுந்
தணவறு மன்புஞ் சாந்தத் தன்மையு நன்மை யான
குணமுமோ ருருவங் கொண்டோர் குடிப்பிறந் தனைய நீராள்.

வேறு.

கணவன் றுய்த்திடக் கருதெ வற்றையு
மிணர்மென் கூந்தலா ரெடுத்தெடுத் தளித்
தணவ நின்றுப சரிப்ப தல்லது
குணமி லாரெனத் தடுத்தல் கொள்கையே.

வாயு முன்பிணி வகுத் தறிந்திடு
மாயுள் வேதிய ரகற்று மொன்றனை
நாய கன்கொள நயந்து நிற்பனேற்
றீய தென்பர்பின் சிந்தை நோவரே.

கண்டன் வேறொரு கருமம நெஞ்சகம்
கொண்டு மற்றைய குறைத் திருப்பினு
மண்டு மன்பின் யாதானுமம வைத்துக்கொண்
டுண்டு பாரெனு ஊட்டு நீரரே.

23. இன்னடிசில் கறிகளுட னெய்துமுறை யிட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்றான் மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர மாங்கனியி லிருந்ததனை நறுங்கூந்த
லன்னமனை யார்தாமுன் கொடுவந்து கலத்தளித்தார்.

24. மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த வினியசுவை யாராமைத் தார்வணிக
னினையதொரு பழமின்னு முளததனை யிடுகவென
வனையதுதாங் கொண்டுவர வணைவார்போ லங்ககன்றார்.

"பழமின்னமுள" என்றும் பாடபேதமுண்டு.

கொண்டுவரவணைவார் போல என்றது அம்மையார் தங்கணவனது விருப்பமறிந்தூட்டுமியல்பினராகலின் கணவர்கேட்டு மில்லையென்று சொல்ல நேர்ந்தமையான் மனந்தடுமாற அத்தடுமாற்றத்தால் யாதுந் தோன்றாது அங்கிருந்து விரைந்தகன்றாராகலின் அங்ஙனமகன்றமை கொண்டுவரச் சென்றமையைப்போன்றிருந்த தென்பாராகி "கொண்டுவரவணைவார்போலங் ககன்றார்" எனறாராசிரியர். "அனையதுதாஙகொண்டுவர வணைவார்போலங் ககன்றார்" என்பதை அம்மையார் கூற்றாகவாக்கின் வாய்மையல்லதை மனத்தின் கணின்று மகற்றவேண்டுவது கடனெனச்சிவாகமங்களுந் தருமசாஸ்திரங்களுமுறையிட மற்றொருகனியை அடியாருக்குப்படைத்துவிட்டமையின் அது தம்மிடமில்லையென்பதை ஐயந்திரிபற வறிந்தபுனிதவதியார் அக்கனியைக் கொண்டுவரவணைவார்போ லங்ககன்றது கபட நடிப்பாதலின் அவர் மீது குற்றமாகாதோவெனின், ஆகாது. சிவாநுக்கிரக மகிமையை முற்றுணர்ந்த பத்தசொரூபியாகிய புனிதவதியார் மெய்த்தொண்டருக்கு அளித்த பொருள் அழிந்ததன்று.

"எந்தாயென விரங்கு மெங்கண்மேல் வெந்துயரம் வந்தாலது மாற்றுவான்" என தம்மாலேயே பின்னர் துதிக்கப்படுபவனும்.

தேவாரம்.

வாயானை மனத்தானை மனத்துணின்ற கருத்தானைக்
கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்

தூயானைத் தூவெள்ளை யேற்றான்றன்னைச் சுடர்திங்கட்
சடையானைத் தொடர்ந்து நின்றென்
றாயானைத் தவமாய தன்மையானைத் தலையாய
தேவாதி தேவர்க் கென்றுஞ்
சேயானைத் தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் நானே.

தூண்டு சுடரனைய சோதி கண்டாய் தொல்லமரர்
சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க்
காற்ற வெளியான் கண்டாய்
வேண்டினார் வேண்டியதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லா
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே.

“கருத்தறிந்து முடிப்பான்” என்றும் “வேண்டினார் வேண்டியதே யீவான்” என்றும் பக்தரால்வியந்து கூறப்படுபவனும் “அடியவர்குறைவுதீர்த்தாண்டருள்வதே விரதம் பூண்ட” வனுமாகிய எல்லாம் வல்ல இறைவனிடஞ் செல்லின் பெறப்படாவரும் பொருளுமுளதோ வெனுமோருணர்வு உந்த, அங்ஙனஞ் சென்றாரெனினு மமையாதா? நிற்க.

பேய்பிடியுண்டாரது செயலெல்லாம் பேயின செயலாதல போலப் பசுபோதமற்றுச் சிவபோத முற்ற அம்மையாரின் செயலைச் சிவன் செயலாக்கினும் பொருந்தாதா? அன்றியும் பக்தி சாகரத்தின் மூழ்கிய மெய்த்தொண்டர்களின் செயல்களை மாயாந்த காரத்தினால் மூடிய லௌகிக வழக்கினெல்லைக்குட் பட்டனவா ?

மணிமேகலை.

“சிறையு முண்டோ செழும்புனல் மிக்குழீஇ”

என்பதிற் கிணங்கப் பக்தி பெருக்கெடுத்துப் பிரவகிக்கிற் பிரபஞ்ச நியாயமெனு மாணுமதற்குத் தடையாகுமா? இது காரணங்கொண்டே சிறுத்தொண்ட நாயனார், இயற்பகை நாயனார் முதலிய பக்தர்களின் செயற்கரிய செய்கைகளை ஊன் கண்ணானோக்கியிகழ் தலைதவிர்த்து ஞானக்கண்ணானோக்கிப் புகழ்வர் நல்லோர்.

25. அம்மருங்கு நின்றயர்வா ரருங்கனிக்கங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தா
டம்மனங்கொண் டுணர்தலுமே யவரருளாற் றாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று.

"ஜார்ச்குழலார்" என்றும் பாடபேத முண்டு.

நினைந்துற்ற விடத்துதவும் விடையவர் என்றது அடியவர்கள துன்பம் வந்தவிடத்திற் றம்முள்ளத்திற் சிந்தியவளவில் அவர்கட்கு விரைந்து வந்துதவுவார் இடபவூர்தியே யென்னும் பொருளது. இங்ஙனம் கடவுள் அடியவர்களை வந்து சம்ரக்ஷணைச் செய்வதைக் கம்பராமாயணத்தில

நசைதிறந் திலங்கப் பொங்கி நன்றுநன் றென்ன நக்கு
விசைதிறந் துருமு வீழ்ந்த தென்னவே தூணின் வென்றி
யிசைதிறந் தமர்ந்த கையா லெற்றினா னெற்ற லோடுந்
திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்.

என்றும, பிரபுலிங்கலீலையில்

பொடியணிந் தெழில் பொங்குறு மல்லம
னடியர் தங்கள கத்திற் றுயரினை
யுடையி ழந்த வொருவன் கரமெனக்
கடிதடைந்து களைந்தருள் செய்யுநாள்,

என்றும, கஜேந்திர மோக்ஷத்தில்

பங்கயத் திருவை மார்பன் பணிமுடி நிழலைத் தேடான்
சங்குசக் கரமு மேந்தான் தன்னெதிர்த் தொழுது நிற்கு
மிங்கிதக் கருடன் மீதி லேறிடா னிபத்தைக் காக்கக்
கங்கையைப் பெற்ற பாத சாரியாய்க் கடுகி வந்தான்,

என்றும் வருவனற்று லுணர்க.

26. மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலு மயின்றதனி
லுற்றசுவை யமுதினுமேற் படவுளதா யிடவிதுதான்
முற்றருமாங் கனியன்று மூவுலகிற் பெறற்கரிதாற்
பெற்றதுவே றெங்கென்று பெய்வளையார் தமைக்கேட்டான்.

"அயின்ற கனியுற்றசுவை" என்றும் பாடபேதமுண்டு.

27. அவ்வுரைகேட் டலுமடவா ரருளுடையா ரளித்தருளுஞ்
செவ்வியபே ரருள்விளம்புந் திறமன்றென் றுரைசெய்யார்
கைவருகற் புடைநெறியாற் கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல் விட மாட்டார் விதிர்ப்புறுவார்.

"மடவாரருளுடையாரளித்தருளுஞ் செவ்வியபேரருள விளம்பும் திறமன்றென்றுரைசெய்யார்" என்றது பேதைமையென்பது மாதர்க்கணிகலம் என்னும் ஔவையார் வாக்கியத்தை யனுசரித்ததென்க. என்னை? பெண்ணிலக்கணங்களில் ஒன்றாகிய "மடம்" என்பது அவர்க்காபரணமாய விளங்குகின்றமையான் "மடம்" என்பது அறிவின்மையெனப்பொருள படினும் இஃது நியாயத்தானும் அனுபவத்தானும் பெண்களுக்காபரணமாகாமையுணரப்படுதலின அறிந்தும் அறியாதபோலிருத்தலுந் தம்பெருமிதத்தை வெளிக்குத் தோன்றாது மறைத்திருத்தலுமே இங்கு பெண்களுக கணிகலமாகக்கொள்ளப்பட்ட பேதைமைக்குப் பொருளாம் ஆதலின் அம்மையாரும் பரமேசனார் திருவருளைத்தாம் பெற்ற பெருமிதத்தைச்சொல்லுதல் திறமன்றெனமதித்து உரைசெய்யாராஞர் என்க. இப்பொருள்படவே இங்கு ஆசிரியர் அம்மையாரை மடவார் என்று குறிப்பித்தனர் போலும். பின்யாது சொல்லுவது என்பதை ஆலோசிக்குமிடத்துக் கணவரிடத்துப் பொய்மொழி கூறல கற்புடைய மகளிர்கருப் பெருங்குற்றமாவதை யுணர்ந்து யாது செய்வதென அஞ்சினார் என்பர் "கைவருகற்புடைநெறியாற் கணவனுரைகாவாமை மெய்வழியன்றென விளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார்" என்றாராசிரியர்.

28. செய்தபடி சொல்லுவதே கடனொன்றுஞ் சீலத்தான்
மைதழையுங் கண்டர்சே வடிகண்மனத் துறவணங்கி
யெய்தவருங் கனியளித்தா ரியாரென்றுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழன்மடவார் புகுந்தபடி தனைமொழிந்தார்.

"சீலத்தார்" என்றும் பாட பேதமுண்டு.

யாது செய்வதென அஞ்சியஅம்மையார்பேதைமை யென்னும் பெண்ணிலக்கணங்காவாமையானுங்கற்பிலக்கணக்குறைவுறககணவற்குப்பொய்மொழி கூறல் குற்றமாவதையுணர்ந்து நடந்தபடி சொல்லத்தலைப்பட்டார் என்பார் செய்தபடி சொல்லுவதே என்ற செய்யுளை அருளிசசெய்தார் ஆசிரியர்.

இவ்வொழுக்கத்தின் பெருமையைத் திருக்குறளில்

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று,

யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். என்றும்

கம்பராமாயணத்தில்

வாய்மை யென்னுமீ தன்றி வையகந்
தூய்மை யென்றுமொன் றுண்மை சொல்லுமோ
தீய்மை தானதிற் றீர்க லன்றியே
யாமெய் யாகவே யறைய லாவதே. என்றும்

சீவக சிந்தாமணியில்

மெய்யுரை விளங்குமணி மேலுலக கோபுரங்க
ளையமில நின்றபுகழ் வையகத்து மன்னு
மையல்வினை மாநரக கோபுரங்கள் கண்டீர்
பொய்யுரையும வேண்டா புறத்திடுமி னென்றான். என்றும்

பிரமோத்தர காண்டத்தில்

வாய்மைதப வினோர்களிந்த மானிலத்தி லீனராய்த்
தீய்மையுற்று மேலுமேளார் பழிக்கவே திரிந்துபின்
றூய்மையற்ற குமபியுட் டோந்தழுங்கு வாரெனா
வாய்மனுப்ப கர்ந்தவேத சாகைமுற்று மறையுமே. என்றும்

வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தில்

அண்ணிய கிளையு மில்லு மருப்பெரு மகவு மன்புந்
திண்ணிய சீரு மிக்க செல்வமுந் திறலுந் தேசு
மண்ணிய பொருள்கள் யாவு மியற்றிய தவமு மேனைப்
புண்ணிய மனைத்துஞ் சேரப் பொய்மையாற் பொன்று மன்றே,
என்றும்

நாலடியாரில்

தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல். என்றும்,

வளையாபதியில்

பொய்யி னீங்குமின் பொய்யின்மின் பூண்டுகொண்
டைய மின்றி யறநெறி யாற்றுமின்
வையகல வேதனை வந்துற லொன்றின்றிக்
கவ்வை யில்லுல கெய்துதல் கண்டதே.

கல்வி யின்மையுங் கைப்பொருள் போகலு
நல்லில செல்லல்க ளானவி வுண்மையும்
பொய்யிற் பொய்யொடு நிற்றற் காகுக
[illegible] கொள்ளாரின். என்றார்.

சிறுபஞ்சமூலத்தில்

இறைமை நலனழிக்கு மொப்பு [illegible]
பொறைமை யறநிறுத்தத் தாழ்விக்கு மெய்ம்மை
யறந்தேயு மின்னுரையா லெரிகணை நீக்கு
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய். என்றும்,

காஞ்சிப் புராணத்தில்

மெய்யே சிறந்த பெருநலமா மெய்யே யனைத்து நிலைபெறுத்து
மெய்யா லுலகங் கதிர்பிறவு நடத்துந் தொழிலின் விலகாவா
மெய்யே யனைத்து மிருப்பிடமா மெய்யே மெய்யே சிவமாகு
மெய்யே பரம பதமுமெனப் பகருமறை வினைதீர் காசினியே.
என்றார்,

கூவத்துப் புராணத்தில்

உவமந்தீர்ந்திடு வாய்மை யொன்றே யுறினுலகிற்
றவமுந்தானமு மொருங்குறச் செய்தவிற் றலையாய

பவமகன் றுநான் மறைமுடி வாகிய பரம
சிவனருமபதம் பெறும்படி யுயர்த்திடுந் தெரியின்.

மன்னனாகியிவ் வுலகெலாம புரந்திட வரினு
மின்னருறுனுழந் துடலம்விட் டிறந்திட வரினும
மன்னும்வாய்மையிற் பிறழ்ந்திடா தொழுகலிப் பவம்போய்
மின்னுலாஞ்சடை யெம்பிரான் பதம்புக வேண்டின். என்றும்,

அரிச்சந்திர புராணத்தில்

செய்மையண்மையி னுயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மையாலகந் தூய்மையா மற்றிலை புறத்தைத்
தூய்மைசெய்வது நீரலாற் றொல்லின் வேறுளதோ
சேய்மைசெய்பினும் வாய்மைபோ லேனையெனக் கருதி.

புலையனாகிருபா பாதகியா யுன்புலால் யாக்கை
நிலையெனாமருண் டுயிரினு நெடிதுறா சிறந்தே
தலைமைசேர்தரு சத்தியம் பிறழ்வது தவிரேல்
கலையுணர்ந்தநீ யெபாகநிது கழறுவ தழகோ

இம்மையம்மையின் டொன்பமுறு புலைத்தொழில் வியப்பு
மும்மையுந்தரு முறையுடைத் தெனுநிலை முழுதுணி
யெம்மையாழ்வினிற் றடக்கிட் டிமிழ்கடல் வெரிவாய்
வெம்மைகூர்நர குய்க்கினு மெய்ம்மையை விடேமால்.

பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தன மினிநமக் குளதென நினைக்குங்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றான்
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான். என்றார்,

“மைதழையுங் கண்டர்சேவடிகள் மனத்துறவணங்கி”யென்றது, அம்மையார் தாம் நடந்தபடி ஒளிக்காமற் சொல்லுங்கால் அது தற்புகழ்ச்சியாகாத வகையாகவும், அதைக் கணவனார் தம்பால மெய்ப்படுத்துமாறு வற்புறுத்து வாராயின் தாம் பொய்யராகாதவகைச் சிவாநுக்கிரகம் முற்பட்டு நிற்கும் வகையாகவும், மற்றும் அதுபற்றி வருவனவாய துன்பங்களுண்டானல் அவையும் நிவிர்த்தியாகும் வகையாகவும், எல்லாம் வல்ல இறைவன் திருவடியைச் சிந்தித்து வணங்கின், எல்லாக்கவலையும் ஒழியுமென்னுங் கருத்தான்

முன்னந்திருவடியைத் தியானித்து வணங்கிப் பின்பு வரலாற்றைக் கூறுவா ராயின ரென்னும் பொருளது. இங்ஙனம் எந்தக் கருமத்திலும் இறைவனது திருவடியை முன்பு சிந்தித்தே பின்பு பிரவேசிக்கவேண்டுமென்னுந் துணி பைப் பவணந்தியாசிரியர், நன்னூலில் :

ஈத லியல்பே யியம்புங் காலைக்
காலமு மிடனும் வாலிதி னோக்கிச்
சிறந்துழி யிருந்துதன் றெய்வம் வாழ்த்தி
யுரைக்கப் படும்பொரு ளுள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமின் மனத்தி னூல்கொடுத்த லென்ப. என்றும்,

சிவப்பிரகாச சுவாமிகள்.

பிரபுலிங்க லீலையில்

மழுவல முயரிய வள்ளல் வந்தனை
யழகுற வியற்றினை யாயி னல்லமன்
விழியெதிர் தோன்றிநீ மனத்து வேண்டிய
தொழிவற நல்குவ னுனக்கென் றோதினாள்.

பயனிலை யருச்சனை பயின்ற தென்றனை
யயனரி முதலிய வமரர்க் காயினு
நயமொடு சதாசிவ நாதன் பூசனை
முயலுத லன்றியோ ரெண்ண முற்றுமோ.

மலைமகள் குமர மகளிர் பாற்கட
லலைமகள் முனிவரில் லருந்ததி முதலியர்
கலைமகள் விழிநுதற் கடவுட் பூசையா
னிலைமைக ளெட்டுந் தமைநினைந் திலாய்கொலோ.

சித்திய மாயுளுஞ் சிறப்புங் காமிய
புத்திய ரடைவரப் புத்தி நீக்கினோர்
முத்தியை யடைவரெம் முதல்வன் பூசையாற்
சத்தியஞ் சத்தியந் தவமருங் குலாய்.

என்றுங் கூறுவனவற்றானுணர்க

29. ஈசனரு ளெனக்கேட்ட வில்லிறைவ னதுதெளியான்
வாசமலர்த் திருவனையார் தமைநோக்கி மற்றிதுதான்
றேசுடைய சடைப்பெருமான் றிருவருளே லின்னுமோர்
ராசில்கனி யவனருளா லழைத்தளிப்பா யெனமொழிந்தான்.

"இல்லிறைவ னதுதெளியான்" என்றமையால் அம்மையாருடைய பத்தியறிவொழுக்கங்களை மதிக்கும் ஸ்திரபுத்தி பரமதத்தனுக்கு இல்லை யென்பதுபோலும். அம்மையாருடன் பலநாள் மருவி யிருக்கப்பெற்றும் மூவுலகினும் பெறற்கரியதாய் அமிழ்தினும் மேற்பட்டசுவையுடைய மற்றோர் கனியைத்தரப்பெற்றும், அம்மையாருடைய மகிமையைத் தெளியமாட்டாமைக்குக் காரணம், பரமதத்தனிடத்திலுள்ள சித்தத் தெளிவின்மையே யென்று கொள்ளப்படுகின்றது. இத்தெளிவில்லாதவர்க்கு ஆன்றோர் ஒன்றை அறிவிப்பின் அது பயன்படாதென்பதைப் பிரபுலிங்கலீலையில:

ஒன்றையு முணர்கி லேனு னெங்குரு வுரைத்த வாற்று
லின்றள விலிங்க பூசை யியற்றியும் பயனொன் றில்லை
யென்றனள் பருவ முற்றோர்க் கிருமறை யுபதே சிப்ப
தன்றிவன் மனிதர்க் கோதி னதுபயன் படுவ துண்டோ.

என்றும்,

நெறிபல முறையு ரைத்து நினைந்தில னதனை யந்தோ
மறுகுறு மனத்த னாகி மாயையாற் கொண்டி ருந்தா
னறிவிலர்க் கறிவிப் பார்தா மறிவில ராவ ரென்று
வெறிமலர் வணர்வார் கூந்தல் விமலைதன் மனந் தளர்ந்து.

என்றும் வருவனவற்றானுணர்க.

30. பாங்ககன்று மனைவியார் பணியணிவார் தமைப்பரவி
யீங்கிதளித் தருளீரே லென்னுரைபொய் யாமென்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலு மற்றதனை
யாங்கவன்கைக் கொடுத்தலுமே யதிசயித்து வாங்கினான்.

வேறு.

31. வணிகனுந் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணான்
றணிவரும் பயமேற் கொள்ள வுள்ளமுந் தடுமா றெய்தி
யணிகுழ லவரை வேறோ ரணங்கெனக் கருதி நீங்குந் [காவில்
துணிவுகொண் டெவர்க்குஞ்சொல்லான் றொடர்வின்றி யொழுகு

'தொடர்வின்றி யொழுகலாவது தேசசம்பந்த முதலிய வில்லாமையின் மேற்று. இங்ஙனமே திருநீலகண்டர் புராணத்தும் :

கற்புறு மனைவி யாருங் கணவனா ரொக்க கான வெல்லாப்
பொற்புறு மெய்யு றுமற் பொருந்துவ போற்றிச் செய்ய
விற்புறம் பொழியா தங்க ளிருவரு மிவறு மைந்
யற்புறு புணர்ச்சி யின்மை யயலறி யாமை வாழ்ந்தார்.

என வருவதைக் காண்க.

32. விடுவதே யெண்ண மாக மேவிய முயற்சி செயவான்
படுதிரைப் பரவை மீது படர்கலங் கொண்டு போகி
நெடுநிதி கொணர்வே னென்ன நிரந்தபல் கிளைஞ ராகும்
வடுவில்சீர் வணிக மாக்கண் மரக்கலஞ் சமைப்பித் தார்கள்.

"படுதிரைப்பரவைமீது படர்கலங்கொண்டுபோகி நெடுநிதி கொணர்வேனென்ன" என்றதனாற் பரமதத்தனார் அம்மையாரை விட்டுப்பிரிதற்கோரேதுவாக 'திரைகடலோடித் திரவியந்தேடும்' செய்கையைத் தங்குலவியல்புக் கொத்தவாறு மேற்கொண்டனரென்பது பெறப்பட்டது. வைசியதருமத்திற்குக் கடல்யாத்திரைசெய்து முயற்சித்துப் பொருளீட்டித் தங்குலத்தைத் தாங்குதலானது விசேஷதமன்றென்பதைப் பின்வருஞ் சீவகசிந்தாமணிச் செய்யுட்களானுந் துணியப்படும்.

இங்கிவர்க ளிவ்வா றிருந்தினிது வாழச்
சங்குதரு நீணிதியஞ் சாலவுடை நாய்கன்
பொங்குதிரை மீதுபொரு மால்களிறு போன்றோர்
வங்கமொடு போகிநிதி வந்துதர லுற்றான்.

மின்னெழுகு சாயன்மிகு பூட்டாவுடை கேள்வன்
கொன்னெழுகு வேலியவ கத்துநன் குளிர்துங்குந்
தன்வழிய காளைநீ தந்தமனை யென்றும் போற
பொன்னெழுகு குன்றினுறை போர்ப்புலியெ டொப்பான்.

இம்மியன நுண்பொருள்க ளீட்டநிதி யாக்கிக்
கம்மியரு மூவர்களு மேருடைநுதல் சூட்டி
யம்மிமிதந் தாழ்ந்துசுரை வீழ்ந்ததறஞ் சாலகேன்
றம்மைவினை நொந்துபுலந் தாடலுணர் வன்றே.

உள்ளமுடை யான்முயற்சி செய்யவொரு நாளே
வெள்ளநிதி வீழும்விளை யாததனி னில்லை
தொள்ளையுணர் வின்னவர்கள் சொல்லின்மடி கிற்பி
னெள்ளினர்கட் கேக்கழுத்தம் போலவினி தன்றே.

செய்கபொருள் யாருஞ்செறு வாரைச்செறு கிற்கு
மெஃகுபிறி தில்லையிருந் தேயுமிரை யுண்ணு
மையமிலை யின்பமற மோடவையு மாக்கும்
பொய்யில்பொரு ளேபொருண்மற் றல்லபிற பொருளே.

தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
வோங்குகுலை நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந்தலை சாய்க்கவரு தீச்சொ
னீங்கன்மட வார்கள்கட னென்றுரைநூல் தான்.

33. **கலஞ்சமைத் ததற்கு வேண்டுங் கம்பிய ருடனே செல்லும்**
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப வேற்றிச்
சலந்தரு கடவுட் போற்றித் தலைமையா நாய்கன் றானு
நலந்தரு நாளி லேறி நளிர்திரைக் கடன்மேற் போனான்.

“**செல்லும் புலங்களில்** விரும்புபண்டம் பொருந்துவ” என்றார் அப் பண்டங்களின் பகுப்பை.

திருவிளையாடற் புராணம்.

திரையளிப்பவுந் திரைபடு நீமபுனல் வேலிக்
கரையளிப்பவுங் கரையிலா னிரைபடு கானத்
தரையளிப்பவுந் தரைகிழித் தூன்றிவிண் டங்குட
வரையளிப்பவும் வாங்கிவாய் மடுப்பன மாடம்.

பத்துப்பாட்டு: பட்டினப்பாலை.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கரி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்

தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவும் .....

என்ற செய்யுட்களில் வருமாறு கொள்க.

“பண்டம் பொருந்துவ நிரப்பப்போற்றி,” “கலந்தரு கடவுட் போற்றி,” “நலந்தரு நாளிபோற்றி” என்பர்.

கலமூர்ந்து கடலிற்செல்வோர் முறையிவை யாதலின். இங்ஙனமே ஸ்ரீ தத்தனென்பான் பொருளீட்டவெண்ணி மரக்கலமூர்ந்து கடலிற்செல்லுழிப்பண்டத்தைப் பெரிதாகவேற்றித் தெய்வத்தைத் தியானித்து நன்முகூர்த்தத்தையுங் கைக்கொண்டு சென்றதைப் பின்வருஞ் செய்யுட்களிற் காண்க.

சீவக சிந்தாமணி.

மோதுபடு பண்டமுனி யாதுமொரீஇ போற்றி
மாதுபடு நோக்கினவர் வாட்கண்மலர் சூற்ற
தாதுபடு தார்கெழிய தங்குவளை யாளன்
கோதுபட வில்லெழுதிக் கொண்டுபுகுந்து போந்தான்.

வானமுற நீண்டுயர்ந் பாய்மரத்தை வெள்ள
ருனமென வெண்டிரைகள் வெண்டிவண நல்லி
நானமிக நாறுகமழ் குஞ்சியவ னேறி
யூனமொனு மின்றியினி தோடுகவி தென்றான்.

34. **கடன்மிசை வங்க மோட்டிக் கருதிய தேயந் தன்னி**
லடைவுறச் சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கண் முற்றி
யிடைசில நாட்க ணீங்க மீண்டுமக் கலத்தி லேறிப்
படர்புனற் கன்னி நாட்டோர் பட்டன மருங்கு சேர்ந்தான்.

‘நாட்கள்’ ,பட்டிணம்,’ ‘சார்ந்தான்,’ என்றும் பாடபேதமுண்டு.

கன்னிநாடென்றது பாண்டி நாட்டினை. தடாதகைப்பிராட்டியார் கன்னிப்பருவத்தில் அரசியல் நடாத்திய நாடாதலால் அப்பெயர்த்தாயிற்று. இது

திருவிளையாடற் புராணத்து,

வரைசெய் பூண்முலைத் தடாதகை மடவரற் பிராட்டி
விரைசெய் தார்முடி வேய்ந்துதண் குடைமநு வேந்தர

கரைசெய் நூல்வழிக் கோல்செலக் கன்னியாம் பருவத்
தரசுசெய் தலாற் கன்னிநா டாயதந் நாடு.

என்ற செய்யுளான் விசதம்.

ஓர் பட்டினமென்றது பாண்டிநாட்டில் தாமிரபர்ணி யென்னும் பொருநையாறு சமுத்திரத்திற் சேருவதற்குச் சமீபத்திலிருக்கும் கனகலம் என்னும் நகரமெனக் கொள்க.

35. அப்பதி தன்னி லேறி யலகில்பல் பொருள்க ளாக்கு
மொப்பின்மா நிதிய மெல்லா மொருவழி பெருக வுய்த்து
மெய்ப்புகழ் விளங்கு மவ்வூர் விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை செய்தான்.

36. பெறலருந் திருவி னாளைப் பெருமணம் புணர்ந்து முன்னை
யறலிய னறுமென் கூந்த லணங்கனு டிறத்தி லற்றம்
புறமொரு வெளியு றாமற் பொதிந்தசிந் தனையி னோடு
முறைமையின் வழாமை வைகி முகமலர்ந் தொழுகு நாளில்.

"அணங்கனு திறத்தில அற்றம்" என்றது, பரமதத்தனார் அம்மையாரைப் பிரிந்தகன்றுபோன தோஷம். இங்ஙனம் மனைவியைவிட்டுப் பிரிவதனா லுறுந்தோஷத்தை,

காதலியைக் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ மாதர்
மளிக்கின்ற வாழ்விலா யாங்கலைந் தோடி
யொளிக்கின்ற தென்னோ வுரை.

என்று நளன் தமயந்தியைவிட்டுப் பிரிந்துபோய்த் தன்னைப் பாதகனுக்கிக் கூறிய நளவெண்பாச் செய்யுளானும்,

குழற்சிகைக் கோதை சூட்டிக் கொண்டவ னிருப்ப மற்றோர்
நிழற்றிகழ் மேனி யானை நேடிய நெடுங்க ணாளும்
பிழைப்பிலாட் புறநகர்ந் தானுங் குரவரைப் பேணல் செய்யா
திழுக்கினோ ரிவர்கள் கண்டா யிடும்பைநோய்க் கிரைக ளாவார்.

என்று மந்திரி ஒருவன் குற்றமில்லாத மனையாளைவிட்டுப் பிரியின் பெருத்தவியாதிகளான் நைவானென்று சுட்டியபுகாரனுக் குறைத்த சிந்தாமணிச் செய்யுளானும்,

திரிகடுகம்.

ஐங்குரவ ராணை மறுத்தலு மார்வுற்ற
வெஞ்சாத நட்பினுட் பொய்வழக்கு—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலு மிம்மூவர்
நற்புடையி லாளர் தொழில்.

என்ற நல்லாதனார் திருவாக்கானு முணர்க.

37. முருகலர் சோலை மூதூ ரதன்முதல் வணிக ரோடு
மிருநிதிக் கிழவ னென்ன வெய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலன்கள் போக்கும் புகழினன் மனைவி தன்பாற்
பெருகொளி விளக்குப் போலோர் பெண்கொடி யரிதிற் பெற்
[றான்.

"அதின் முதல்" என்றும் பாடபேதமுண்டு.

"பெருகொளி விளக்குப்போலோர் பெண்கொடி" என்று ஆசிரிய ருரைத்தவாறே,

அழகு சுமந்திளைத்த வாகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் றிருவுக்கோர் காப்பு

என்று நளவெண்பாவிலும்,

தூண்டொளி பொன்மக டோன்ற வுவப்புற்
றுண்டகை மன்னவ னந்தணர் கொள்ளப்
பூண்டுகின் மாமணி பொன்னில மற்றுப
வேண்டின யாவும வெறுப்பப வரித்தான்.

என்று பிரபுலிங்கலீலையிலும் வருமாறு காண்க.

38. மடமக டன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான்முன்
புடனுறை வஞ்சி நீத்த வொருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுல மென்றேகொண்டு
கடனமைத் தவர்த நாமங் காதல்செய் மகவை யிட்டான்.

"அவர்தநாமங்காதல்செய் மகவையிட்டான்" என்றது, அம்மையாருடைய திருநாமமாகிய புனிதவதியா ரென்பதைத்தன் மகவுக்குநாமமாக இட்டானென்றபடி. இவ்வாறு அடியவர்நாமங்களையும்,அவற்றுடன் பகவான் நாமங்களையுந் தம் புத்திராதிகட்கு இட்டழைப்பதியல்பே.

இவ்வியல்பைப் பரமதத்தனூர் போலவே அப்பூதியடிகளும் அநுட்டித்ததைப் பெரியபுராணத்தில்,

களவுபொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பா லுள்ள
வளவைக ணிறைகோன் மக்க ளாவொடு மேதி மற்று
முளவெலா மாசி ரியநா மஞ் சாற்றுமவ் வொழுக லாற்றார்.

என்ற செய்யுளானறிக.

39. இன்னிலை யிவணிங் கெய்தி யிருந்தன னிப்பா னீடுங்
கன்னிமா மதில்சூழ் மாடக் காரைக்கால் வணிக னான
தன்னிகர் கடந்த செல்வத் தனதத்தன் மகளார் தாமு
மன்னிய கற்பி னோடு மனையறம் புரிந்து வைக.

தன்னிகர் கடந்த செலவமென்றார் ஒப்பிலாத செலவமென்றற்கு. அச்செல்வத்தின் பெருமிதத்தைத் திருவிளையாடற் புராணத்தில் வணிகமாக்களின் செல்வப் பெருக்கைக் கூறும்.

பன்னி றத்தபல் பெருவிலைப் பட்டெலா மவண
வன்ன பட்டின்மேம் படுவிலைப் பருத்தியு மவண
வெந்நி லத்தரும் பொருள்பதி னெழுபல வணிகர்
மன்னி ருக்கையு மருள்பெறல் வளனெலா மவண.

மரக தத்திர ளம்மிகள் வைரவா ளுலக்கை
யுரல்கள் வெள்ளியா லடுப்பகில் விறகுலை பனிநீ
ரரிசி முத்தமுல் செம்மணி யடுகலன் பிறவு
மெரிபொனா லிழைத் தாடுப விவர்சிறு மகளிர்.

என்ற பாட்டுக்களில விரித்தாங்குக்கொள்க.

"மன்றிய கற்பினோடு" என்றார். அக்கற்பின்றன்மையைப் பின்வரும்மநுதர்மசுலோகத்தானுஞ் சிலப்பதிகார நீதிநூற் செய்யுட்களானும் பிறவற்றானுமறிக,

மநுதர்ம சாஸ்திரம், 9-ம் அத்தியாயம், 75-ம் சுலோகம் "கணவன் தேசாந்தரம் போயிருந்தபோது அவன் கொடுத்த பொருளை வைத்துக்கொண்டு அவன் வருமளவும் உயர்ந்த வஸ்திர பூஷணங்களை நீக்கி அயலகத்திற்குச் செல்லாமலிருக்க வேண்டியது."

சிலப்பதிகாரம்.

அஞ்செஞ் சீறடி யணிசிலம் பொழிய
மென்றுகி லல்குன் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகஞ் சிறுவியர்ப் பிரியச்
செங்கய னெடுங்க ணஞ்சன மறப்பப்
பவள வாணுதல் திலக மிழப்பத்
தவள வாணகை கோவல னிழப்ப
மையிருங் கூந்த னெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி யன்றியுங்
காதலர்ப் பிரிந்த மாதர் நோதக.

நீதிநூல்.

பூண்கள் மாலைகள் பொற்றுகில் சாந்தணி
மாண்பின் மங்கையர் வல்லவ னீங்கிடி
லாண்டு நீங்கி யடைந்தபின் மீளவுங்
காண்டல் கற்புடை யோர்கள் கவினெலாம்.

வல்லவ னகன்றதின மாதிமல ராடை
நல்லன நறும்படிவ நற்பணிகள் சேரேன்
சொல்லுமவ னெய்தினவை துன்னமகிழ் வோடு
மில்லின்முறை யாற்றுவ னிழுக்கற நலத்தால்.

உண்ணல்பூச் சூடனெஞ் சுவந்த லொப்பனை
பண்ணலெல் லாமவர் பார்க்க வேயன்றே

வண்ணாறன் பிரிவினை யறிந்துந் தோழிநீ
மண்ணவன் தனையிது மடமை யாகுமே.

வேறு.

உயிரிலாததோர் உடம்பினைப் பூண்களால் உடையால்
இயலும் மாலையாற் சாந்தினால் எழில்பெறச் செயல்போல்
அயலில் உள்ளபே றளித்தனை அன்பனை இன்றிப்
பயனி யாதுநீ பாவையர்க் குளதெனிற் பகாவாய்.

40. விளைவளம் பெருக்க வங்க மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர் மாநகர் தன்னின் மன்னி
யளவின்மா நிதிய மாக்கி யமர்ந்தினி திருந்தா னென்று
கிளரொளி மணிக்கொம் பன்னார் கிளைஞர்தாங் கேட்டா
[ரன்றே.

“வளர்புகழ்ப் பாண்டிநாடு” என்றதிற்புகழாவது நிலவளம், நீர்வளம், ஊர் வளம், பயிர்வளம், கூலவளம், பொருள்வளம், கோலவளம், அறவளம், சொல் வளமாகிய இவற்றைப்பற்றி வருங்கீர்த்தி. இங்ஙனமாய கீர்த்திக் கேதுவாகிய முன் கூறப்பட்ட வளங்கள் பாண்டிநாட்டுக்குரியன வென்பதைப் பின்வ ருஞ் செய்யுட்களானும் பிறவற்றானு மறிக.

திருவிளையாடற் புராணம்.—நிலவளம்.

வரைபடு மணியும் பொன்னும் வைரமுங் குழையும் பூட்டி
யுரைபடு மகிழுஞ் சாந்து மப்பியின் னறுநெய் யூட்டிக்
கரைபடு மருத மென்னுங் கன்னியைப் பருவ நோக்கித்
திரைபடு பொருனை நீத்தஞ் செவிலிபோல் வளர்க்கு மாதோ.

நீர்வளம்.

ஈறி லாதவ னொருத்தியே யைந்தொழி லியற்ற
வேறு வேறுபேர் பெற்றென வேலைநீ ரொன்றே
யாறு கால்குளங் கூவல்சுண் டகழ்நெடுங் கேணிபேர்
மாறி நின்றில வான பயிரெலாம் வளர்ப்பன மாதோ.

வேறு.

மறைவழி கிளைத்த வெண்ணெண் கலைகள்போல் வருநீர் வெள்ளத்
துறைவழி யொழுகும் பல்கால் சோலைதண் பழனஞ் செய்தே
னுறைவழி யோடை யெங்கு மோடிமன் னுடையார்க் கன்பர்
நிறைவழி யாத வுள்ளத் தன்புபோ னிரம்பிற் றன்றே.

தேவர்கோ னேவ லாலே திங்கண்மும் மாரி பெய்து
வாவியுங் குளனும யாறு மடுக்களு மடுத்துக் கல்வாய்க்
காவிசூழ் வயலுஞ் செய்யுஞ் செந்நெலுங் கன்னற் காடும
பூவிரி பொழிலுங் காவும பொலிந்தது கன்னி நாடு.

ஏர்வளம்.

பலநிற மணிகோத் தென்னப் பன்னிற வேறு பூட்டி
யலமுக விரும்பு தேய வாள்வினைக் கருங்கான் மள்ளர்
நிலமக ளுடலங் கிண்ட சால்வழி நிமிர்ந்த சோரிச்
சலமென நிவந்த செங்கேழ்ந் தழன்மணி யிமைக்கு மன்றே.

களமர்கள் பொன்னேர் பூட்டித் தாயாவாய்க் கனிந்த பாடற்
குளமகிழ் சிறாரி னேறு மொருத்தலு முவமை தாங்க
வளமலி மருதம் பாடி மனவலி கடந்தோர் வென்ற
வளமரு பொறிபோ லேவ லாற்றவாள் வினையின் மூண்டார்.

ஊறுசெய் படைவாய் தேய வுழுநரு நீர்கள் யாதுச
சேறுசெய் குநருந் தெய்வந் தொழுதுசெந் நெல்வீசி
நாறுசெய் குநரும் பேர்த்து நடவுசெய் குநருந் தெவ்வின்
மாறுசெய் களைகட் டோம்பி வளம்படுக் குநரு மானார்.

பயிர்வளம்.

புரையற வுணர்ந்தோர் நூலின் பொருளினு ளடங்கி யந்நூல்
வரையறை கருத்து மான வளர்கருப் புறமபு தோன்றிக்
கரையமை கல்வி சாலாக் கவிஞர்போ லிறுமாந் தந்நா
லுரையென விரிந்து கற்பின் மகளிர்போற் சொரிந்த தன்றே

அன்புறு பத்தி வித்தி யார்வநீர் பாய்ச்சத் தொண்டாக
கின்புரு வான வீச னின்னருள் விளையுமா போல
வன்புறு கருங்கா னல்லா ளவைகளுஞ் செவ்வி நோக்கி
நன்புல முயன்று காக்க விளைந்தன நறுந்தண் சாலி

சீவக சிந்தாமணி

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே

திருவிளையாடல்-கூடலவளப்

சாறடு கட்டி வெள்ளஞ் சாலைகொள் ளிறாலுந் தேமா
யாறிடு மதகாற் பாய்ந்து பழனக்குளை யமைத் தேயனல
வேறுபால் பயந்த புன்னை புனனில விளைவு மற்று
மேனெருங் பண்டி யேற்றி யிருநிலங் கிழிய வுய்ப்பார்

பொருள் வளம்

கருவி வானஞ்சொரி மணிகளுங் கழைசொரி மணியும்
மருவி கானறுபன மணிகளு மகன்றுறை நாகக்
திரவி கானறுசெம் மணிகளும் புனங்கவ ரினமான்
குருவி வீழ்ந்திடக் கொடிச்சியர் தொகுத்தெறி கவணக்கல்

கோலவளம்.

உலகம் யாவையுந் தன்றவ ளொருபெரு ளொருபாகந்
திலக நாயகி பங்குடைச் சேயென லுறைவு
தலைவ ரானமுறை செய்தநா புஃத்தன்றிச் சக்கி
சுலவு பாரினுண் டாகுமோ துறக்கத்து மஃதே

பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி.

வியன்கண் முதுபொழின் மண்டில முற்றி
யரசியல் பிழையா தறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது
குடபுறந் தருநர் நீரிய தொன்றுகொள் பூம்பிறமையின

வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றங்
குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற்
றேய்வன கெடுகநின் றெவ்வ ராக்க
முயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும்
பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே
முழங்குகட லேணி மலர்தலை யுலகமொ
டுயர்ந்த தேஎத்து விழுமியோர் வயினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக் கெழுக வென்னாய் விழுநிதி
யீத லுள்ளமொ டிசைவேட் குவையே
யன்னாய் நின்னொடு முன்னிலை யெவனோ.

சிலப்பதிகாரம்.

வாயிலோன், வாழியெங் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பின் றலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
யடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை யிறைவனை
யாடல்கண் டருளிய வணங்கு சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலுஞ் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே, யென
வருக மற்றவட் டருக வீங்கென
வாயில் வந்து கோயில் காட்டக்

கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர்வார் கண்ணை யெம்முன் வந்தோ
யாரை யோநீ மடக்கொடி யோயெனத்
தேரா மன்னா செப்புவ துடையே
னெள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
வாவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்ற
னரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே யவ்வூ
ரேசாச் சிறப்பி னிசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்ப தென்பெய ரேயெனப், பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காணென வொள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
யென்காற் பொற்சிலம்பு மணியுடை யரியே, யெனத்
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் றளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்

கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்
றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி

திருவிளையாடல்.

கோமுறை கோடாக் கொற்றவ ரேறே முறையேயோ
தாமரை யாள்வாழ் தண்கடி மார்பா முறையேயோ
மாமதி வானோன் வழிவரு மைந்தா முறையேயோ
தீமைசெய் தாய்போற் செங்கை குறைத்தாய் முறையேயோ

திருவிளையாடல்.

பிறங்குங் கோலான் மாறடு கொற்றம் பெறுவேந்த
னுறங்கும் போதுந் தன்னரு ளாணை யுலகெங்கு
மறங்குன் றாவாக் காப்பதை யென்பவஃ தியாதிம்
மறங்குன் றாதான் செய்கொலை காவா வழியென்றான்.

திருவிளையாடல்

அறவளம்.

கற்றவை களைந்து தூற்றிக் கூப்பியூர்க் காணித் தெய்வ
மற்றவர்க் கற்ற வாறீந் தளவைகண் டாறி லொன்று
கொற்றவர் கடமை கொள்ளப் பண்டியிற் கொடுபோய்த் தென்னா
டுற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினர்க் கீட்டி யுண்பார்.

எங்கு மீசனைப் பூசைசெய் திகபர மடைவா
ரெங்கு மன்பரைப் பூசைசெய் தெழுபிறப் பறுப்பா
ரெங்கு மாகமஞ் செவிமடுத் தெதிர்வினை தடுப்பா
ரெங்கு நாயகன் வடிவுணர்ந் திருண்மலங் களைவார்.

அருந்தின ரருந்திச் செல்ல வருந்துகின் றாரு மாங்கே
யிருந்தினி தருந்தா நிற்க வின்னமு தட்டுப் பின்னும்
விருந்தினர் வரவு நோக்கி வித்தெலாம் வயலில் வீசி
வருந்திவிண் ணோக்கு மோரே ருழவர்போல் வாடி நிற்பார்.

வானமுந் திசையும் பொங்கும் புகழ்மையும் வானம் பேணு
ஞானமும் பொறையுங் குன்று நன்றியு மூக்கப் பாடுந்
தானமுங் கொடையு மன்பும் வரிசையுந் தகைசா லண்பு
மானமுந் தவஞ்செய் தீன்ற மகவுபோல் வளர்க்க வல்லார்.

வெம்மை யால்வினை வஃகினும் வேந்தர்கோல் கோடிச்
செம்மை மாறினும் வறுமைநோய் சிதைப்பினுஞ் சிவன்பாற்
பொய்ம்மை மாறிய பத்தியுள் பொலிவுங்குன் றுவாத்
தம்மை மாறியும் புரிவது தருமமந் நாடு.

சொல்வளம் திருவிளையாடல்.

கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
யடுக்க வந்துவந் தாடுவா னிடைவி னிளைப்பு
விடுக்க வாரமென் காறிரு முகத்திடை வீசி
மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றோ.

விடையு கைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்
வடமொ ழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்
திடமு றுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொன்
மடம கட்கரங் கென்பது வழுதிநா டன்றோ.

கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணி டப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ.

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

காஞ்சிப்புராணம்.

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்

குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்.

சீகாளத்தி புராணம்.

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய்வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.

பத்துப்பாட்டு-முகவுரை.

இலங்குறு பொதியில் விலங்கலவாழ் பெருந்தவத்
தகத்தியன் புரந்தருண் மகத்துவ மிருத்த
வமிழ்தினிற் சிறந்த தமிழெழு மடந்தை

பாண்டி நாடு என்றது.

வெள்ளா றதுவடக்கா மேற்கு பெருவழியாந்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகு—முள்ளார
வாண்டகடல் கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி.

என்ற கம்பர் திருவாக்கின்படி யமைந்தவெல்லையுள்ளது.

41. **அம்மொழி கேட்ட போதே யணங்கனார் சுற்றத் தாருந்**
தம்முறு கிளைஞர்ப் போக்கி யவனிலை தாமுங் கேட்டு
மம்மர்கொண் மனத்த ராகி மற்றவ னிருந்த பாங்கர்க்
கொம்மைவெம் முலையி னாளைக் கொண்டுபோய் விடுவ தென்
றார்.

"விடுவதென்பார்" என்றும் பாடபேதமுண்டு.

"கொண்டு போய்விடுவதென்பார்' என்று சற்றத்தாருடைய துணிபை விளக்கினர். இங்ஙனந்துணிந்தமைக்குக்காரணம், கற்புடைய அம்மையார் தங்கணவரை விட்டுப் பிரிந்திருக்கத்தரியாமையே, இங்ஙனமாயகற்பொழுக்கத்தைப்பின்வருஞ்செய்யுட்களானுணர்க.

நைடதம்.

மன்னவனே யிபபிறபபிற கண்டுா ணாநதிலனே
வின்னமொரு பிறப்பி லாளு மேமைமுமியன்
றன்னாநதனி யேயிருநது தவமாற் றியுமுன்
பொன்னகல முள்ளுருகப டல்லா தொழிவேனே.

வேறு

ஆதலால் உயிர்க்கேள்வனை நீததுயான் அகன்று
போதல் ஆற்றிலேன் அவன் உறும் உலகுடன் புகுவேன்
நீதடுப்பதிங் கறனல என்றவள் நிற்பக
கோதிலாதவன் கொடுங்கனல் மெமூகெனக் குமைழநதான்.

நளவெண்பா.

குற்றமில் காட்சிக் குதலைவாய் மைமநதமையும
பெற்றுக் கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுந் கென்றுரைத்தா
ளேக்கான் மழைபொழியா நொந்து.

நீதிநூல்.

விரியுல கழியினு மிறைகள் சூழினுஞ்
சுரிகுழற் கற்பினோர் துணைவ னையமுாற
பிரிவிலா வாழ்க்கையும் பெறுவ ரேலவர்
பரிவெலா மிரவிமுன் பனியி னீங்குமே.

செழுமுளரி புனனீங்கிற் செழிக்குமோ பட ர்கொடிகள்
கொழுகொமபைப பிரியின்வளங் கொண்டுய்யு மோகணவ

ரெழுதயர வைதாலு மரநதைபால வியற்றிடினுந்
தொழுதகுகற் புடையார்தந் துணைவரைவிட் டகல்வாரோ.

42. மாமணிச் சிவிகை தன்னின் மடநடை மயிலன் னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு வென்ன வேற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத் தாருந்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார்.

43. சிலபகல் கடந்து சென்று செந்தமிழ்த் திருநா டெய்தி
மலர்புகழ்ப் பரம தத்தன் மாநகர் மருங்கு வந்து
குலமுதன் மனைவி யாரைக் கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவனுக்குச் சொல்லிமுன்செல்லவிட்டார்.

"கணவனார்க்கு" என்றும் பாடபேத முண்டு.

செந்தமிழ் திருநாடென்றது பாண்டிநாடு அதன் விகதிருதி

சிலப்பதிகாரம்.

நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னாட்டு
மாட மதுரையும்.

ஷ

குமரி வேங்கடங் குணகுட கடலா
மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பில்

பத்துப்பாட்டு—மதுரைக்காஞ்சி.

தென்குமரி வடபெருங்கல் குணகுட
கடலா வெல்லை.

என்ற ஏதுக்களினாலும்

வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே.

என்றசிகண்டியார் திருவாக்கானும் விசதம்.

44. வந்தவ ரணைந்த மாற்றங் கேட்டலும் வணிகன் றானுஞ்
சிந்தையி லச்ச மெய்திச் செழுமணம் பின்பு செய்த

பைந்தொடி தனையுங் கொண்டு பயந்தபெண் மகவி னோடு
முந்துறச் செல்வே னென்று மொய்குழ லவர்பால் வந்தான்.

'சிந்தையிலச்சமெய்தி' என்றது கற்புடைய மனைவியை நீத்து அவ ளனுமதியின்றி மறுமணஞ் செய்த குற்றத்தை நோக்கிப்போலும் அக்குற் றத்தை

"கணவனுடைய நன்மையை விரும்பினவளாயும் நல்லொழுக்க முடையவளாயும் இருந்தமனைவி பிணியினளா யிருப்பினும் வேறுவிவாகஞ் செய்ய விரும்பினவன் அந்த மனைவியின் அநுமதி பெற்றுக்கொண்டு செய்க. அவளை யொருபோதும் அவமதிக்கக் கூடாது" என்ற மநுதர்மசாஸ்திரம் 9-ம் அத்தியாயம், அ-ம் சுலோகத்தானறிக.

முந்துறச்செலவேனென்று பரமதத்தனோர் முற்பட்டதனது, அம்மையா ரைத் தமக்கு மேற்பட்டவராகக் கருதியதாலென்க. இங்ஙனமே பெரியோர் களை முற்பட்டுச்சென்று காணவேண்டுமென்னு மொழுக்கத்தினைப் பின்வருஞ் செய்யுட்களாலுணர்க.

கம்பராமாயணம்.

தன்முன்னை யவன்றன்மை தன்றுணைவன் முந்துரைத்த
சொன்முன்னை யுவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னைத் தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனை
யென்முன்னை யவற்காண்பேன் யானென்றென வெழுந்தான்.

பிரபுலிங்கலீலை.

அல்லமன் புகன்ற மாற்ற மப்பணன் சென்று நின்று
சொல்லலு மாதுனுக்கென் றுள்ளஞ் சொற்றளர்ந் துடல்வியர்த்துப்
புல்லவர் தனையுந் தாய்முன் பொருந்துதும் பறுத்திட் டோடு
நல்லிளங் கன்று போன்முன் னன்செலா திருந்தே னென்று.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

தொல்பகீரதி மைந்தனுந் துரோணனுஞ் சுதனும்
வில்விதுரனுங் கிருபனு முதலிய வேந்தர்
மல்குழை விருப்புத்து நாமு பிரமெனிர்
செல்வநாயகற நியோசனை யிரண்டெதிர் சென்றார்.

45. தானுமம் மனைவி யோடுந் தளர்நடை மகவி னோடு
மாணிளம் பிணைபோ னின்ற மனைவியா ரடியிற் றாழ்ந்தே
யானும தருளால் வாழ்வே னிவ்விளங் குழவி தானும்
பான்மையா லுமது நாம மென்றுமுன் பணிந்து வீழ்ந்தான்.

மனைவியாரடியிற்றாழ்ந்தே என்றும், பணிந்து வீழ்ந்தான் என்றும் வந்தமையால் பரமதத்தன் புனிதவதியாருடைய அற்புதத்தைக் கண்டு அங்ஙனஞ் செய்தானென்பது பெறப்பட்டது இவ்வாறே பூவுலகின் இயற்கையைக் கடந்த சிறப்புடைய தன்னுடைய நாயகியாகிய மரியம்மை, தெய்வப்பிறப்பினராதலைநோக்கி வளன் வணங்கியதைத் தேம்பாவணியிற் பின்வருஞ் செய்யுட்களானறிக.

நீயொரு தாயொரு தாதையு நீயுயிர் நீயெவை யாகிலுநீ
நீய்கனி வார்கடல் நீயொளி யார்சுடர் நீயரு ளார்முகில்நீ
நீயிறை யோனெழு மாசன நீநெறி வேதம்வ ழாநெறிநீ
நீய்முகி ழாதந றுமலர் நீநிறை நாணிக ராவுருநீ.

ஏரணி யேயித யத்திலி ருந்தெனை யாளுடை யானவளே
சீரணி யேமதி வெண்குடை யேதிரு மாரிவி டும்புயலே
யாரணி யேகரு ணைகரி யேயுயிர் யாவும ளித்தமுதா
வாரணி யேதனி நாயகி யேநனி வாழுதி வாழுதியே

46 கணவன்றான் வணங்கக் கண்ட காமர்பூங் கொடிய னாரு
மணவுறுஞ் சுற்றத் தார்பா லச்சமோ டொதுங்கி நிற்ப
வுணர்வுறு கிளைஞர் வெள்கி யுன்றிரு மனைவி தன்னை
மணமலி தாரி னாய்நீ வணங்குவ தென்கொ லென்றார்.

"கணவர்தாம்" என்றும் பாடபேதமுண்டு.

47. மற்றவர் தம்மை நோக்கி மானுட மிவர்தா மல்லர்
நற்பெருந் தெய்வ மாத னானறிந் தகன்ற பின்பு
பெற்றவிம் மகவு தன்னைப் பேரிட்டே னாத லாலே
பொற்பதம் பணிந்தே னீரும் போற்றுதல் செய்மி னென்றான்.

"மானிடமிவர்" என்றும் பாடபேதமுண்டு.

'நற்பெருந்தெய்வமாதல் நானறிந்து' என்று, பரமதத்தன் மானுடப்பிறப்பினராய புனிதவதியாரைத் தெய்வமாக்கிக் கூறியது அவர்மாட்டு உளவாகிய

புண்ணியவொழுக்கத்தையும் நிகழ்ந்த அற்புதச் செயலையும் கண்டதிறலென் றறிக. இங்ஙனமே திருவளளுவ நாயனாரும் புண்ணிய வொழுக்கத்தைக் கொண்டு, மானுடராயினரைத் தேவராகத் திருவாய்மலர்ந்தருளினார், அத னைப்பின்வருங் குறளாலுணர்க.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

48. என்றபின் சுற்றத் தாரு மிதுவென்கொ லென்று நின்றார்
மன்றலங் குழலி னாரும் வணிகன்வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தங் குறைகழல் போற்றிச் சிந்தை
யொன்றிய நோக்கின் மிக்க வுணர்வுகொண் டுரைசெய் கின்
[றார்.

49. ஈங்கிவன் குறித்த கொள்கை யிதுவினி யிவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பா
லாங்குநின் றாள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டு மென்று பரமனைப் பரவி நின்றார்.

'ஆங்குநின்றார்கள்"—"பரமர்தாள்" என்றும் பாடபேதமுண்டு.

இவனுக்காகத் தாங்கிய வனப்புநின்ற தசைப்பொதி என்றும் கழித்துப் பேய்வடிவு வேண்டும் என்றுங் கூறியவாற்றான், அம்மையார் இதுகாறும் உடற்சுமையைப் பொறுத்திருந்ததானது அது தங்கணவர்க்குரிய வுடைமை யென்ற அபிமானத்தாலெனவும், இப்போது தங்கணவன் நமஸ்கரித்துவிட்ட மையால் அவ்வுரிமை நீங்கிவிட்டதெனக்கொண்டு இனி அதனைப் பொறுப்ப தில் அரோசிகமுற்றுப் பேய்வடிவுவேண்டினாரெனவும் பெறப்பட்டன. ஐக் கியஞானமுற்ற அம்மையார் தேகத்தை வெறுத்ததானது, வினைக்கெல்லாம் வித்தாய் அகமென்றதற்குப் புகலிடமாய்க் காமக்குரோதாதி குறும்புகட்கெல் லாம் குடம்பையாயுள்ள பவ்வீப் பாண்டத்தின் ஆபாசவியல்பினாலென்க. அவ்வியல்பை முற்றுணர்ந்த ஞானிகளுங் காப்பியக் கவிகளும் விஸ்தரித்து விளக்கியதைப் பின்வருஞ் செய்யுட்களிற்காண்க.

காஞ்சிப்புராணம்.

என்பினை நரம்பிற் பின்னிக் குடர்வழும் பிறைச்சி மெத்திப்
புன்புழுப் பொதிந்து செந்நீர்ப் புண்ணசும் பொழுகி நாறித்

துன்பமோ ரெவற்றி னுக்கு முறையுளாய்ப் புறந்தோன் மூடும்
வன்புலை யுடம்பே யாவி வருத்திடும் பிணியே வேறில்லை.

திருப்பெருந்துறைப் புராணம்.

குடரு மெனும்புங் கொழுவுங் குருதியு மிருளுந் தசையுந்
தொடரு நரம்பும் போர்த்த தோலு மூளையும் வழும்பு
மடரு மூவர் நீரு மனியரு வருக்கும் பல்லியும்
படரு முடலையும் பொருளா நினைப்ப ரோபாய முடையோர்.

சேது புராணம்.

நாறுந் துவளத் துகிலழுக்கா யாற்றகற்கு நவையுடம்பி
னூறுந் தவறு தனையன்றி யொருநிமித்தம் பிறிதுண்டோ
விறுந் தனையு முடற்கமையா மித்துயரத்தற் கினையாமற்
பெறுந் தகைய தெனக்கருதிப் பேணுவரோ பெரியோர்தாம்.

பழித்திடுங் கோழையூளை பற்றிய வழுக்குமற்றை
யொழித்திடு மலநீர்வெண்ணீ ருவையிற்றி னுலகத்தொன்று
மிழிப்புறு பண்டமில்லை யிவற்றினுக் கிடமாமென்று
மழிப்புறு மியாக்கைக்காப்பா ரறிவுளா ராகுவாரோ.

பட்டினத்தடிகள் பாடல்.

ஐவர் கலகமிட் டலைக்குங் கானகஞ்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித்தங் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்ட நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்ட
மடலைப் பெரிய சடலைத் திடரு
ளாசைக் கயிற்றி லாடும் பம்பர
மோயா நோய்க்கிட மோடு மரக்கல
மாயா விகார மரணப் பஞ்சரஞ்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தங்

காற்றிற் பறக்குங் காணப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் றைக்குஞ் சட்டை
யீமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமி
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமே
லூரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவிக்க பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்ட
மந்தரத் தியங்கு மிந்திர சாப
மதிரு மேகத் துருவி னுருநிழ
னீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவில் கண்ட காட்சி
யதனினும் பொல்லா மாயக் களங்கம்.

வேறு

ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
யேற்றுத் திரிந்து விட்டே னிறைவாகச்சி யேகம்பனே.

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
யன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்க
டத்தித்தத்திச்சட்டைதட்டிக்கட்டிப்பிட்டுக்
கத்திக்குத்தித்தின்னக்கண்டு

தாயுமானவர் பாடல்.

புன்புலா னரம் பென்புடைப் பொய்யுட
லன்பர் யார்க்கு மருவருப் பல்லவோ

வென்பொலா மணியே யிறையே யித்தாற்
றுன்ப மின்றிச் சுகமொன்று மில்லையே.

நீர்க்குமிழி பூணமைந்து நின்றாலு நில்லாமெய்
பார்க்குமிடத் திதன்மேற் பற்றறுவ தெந்நாளோ,

காக்கைநரி செந்நாய் கழுகொருநாட் கூடியுண்டு
தேக்குவிருந் தாமுடலைச் சீயென்ப தெந்நாளோ.

செங்கிருமியாதி செனித்த சென்ம பூமியினை
யிங்கெனுட லென்னு மிழுக்கொழிவ தெந்நாளோ.

இளைசைப் பதிற்றுப்பத்தந்தாதி.

என்பினை நரம்பை மூளையை மயிரை யிறைச்சியைக் குருதிச் சுக்கிலத்தைப்
பின்புறந் துவக்கை வேறுவே றுகப் பிரித்துப் பைப் பறியென நோக்கி
யன்புறு மறிவாற் பௌதிக மென நீத் தாண்டமா விளைசைநாயகன்ற
னின்பவா ரிதியிற் றிளைத்திடப் பெற்றார்க் கிறப்பதும் பிறப்பது மியல்பே.

குசேலோபாக்கியானம்

குடருநெய்த் தோருமென்புங் கொழுவும்வார் வழும்புந் தோலுந்
தொடருநா டிகளுமவைத் துச்சுமத்திய தடியுங் கொண்டு
படர்தரச் செய்த பவ்வீப் பாண்டமா மிடந்தை நல்லா
ரிடனுடை வடிவ மந்தோ விதற்குமுண் மயங்கா நிற்பர்
கோதுற வமைத்த பவ்வீக் குழம்பபம் றுவாரந் தோறு
மோதுற வழியுங் கும்ப மூத்திர பாத்தி ரங்கை
யாதுபல கிருமிக் கும்பை யடர்ந்ததீ நாற்றக் கூடு
மாதர்மெய் வடிவங் கண்டு மாழ்குவார் மாழ்கி நிற்க.

மணிமேகலை.

வினைபின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலாற்புறத் திடுவது

மூத்துவிளி யுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்

நரைமூ தாட்டி யொருத்தியைக் காட்டித்
தண்ணறல் வண்ணந் திரிந்துவே றாகி
வெண்மண லாகிய கூந்தல் காணாய்
பிறைநுதல் வண்ணங் காணா யோநீ
நரைமையிற் றிரைதோற் றகையின் றாயது
விறல்விற் புருவ மிவையுங் காணா
யிறவி னுணங்கல் போன்றுவே றாயின
கழுநீர்க் கண்காண் வழுநீர் சுமந்தன
குமிழ்மூக் கிவைகா ணுமிழ்சீ யொழுக்குவ
நிரைமுத் தனைய நகையுங் காணாய்
சுரைவித் தேய்ப்பப் பிறழ்ந்துவே றாயின
விலவிதழ்ச் செவ்வாய் காணா யோநீ
புலவுப் புண்போற் புலால்புறத் திடுவது
வள்ளைத் தாள்போல் வடிகா திவைகா
ணுள்ளூன் வாடிய வுணங்கல் போன்றன
விறும்பூது சான்ற முலையுங் காணாய்
வெறும்பை போல வீழ்ந்துவே றாயின
தாழ்ந்தொசி தெங்கின் மடல்போற் றிரங்கி
வீழ்ந்தன விளவேய்த் தோளுங் காணாய்
நரம்பொடு விடுதோ லுகிர்த்தொடர் கழன்று
திரங்கிய விரல்க ளிவையுங் காணாய்
வாழைத் தண்டே போன்ற குறங்கிணை
தாழைத் தண்டி னுணங்கல் காணா
யாவக் கணைக்கால் காணா யோநீ

மேவிய நரம்போ டென்புபுறங் காட்டுவ
தளிரடி வண்ணங் காணா யோநீ
முளிமுதிர் தெங்கி னுதிர்கா யுணங்கல்
பூவினுஞ் சாந்தினும் புலான்மறைத் தியாத்தது
தூசினு மணியினுந் தொல்லோர் வகுத்த
வஞ்சந் தெரியாய் மன்னவன் மகனென.

வேறு.

என்புந் தடியு முதிரமு மியாக்கையென்
றன்புறு மாக்கட் கறியச் சாற்றி
வழுவொடு கிடந்த புழுவுன் பிண்டத்
தலத்தக வூட்டிய வடிநரி வாய்க்கொண்
டுலைப்பி லின்பமோ டுளைக்கு மோதையுங்
கலைபுற வல்குல் கழுகுகுடைந் துண்டு
நிலைத்தலை நெடுவிளி யெடுக்கு மோதையுங்
கடகஞ் செறித்த கையைத் தீநா
யுடையக் கவ்வி யொடுங்கா வோதையுஞ்
சாந்தந் தோய்ந்த வேந்திள வனமுலை
காய்ந்துபசி யெருவை கவர்ந்தூ ணோதையும்
பண்புகொள் யாக்கையின் வெண்பலி யரங்கத்து
மண்கணை முழவ மாக வாங்கோர்
கருந்தலை வாங்கிக் கையகத் தேந்தி
யிரும்பே ருவகையி னெழுந்தோர் பேய்மகள்
புயலோ குழலோ கயலோ கண்ணே
குமிழோ மூக்கோ விதழோ கவிரோ
பல்லோ முத்தோ வென்னா திரங்காது
கண்டொட் டுண்டு கவையடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பி னாடுங் கூத்து.

தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வ
ரீற்றிளம் பெண்டி ராற்றாப் பாலகர்
முதியோ ரென்னா னிளையோ ரென்னான்

கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டுங்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பா துவாழு
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ.

தணிகைப் புராணம்.

வழும்புதவு குடரென்பு வார்நரம்பு மேதைநெய்த்தோர்
தழும்புழுக்கண் மூளைமயிர் சருமமா திகள்குழூஉம்
கொழும்பொதியைப் பகுத்திடுங்காற் கோற்றொடியா ளெவள்
காட்டாய்
விழும்பிணத்தெவ் வுறுப்பில்லை விழையாமை விடல்கிளவாய்

பட்டினத்தடிகள் பாடல்.

மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடு
மானிடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விளிவெளி மாக்க டெளிவுறக் கேண்மின்
முள்ளுங் கல்லு முயன்று நடக்கு
முள்ளங் காலைப் பஞ்செனவுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்காற்
றுள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்கபுன் குறங்கை
யிசையுங் கதலித் தண்டென வியம்பியு
நெடுமுடை நாறுங் கிண்டிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்து
மலமுஞ் சலமும் வழும்புந் திரையு
மலையும் வயிற்றை யாலிலை யென்றுங்
குலையுங் காமக் குருடருக் குரைப்பே
னீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவு
மூட்டவு மிசையவு முதவியிங் கியற்று
மங்கையைப் பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப

பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் றாய்மல ரென்று
மன்னமுங் கறியு மசைவிட் டிறக்கு
முள்ளிய பல்லை முத்தென மொழிந்து
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகுங்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியுந்
தண்ணீர்ப் பீளை தவிரா தொழுகுங்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்று
முள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியுங்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையத்
தக்க தலையோட் டின்புளைத் தெழுந்த
சிக்கின் மயிரைத் திரண்முகி லென்றுஞ்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
முத்தி நாதனை மூவா முதல்வனை
யண்ட ரண்டமு மனைத்துள புவனமுங்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
யேக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்.

வேறு

காதென் றுமூக்கென் றுகண்ணென்று காட்டியென் கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட
தூதென் றெண்ணமற் சுகமென்று நாடுமித் துர்ப்புத்தியை
யேதென் றெடுத்துரைப்பே னிறைவா கச்சியேகம்பனே.

நாலடியார்.

மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ லொய்யதோர் புக்கில்லை—யாக்கைக்கோ
ற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
கை கடிவதோர் கோல்.

தோற்போர்வை மேலுந் துளைபலவாய்ப் பொய்ம்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பானால்—மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே—மெக்காலு
முண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற—விடுவேனோ
உண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

முல்லை முகைமுறுவல் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற—விடுவேனோ
வெல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு—மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்
றெத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தை—பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு

பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங்
கொண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொல்—மண்டி
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்து
முடைச்சாகா டச்சிற் றுழி.

கழிந்தா ரிடுதலை கண்டார் நெஞ்சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—யொழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

சீவகசிந்தாமணி.

என்பினை நரம்பிற்பின்னி யுதிரந்தோய்த் திறைச்சிமெத்திப்
புன்புறந் தோலைப்போர்த்து மயிர்ப்புறம் பொலியவேய்ந்திட்
டொன்பது வாயிலாக்கி யூன்பயில் குரம்பைசெய்தான்
மன்பெருந தசசனல்லன் மயங்கினார் மருளவென்றான்.

வினைப்பெருந் தச்சனல்லன் மெய்ம்மைநோக்கலுற்று
லெனக்குற்றுக் கிடந்ததென்றும் நெருகனும் புதைத்துவைக்கு
நினைப்பினாற் பெரியதொன்றா னீங்கினார் கலைகளென்றான்
மனத்தையுங் குழையச்செத்து மாண்பினன் மாதோவென்றான்.

வேறு.

போதொடு நானமூழ்கிப் பூம்புகை கமழ்ந்தமுல்லைக்
கோதைதகண் படுக்குங்கூந்தல் குறைவளிப் பித்தோடையே
யேதஞ்செய் மலங்களைத்தோ றிறைசியென் பிருண்மூளை
கோதஞ்செய் குடர்கள்புன்றோல் வழும்பொடு நரம்பிதென்றான்.

விழுக்கொடு வெண்ணஞ்சல்லா வுகிர்மயி ருமிழ்நட்பினை
புழுபபயில் யாக்கைபொலலாத தழு தழு கிடநதபோழ்தின்
விழித்தியார் நோககுகிற்பார் பிள்ளையார் கண்ணுட்காக்கை
கொழிப்பரும் பொன்னிற்றோன்றுங் கொள்கைததாற் கொடி
[யேயென்றான்.

உருவமென் றுரைத்தியாயி னிறைந்தோற் றுருத்திதன்னைப
புருவமுங் கண்ணுமூக்கும் புலப்பட வெழுதிவைத்தாற்
கருதுவ தங்கொன் றுண்டோ காமப்பேய்க் கவிகள்காம
வெரியெழ விகற்பித்திட்டா ரிறைசெப்போ ரிதனையென்றான்.

தேம்பாவணி.

சொன்ன பகையு மியாதென்னிற் சூட்சி நலமிக்கோ
னின்ன வுடம்பின் றுணையாக வெழிற்பூங் கொடிச்சாயன்
மின்ன வெழுதிச் சுரிகுழலார் மிளிர்ந்த வினஞ்செய்தா
னன்ன வினந்தா னுயிரறநா லணைத்துங் கொல்பகையே.

முதிர்செய் யுணர்வுற் றறம்வெஃகி முயனல் வினையுணர்கா
லெதிர்செய் மதிவெண் முகங்கண்டா லெரிபூண் டேங்கிமின்னக்
கதிர்செய் குழைவில் வீசவிரு கண்செந் தீப்பொழியப்
பொதிர்செய் யெரிமுன் மெழுகெனவுட் புலனைந் துருகுமன்றே.

இருமஞ் சன்ன விருண்டொளிரு மியல்புற் றவிர்கூந்தல்
மருவிஞ் சகிற்பூந் தவிசிருளை வகைதுஞ் சிடமென்பார்
செருவிஞ் சொன்னார் காந்துயிரைச் செகுக்குங் காடதுவே
கருநஞ் சதுவே யுயிருண்ணுங் கடுங்கூற் றதுதானே.

புருவ வில்லாற் கட்கணைகள் புண்பட் டுள்ளுயிரு
முருவ விட்டாற் பலநாளு முற்ற வுணர்வழிந்து
வெருவ நெஞ்ச முட்கலங்கி விளைத்த புண்காட்டி
வருவ தல்லா லிச்சமரின் மருளா தெவருண்டோ.

கடலைக் கடைய வமிர்தமொடு கடுவும் பிறந்ததெனப்
படலைக் கதையா யறிந்ததலாற் பயனைக் கண்டதிலை
மடலைக் குடைய வூறியதேன் வதைத்த சொல்லமிர்தத்
துடலைக் கொலைசெய் துயிருணுநஞ் சுகும்பெண் வாய்மொழியே.

குழலாற் பிறழா துயிர்விசிபபார் குரலா னஞ்சுயிர்ப்பார்
கழலாற் சிலம்ப மருட்டிடுவார் கண்ணாற் கணைதொடுப்பார்
நிழலாற் கலன்கொண் டிருள்மொய்ப்பார் நிறைதம்முறுப்பெல்லா
மழலாற் சுடச்சுட் டுயிருண்டுண் டாற்றாப் பசிகொள்வார்.

அஷ்டபிரபந்தம்.

தீண்டா வழும்புஞ் செந்நீருஞ் சீயு நரம்புஞ் செறிதசையும்
வேண்டா நாற்ற மிகுமுடலை வீணே சுமந்து மெலிவேனோ
நீண்டாய் தூண்டா விளக்கொளியாய் நின்றா யொன்றா யடியாரை
யாண்டாய் காண்டா வனமெரித்தா யரங்கா வடியேற் கிரங்
[காயே.

நீதி நூல்.

தோல்வாசந் துறந்திறந்து கிடந்தவழ கியைக்காணச் சுடலைசென்
றோங்
கோல்போன்ற வெள்ளென்பின் குவையொன்றே கண்டனஞ்
செங் குமுதவாயு

நூல்போன்ற விடையுமன நடையுமணி தனமுமதி நுதலுமவாய்ந்த
சேல்போன்ற விழியுமபான் மொழியுங்கா ணுமனுள்ளந் திகைத்தோமன்றே
நோக்கதனிற் பீளையிரு செவிகளிலுங் குறும்பியன நுகர்வாயெசசின்
மூக்கதனிற் சளிதலையிற் பேன்வெயர்வை மலசலங்கண் மூளுநாற்றம்
போக்கவொரு நாள்கழுவா விடிலழுக்கு மிகத்திரண்டு புழுத்துநாறும்
ஆக்கமில்லாத் தேகமிதை யழகென்னச் செருக்கலறி யாமையாமே.

50. **ஆனவப் பொழுது மன்று ளாடுவா ரருளி னாலே**
மேனெறி யுணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யி
லூனடை வனப்பை யெல்லா முதறியெற் புடம்பே யாகி
வானமு மண்ணு மெல்லாம் வணங்குபேய் வடிவ மானார்.

"ஊனுடை"—"உடம்பேயாக" என்றும் பாடபேதமுண்டு.

'ஊனடை வனப்பை யெல்லாமுதறி' என்றதனால் அம்மையாருக்குஅகப் பற்றொழிந்தவாறு காண்க. தத்துவஞானமுதயமாகவே பற்றுநீங்கலும், அது நீங்கவே உடம்பில் நசையொழிதலும், அஃதொழியவே தேகத்தை யுதறி விளங்குதலு முண்டா **மென்பதைப்** பின்வருஞ் செய்யுட்களானுமறிக.

பிரபுலிங்கலீலை.

ஒண்ட ரைக்க ணொழிவி லருளுருக்
கொண்ட டுத்த குருவரு ளாற்றனைக்
கண்ட மெய்த்தவன் காயந் தனையன
முண்ட நெட்டிலை யொப்ப விடுப்பனால்.

வெருவு றப்படும் பிறவியை யொழித்துமெய் வீடு
மருவு தற்குளம் வைத்தவ னிம்மல வடிவைத
தெருவி னிற்புனி தம்படா வொன்றனைத் தீண்டி
யருவ ருப்பவன் போலரு வருததனைத யகற்றும.

“வானமும் மண்ணு மெல்லாம் வணங்கு” என்றது சிவானுக்கிரகம் பெற்றோருடைய அளவில்லாதபெருமையை உணர்த்துகின்றது. கடவுளருக் கன்பர் தேவராலும் மனிதராலும் ஏத்தி வணங்கப்படுவார் என்பதற்குப் பிரமாணம் திருவிளையாடற்புராணத்தும்பிரபுலிங்கலீலையினும்வருமாறுகாண்க.

திருவிளையாடற் புராணம்.

மணிதரு மிமையா ரையன் மங்கல வனைய புநோக்கிப
புனிதவா னவரை யொத்தா ரவர்க்கது புகழோ வெந்தை
கனிதரு கருணை நாட்டம் பெற்றவர் கடவு ளோராற்
பணிதரு மலரிட் டேத்தி வழிபடற் பால ரன்றோ.

பிரபுலிங்கலீலை.

காம்படு தோளிமுக் கண்ணனை யுண்மலர்
தேம்படு மலர்கொடு பூசை செய்பவர்
பாம்பொடு பழகிலாப் பரம னென்றவர்
பூம்பத மனமகிழ்ந் துவந்து போற்றுமே.

51. மலர்மழை பொழிந்த தெங்கும் வானதுந் துபியி னோதை
முலகெலா நிறைந்து விம்ம வும்பரு முனிவர் தாமுங்
குலவினர் கணங்க ளெல்லாங் குணலையிட் டனமுன் னின்ற
தொலைவில்பல் சுற்றத் தாருந் தொழுதஞ்சி யகன்று போனார்.

52. உற்பவித் தெழுந்த ஞானத் தொருமையி னிமைகோன் றன்னை
யற்புதத் திருவந் தாதி யப்பொழு தருளிச் செய்வார்
பொற்புடைச் செய்ய பாத புண்டரீ கங்கள் போற்று
நற்கணத் தினிலொன் றானே னென்று நயந்து பாடி.

அற்புதத் திருவந்தாதி.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர். க

இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ்—சுடருருவி
லென்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. உ

அவர்க்கே யெழுபிறப்பு மாளாவோ மென்று
மவர்க்கேநா மன்பாவ தல்லாற்—பவர்ச்சடைமேற்
வாகாப்போழ் சூடு மவர்க்கல்லான் மற்றொருவர்க்
காகாப்போ மெஞ்ஞான்று மாள். ௩

ஆளானோ மல்ல லறிய முறையிட்டாற்
கேளாத தென்கொலோ கேளாமை—நீளாகஞ்
செம்மைய னாகித் திருமிடறு மற்றொன்றா
மெம்மையாட் கொண்ட விறைக்கு. ௪

"விறை" என்றும் பாடம்.

இறைவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பா னேற்றி
யிறைவனே யீண்டிறக்கஞ் செய்வா—னிறைவனே
யெந்தா யெனவிரங்கு மெங்கண்மேல் வெந்துயரம்
வந்தா லதுமாற்று வான். ௫

'இறையவனே' என்றும், 'தேற்றி' என்றும் பாடம்.

வானத்தா னென்பாரு மென்கமற் றும்பர்கோன்
றானத்தா னென்பாருந் தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தா
னென்னெஞ்சத் தானென்பன் யான். ௬

யானே தவமுடையே னென்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பா னெண்ணினேன்—யானேயக்
கைம்மா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
வம்மானுக் காளாயி னேன். ௭

ஆயினே னாள்வானுக் கன்றே பெறற்கரிய
னாயினே னஃதன்றே யாமாறு—தூய

புனற்கங்கை யேற்றானோர் பொன்வரையே போல்வா
னனற்கங்கை யேற்றா னருள். ௮

அருளே யுலகெலா மாள்விப்ப தீச
னருளே பிறப்பறுப்ப தானா — லருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே னெஞ்ஞான்று
மெப்பொருளு மாவ தெனக்கு. ௯

எனக்கினிய வெம்மானை யீசனையா னென்று
மனக்கினிய வைப்பாக வைத்தே — னெனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே யின்புற்றே
னுண்டே யெனக்கரிய தொன்று. ௧௦

ஒன்றே நினைந்திருந்தே னொன்றே துணிந்தொழிந்தே
னொன்றே யென்னுள்ளத்தி னுள்ளடைத்தே — னொன்றேகாண்
கங்கையான் றிங்கட் கதிர்முடியான் பொங்கொளிசே
ரங்கையாற் காளா மது. ௧௧

அதுவே பிரானாமா றாட்கொள்ளு மாறு
மதுவே யினியறிந்தோ மானா — லதுவே
பனிக்கணங்கு கண்ணியா ரொண்ணுதலின் மேலோர்
தனிக்கணங்கு வைத்தார் தகவு. ௧௨

தகவுடையார் தாமுளரேற் றாரதலஞ் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர் — மிகவடர
வூர்ந்திடு மாநாக மொருநாண் மலைமகளைச்
சார்ந்திடுமே லேபாவந் தான். ௧௩

தானே தனிநெஞ்சந் தன்னையுயக் கொள்வான்
றானே பெருஞ்சேமஞ் செய்யுமாற் — றானேயோர்
பூணாகத் தாற்பொலிந்து பொங்கழல்சேர் நஞ்சுமிழு
நீணாகத் தானை நினைந்து. ௧௪

நினைந்திருந்து வானவர்க ணீண்மலராற் பாதம்
புனைந்து மடிபொருந்த மாட்டார் — நினைந்திருந்து

மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே யென்கின்றேற்
கென்செய்வான் கொல்லோ வினி. கரு

இனியோநா முய்ந்தோ மிறைவன்றாள் சேர்ந்தோ
மினியோ ரிடரில்லோ நெஞ்சே—யினியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோங் காண். கசு

"மிறைவனருள்" என்றும் பாடம்.

காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய் நின்ற வரன். கஎ

அரனென்கோ நான்முகனென்கோ வரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன்—முரணழியத்
தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்றானை
யானவனை யெம்மானை யின்று. கஅ

இன்று நமக்கெளிதே மாலுக்கு நான்முகற்கு
மன்று மளப்பரிய னானை—யென்றுமோர்
மூவா முதியானை மூவே ழுலகங்க
ளாவானைக் காணு மறிவு. ககூ

அறிவானுந் தானே யறிவிப்பான் றானே
யறிவா யறிகின்றான் றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாய
மப்பொருளுந் தானே யவன். உ0

அவனே யிருசுடர்தீ யாகாய மாவா
னவனே புவிபுனல்காற் றானா—னவனே
யியமான னாயட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து. உக

வந்திதனைக் கொள்வதே யொக்குமிவ் வாளரவின்
சிந்தை யதுதெரிந்து காண்மினோ—வந்தோ

ரிராகீ ரிருண்டனைய கண்டத்தீ ரெங்கள்
பிரானீருஞ் சென்னிப் பிறை. ௨௨

பிறையும் புனலு மனலரவுஞ் சூடு
மிறைவ ரெமக்கிரங்கா ரேனுங்—கறைமிடற்ற
வெந்தையார்க் காட்பட்டே மென்றென் றிருக்குமே
யெந்தையா வுள்ள மிது. ௨௩

இதுவன்றே யீசன் றிருவுருவ மாமா
றிதுவன்றே யென்றனக்கோர் சேம—மிதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டாயென் சிந்தனைக்கே
யின்னுஞ் சுழல்கின்ற திங்கு. ௨௪

இங்கிருந்து சொல்லுவதே னெம்பெருமா னெண்ணாதே
யெங்கும் பலிதிரியு மெத்திறமும்—பொங்கிரவி
லீமவனத் தாடுவது மென்னுக்கென் றாராய்வோ
நாமவனைக் காணலுற்ற ஞான்று. ௨௫

ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோன் மின்னுவன
போன்ற கறைமிடற்றான் பொன்மார்பின்—ஞான்றெங்கு
மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே
யக்கயலே வைத்த வரவு. ௨௬

அரவமொன் றாகத்து நயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாண்—முரணழிய
வொன்னாதார் மூவெயிலு மோரம்பா லெய்தானே
பொன்னா மற்றொன்று பூண். ௨௭

'லெய்தோனே' என்றும் பாடம்.

பூணாக வொன்று புனைந்தொன்று பொங்கதளி
னூணாக மென்மிளிர நன்கமைத்துக்—கோணாகம்
பொன்முடிமேற் சூடுவது மெல்லாம் பொறியிலியே
னென்முடிவ தாக விவர். ௨௮

இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லா
மிவரை யிகழ்வதே கண்டீ—ரிவர்தமது
பூக்கோல மேனிப் பொடிபூசி யென்பணிந்த
பேய்க்கோலங் கண்டார் பிறர். ௨௯

பிறரறிய லாகாப் பெருமையருந் தாமே
பிறரறியும் பேருணர்வுந் தாமே—பிறருடைய
வென்பே யணிந்திரவிற் றீயாடு மெம்மானார்
வன்பேயுந் தாமு மகிழ்ந்து. ௯௦

மகிழ்தி மடநெஞ்சே மானுடரி னீயுந்
திகழ்தி பெருஞ்சேமஞ் சேர்ந்தா—யிகழாதே
யாரென்பே யேனு மணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே யின்னும் பெருக்கு. ௯௧

பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையி
னொருகதிரே போந்தொழுகிற் றிருக்குந்—தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்க ளன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணான் றன்மார்பி னூல். ௯௨

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீலமணி மிடற்ற னீர்மையே—மேலுலந்த
தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கு
மக்கோலத் தவ்வுருவே யாம். ௯௩

ஆமா றறியாவே வல்வினைகள் வந்தடர்த்தே
நாமாளென் றேத்தார் நகர்மூன்று—மேவமா
றொருகணையாற் செற்றானை யுள்ளத்தா னுள்ளி
யருகணையா தாரை யடும். ௯௪

அடுங்கண்டாய் வெண்மதியென் றஞ்சி யிருள்போந்
திடங்கொண் டிருக்கின்ற தொக்கும்—படங்கொ
ளணிமிடற்ற பாம்பா யரவரைத்தான் கோல
மணிமிடற்றி னுள்ள மறு. ௯௫

மறுவுடைய கண்டத்திர் வார்சடைமே லோடு
தெறுமென்று தேய்ந்துழலு மாவா—வுறுவான்
றளரமீ தோடுமேற் றானதனை யஞ்சி
வளருமோ பிள்ளை மதி. ௯௬

மதியா வடலவுணர் மாமதின்மூன் றட்ட
மதியார் வளர்சடையி னானை — மதியாதே
யென்பாக்கை யாலிகழா தேத்துவரே லிவ்வுலகி
லென்பாக்கை யாய்ப்பிறவா ரீண்டு. ௩௭

ஈண்டொளிசேர் வானத் தெழுமதியை வாளரவந்
தீண்டச் சிறுகியதே போலாதே — பூண்டதார்
தாரேறு பாம்புடையான் மார்பிற் றழைந்திலங்கு
கூரேறு காரேனக் கொம்பு. ௩௮

கொம்பினையோர் பாகத் துகக் கொண்ட குழகன்ற
னம்பவள மேனி யதுமுன்னஞ் — செம்பொ
னணிவரையே போலும் பொடியணிந்தால் வெள்ளி
மணிவரையே போலு மறித்து. ௩௯

மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுதொண்டர் பாதங் — குறித்தொருவர்
கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்
டுள்ளாதார் கூட்ட மொருவு. ௪௦

ஒருபா லுலகளந்த மாலவனா மற்றை
யொருபா லுமையவளா மென்றா — லிருபாலு
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமா
லின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. ௪௧

நேர்ந்தரவங் கொள்ளச் சிறுகிற்றோ நீயதனை
யீர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ — பேர்ந்து
வளங்குழவித் தாய்வளர்ப் பாட்டாதோ வென்றே
விளங்குழவித் திங்க ளிது. ௪௨

திங்க ளிதுசூடிச் சில்பலிக்கென் றூர்திரியே
லெங்கள் பெருமானே யென்றிரந்து — பொங்கொளிய
வானோர் விலக்காரேல் யாமவிலக்க வல்லமே
தானே யறிவான் றனக்கு. ௪௩

“அறிந்து” என்றும் பாடம்

தனக்கே யடியனாய்த் தன்னடைந்து வாழ்பூ
மெனக்கே யருளாவா றென்கொனோ — மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான் ௪௪

பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேருரையே வேண்டிப் — பிரானவனை
யெங்குற்றா னென்பீர்க ளென்னோ ரல்லவர் சிந்தையினு
ளிங்குற்றான் காண்பார்க் கெளிது ௪௫

எளிய திருவனைப் பேயமழைகாள் யாது
மளியீ ரறிவிலீர் பாவா — வெளிகொண் மிடற்
றெம்மை யப்பாப் பூண்டிமுழு பெம்மானைப் புண்ணியனை நந்
சிந்தையாய் வாழுந் திறம் ௪௬

திறத்தான் மடநெஞ்சே சென்றடைவ தல்லாற்
பெறத்தானு மாதியோ பேதாய் — நிறத்த
திருவடிக்க ணைந்தக் கொருபாக மீசான
றிருவடிக்கட் சேருந் திரு ௪௭

திருப்பாரி லன்னச் செழும்பூ [illegible]க்குப்
பெருப்பான [illegible] பொருளா
ளிதாமதியென் [illegible] தேதா
தத்துப்தியோன் றில்லை வரா ௪௮

அராவி வளைத்தனைய வகுப்பூவி [illegible] கிடாவா
விராவு நதிவிரிய வெவாடி — விராவுகை [illegible]
பொன்னேடு வெள்ளிப் [illegible] போல் வ
தன்னேடு பெய்யபரான சடை ௪௯

சடைப்பலக பொன்னைவ [illegible] போர்ந்து
புடைப்பவிந்த காயுநதனெவ போரணு — புடி பேல
வலப்பாலக் கோல மகிவைத்தகான றுணா[illegible]
குலப்பாவை நீலக் குழல் ௫௰

குழலார் சிறுபுறத்துக் கொல்வளையைப் பாகத்
தெழிலாக வைத்தேக வேண்டா—கழலார்ப்பப்
பேரிரவி னீமப் பெருங்காட்டிற் பேயோடு
மாரழல்வாய் நீயாடு மங்கு. ருக

அங்கண் முழுமதியன் றெக்க ரகல்வானத்
தெங்கு மினிதெழுந்தா லொவ்வாதே—செங்கட்
டிருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
இரமாலை தோன்றுவதோர் சீர். ரு௨

சீரார்ந்த கொன்றை மலர்த்தழைப்பாச் சேறாலவி
நீரார்ந்த பேரியா றீத்தமாய்ப்—போரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்மீசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேயோர் நார். ரு௩

காருருவக் கண்டத்தெங் கண்ணுதலே யெங்கொளித்தா
யோருருவாய் நின்னோ டுழிதருவா—னீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியா னின்னுடைய
பாகத்தான் காணாமே பண்டு. ரு௪
"பாதத்தான்" என்னும் பாடம்

பண்டமர ரஞ்சப் படுகடலி னஞ்சுண்டு
கண்டங் கறுத்ததுவு மன்றியே—யுண்டு
பணியுறுவார் செஞ்சடைமேற் பான்மதியி னுள்ளே
மணிமறுவாய்த் தோன்றுமா வடு. ரு௫

வடுவன் றெனக்கருதி நீமதித்தி யாயிற்
சுடுவெண் பொடிநிறத்தாய் சொல்லாய்—படுவெண்
புலாற்றலையி னுள்ளூண் புறம்பேசக் கேட்டோ
நிலாத்தலையிற் சூடுவாய் நீ. ரு௬

நீயுலக மெல்லா மிரப்பினு நின்னுடைய
தீய வரவொழியச் செல்கண்டாய்—தூய
மடவரலார் வந்து பலியிடா ரஞ்சி
விடவரவ மேலாட மிக்கு. ரு௭
"பலியிட்டா ரஞ்சி" என்னும் பாடம்.

மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளு
மொக்க வுடனிருந்த தொவ்வாதே—செக்கர் போ
லாகத்தான் செஞ்சடையா னாங்கவன்றன் பொன்னுருவிற்
பாகத்தாள் பூங்குழலாள் பண்பு. ௫௮

பண்புணர மாட்டேனா னீயே பணித்துக்காண்
கண்புணரு நெற்றிக் கறைக்கண்டா—வொண்புணரு
மவ்வுருவோ மாலுருவோ வானேற் றுருவோநீ றணிவ
தெவ்வுருவோ நின்னுருவ மேல். ௫௯

மேலாய தேவர்கள் கூடியோர் பொன்விலங்கல்
போலா வொளிப்பத்தா ரொவ்வாதே—பாலாய
மைமமா மத்தகளிற் றாக்கா ருரிவைபோர்த்த
தம்மான் றிருமேனி யன்று. ௬௰

அன்றாக நிருவுருவங் காணாதே யாட்பட்டே
னின்றாக நிருவுருவங் காண்கிலே—னென்றாக
னெவ்வுருவோ நும்பிரா னென்பார்கட் கென்னுரைக்கே
னெவ்வுருவோ நின்னுருவ மேது. ௬௧

ஏதொக்கு மேதொவ்வா தேதாகு மேதாகா
தேதொக்கு மென்பதனை யாரறிவார்—பூதப்பால
வில்வேட னாகி விசயனோ டேற்றநாள்
வல்வேட னான வடிவு. ௬௨

வடிவுடைய செங்கதிர்க்கு மாறாய்ப் பகலே
கெடுதலவி நின்றெறிக்குங் கொல்லோ—கடுவுடைய
சொன்முடிவொன் றில்லாத சோதியாய் சோலையா
னின்முடிமேற் றிங்க ணிலா. ௬௩

நிலாவிலங்கு வெண்மதியை நேடிக்கொள் வான்போ
லுலாவி யுழிதருமா கொல்லோ—நிலாவிருந்த
செக்கரவ் வானமே யொக்குந் திருமுடிக்கே
புக்கரவங் காலையே போன்று ௬௪

காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
றாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலு மிடறு. ௬௫

மிடறறில விடபுடைபி ருபமிடறறை ககி
மிடறறில விடஙமெகாணா வாரரு—மிடறறகக து
மைமதகா மிருள போலுய வணணங கரிகாலை
மைபதகாடு நுபமாபிற பமபு

பாமபு பதிபு பர மாலுபு பபயபு பபு
தாயபயினை து தாழருவி காஙரு தலா—லபமபெபா
லுருவடி வி லாமேகா பிர ரைன ருபலா ஏகாலை
திருவடியினை ராய சிலாபு ௯௰

"தார கவி தாஙகுதலை" எனபாபாடம

சிலபாமுப ஞுட கு காறறுவிலாபாமபாள லவணமு ர
சிலபாமு மாறமெரவவ ரகது ராசி— பைபெபாறு
றெதிரா மெசபாரிலு பிர காலை மெரய கான
புதிரா பதியான யுயு ௯௰

முழு லபற மெகாடுபதியான புமாறு னலல
வபு லமற மெகாடுபதியாம கூறுறுப—மபுபாறு
குனியவல பாரமு பா மெராணடா மெபாறு பு
மினியவல புணலடா மெவாரகு

மபகதிநு லவா மபாபா மெயனை பா
மெகபகமெசாருபான காடாலபி பமெ பாபா—யமாரபா
லபாசமெகரி பபாயகனை பிரமை—யபமெபா பரிசவி
லைகமெகரி பபயரகாடு மிடய ௰௦

இடபபாடை வானக மெகழுபதியை சிசிபா
படபபாமைவ கனெருசி மைகக—வி பபபப
கொணடாண மலைபாமை கமெருனறுமி கணடி மஙகாணா
கணடாமய புககமைறுய கண ௰௧

கணடெடுகை மெயனறிமையெ ரா கைபாமணிபாண மெரய லயமெனா
லணடபமெபறிலு மது லவண வி ன—றுணடமெசெ
விணணெருக திமகளாய மகருலச லமழிலுககுங
கணெறுளா வியெகன கருககு ௰௨

கருத்தினு ணீகருதிற் றெல்லா முடனே
திருத்தலாஞ் சிக்கெனநான் சொன்னேன் — பருத்ததங்க
வெள்ளநீ ரேற்றா னடிக்கமல நீநினைந்
துள்ளமே யெப்போது மோது. ௭௩

ஓத நெடுங்கடலை னெத்தனையும் புக்கதட்ட
வேது நிறைந்திலவே பண்பாரா — லேழைப்பக
ளொண்ணுத் திருமேனியா ளெல்லாரு நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம். ௭௪

கலங்கு புனற்கங்கை யூடாட லாலு
மிலங்கு மதியியங்க லாலு — நலங்கொள்
பரிசுடையா னீண்முடி மேற்பாப்பியங்க லாலும்
விரிசடையாங் காணில் விசும்பு. ௭௫

விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடந் தேய்ப்ப — முசிந்தெங்கு
மெத்தாய் தழும்பேறி யேயுளவா லாலவா
மத்தா மணிசே ரடி. ௭௬

அடிபேரிற் பாதாளம் பேரு மடிகண்
முடிபேரின் மாமுகடு பேருங் — கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்றிசைகள் பேரு
மறிந்தாடு மாற்றா தரங்கு. ௭௭

அரங்கமாய்ப் பேய்க்காட்டி லாடுவான் வாளா
விரங்குமோ வெவ்வுயிர்க்கு மூப்பா — பிரங்குமே
லென்னைக் கையான்று மெவ்வுலகு மீந்தளிப்பான்
பன்னு மிரந்தா றணிந்து. ௭௮

“அரங்கமாப் பேய்க்காட்டி” என்றும் பாடம்.

பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதா
லணிந்து மணிந்தவரை யேத்தத் — துணிந்தென்று
மெந்தையார்க் காட்செய்யப் பெற்ற விதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு ௭௯

செருக்கினால் வெற்பெடுத்த வெந்தகனை யோ திண்டோ
ளரக்கனையு முன்னின் றடர்த்த—திருத்தகத்த
மாலயனுங் காணா தாற்றி யகிழ்ந்தேத்தத்த
காலனையும் வென்றுதைத்த கால. ௮0

காலனையும் வென்றே கடோரத்தங் கைத்தழலே
மேலை யிருவினையும் வேரறுத்தோங்—கோல
வரணா ரவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணா ரவிந்தங்கள் சார்ந்து. ௮௧

சார்ந்தார்க்குப் பொறுமொழுந்தே பொற்கிலங்கு சாராரு
சேர்ந்தார்க்குத் தீநெறியின் பொறியாவா—நேர்ந்த நுனையிற்
றுற்படரோன் செந்நித்திருந்த தாயுந் தழல்வண்ண ண
வீழ்சடையே யென்றுமாக்கு மின. ௮௨

மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடு நீண்டுவைத்தா
னென்போலு நாண்பார்கட் கென்று மோற—றன்போது மபா
பொற்குன்று போல மணிக்குன்று நாடுபடலே
நிற்கின்ற போது செய்து. ௮௩

நெடிதாய பொங்கெரியுந் தண்மதியு நேரே
கடிதாங் கடுஞ்சுடரும் போலுங்—கொடிதாக
விண்டார்கண் மும்மதிலும் வெந்தீயி னின்றழியக்
கண்டானு முக்கணுங் கண். ௮௪

கண்ணாக் கண்டிமேன் கையாகக் கூப்பியு
மெண்ணா வெண்ணத்தா லெண்ணியும்—விண்ணோ
னெரியாய் யென்றென் றடிபணியு மன்கொலோ
பெரியானைக் காணப் பெறின. ௮௫

பெறினும் பிறிதியாதும் வேண்டேநாம் பொற்பி
றுறினு முருகொழிபு பேணுள்,—சிறிதுணர்த்தி
மற்றொருத் தனைதிமேல் வைத்தானந் பேயாய
நற்கணத்தி லொன்றாய நாம். ௮௬

நாமாலை சூடியு நம்பீசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய்—நாமோ
ரறிவினையே பற்றினா லெற்றே தடுமே
யெறிவினையே யென்னு மிருள். ௮௭

இருளி னுருவென்கோ மாமேக மென்கோ
மருளின் மணிநீல மென்கோ—வருளெமக்கு
நன்றுடையாய் செஞ்சடைமே னக்கிலங்கு வெண்மதிய
மொன்றுடையாய் கண்டத் தொளி. ௮௮

ஒளிவிலி வன்மதனை யொண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள சிந்தையினிற் சேர்வா—யொளிநஞ்ச
முண்டவா யஃதிருப்ப வுன்னுடைய கண்டமிருள்
கொண்டவா றென்னிதனைக் கூறு. ௮௯

"ஒளிவிலி வன்மகனை" என்றும் பாடம்.

கூறெமக்கீ தெந்தாய் குளிர்சடையை மீதழித்திட்
டேற மிகப்பெருகி னென்செய்தி—சீறி
விழித்தூரும் வாளரவும் வெண்மதியு மீர்த்துத்
தெழித்தோடுங் கங்கைத் திரை. ௯0

திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே யாளா
யுரைமருவி யாமுணர்ந்தோங் கண்டீர்—தெரிமினோ
விம்மைக்கு மம்மைக்கு மெலலா மமைந்தோமே
யெம்மைப் புறனுரைபப தென். ௯௧

என்னை யுடையானு மேகமாய் நின்றானுந்
தன்னை யறியாத தன்மையனும்—பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூசசடையான் வானோர்க்
கருளாக வைத்த வவன். ௯௨

அவன்கண்டாய் வானோர் பிரானாவா னென்று
மவன்கண்டா யம்பவள வண்ண—னவன்கண்டாய்
மைத்தமர்ந்த கண்டததான மற்றவன்பா னன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன் பாய்நீ விரும்பு. ௯௩

விருப்பினா னீபிரிய கில்லாயோ வேறு
விருப்பிடமற் றில்லையோ வென்றோ—பொருப்பன்மகண்
மஞ்சுபோன் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்க
வஞ்சகமோ சொல்லா யவள். ௯௪

அவளோர் குலமங்கை பாகத் தகலா
ளிவளோர் சலமகளு மீதே—தவளநீ
றென்பணிவீ ரென்றும் பிரிந்தறியீ ரீங்கிவரு
ளென்பணியார் சொல்லுமினிங் கார். ௯௫

ஆர்வல்லார் காண வரனவனை யன்பென்னும்
போர்வையத னாலே போர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தா னாழுந் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோ மறைத்து. ௯௬

மறைத்துலகை மேழினிலும் வைத்தாயோ வன்றே
னுறைப்போடு முன்கைக் கொண்டாயோ—நிறைத்திட்
டுளைந்தெழுந்து நீயெரிப்ப மூவுலகு முள்புக்
களைந்தெழுந்த செந்தீ யழல். ௯௭

அழலாட வங்கை சிவந்ததோ வங்கை
யழகா லழல்சிவந்த வாறோ—கழலாடப்
பேயாடு கானிற் பிறங்க வனலேந்தித்
தீயாடு வாயிதனைச் செப்பு. ௯௮

செப்பேந் திளமுலையாள் காணவோ தீப்படுகாட்
டப்பேய்க் கணமவைதாங் காணவோ—செப்பெனக்கொன்
றாகத்தா னங்காந் தனலுமிழு மைவாய
நாகத்தா யாடுன் னடம். ௯௯

நடக்கிற் படிநடுங்கு நோக்கிற் றிசைவே
மிடிக்கி னுலகனைத்து மேங்கு—மடுக்கற்
பொருமேறே வானேறே பொன்னொப்பாய் நின்னை
அருமேறே வொன்றாவுரை. ௧௦௦

உரையினு லிம்மாலை யந்தாதி வெண்பாக்
கரையினாற் காரைக்காற் பேய்சொற்—பரவுவா
ராராத வன்பினோ டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து. கoக

முற்றிற்று.

53. ஆய்ந்தசீ ரிரட்டை மாலை யந்தாதி யெடுத்துப் பாடி
யேய்ந்தபே ருணர்வு பொங்க வெயிலொரு மூன்று முன்னாட்
காய்ந்தவ ரிருந்த வெள்ளிக் கைலைமால் வரையை நண்ண
வாய்ந்தபே ரருண்முன் கூர வழிப்படும் வழியால் வந்தார்.

"எயிலொரு மூன்று முன்னாட் காய்ந்தவர்" என்றார் முப்புரதகனத்துக்குச் சிவபெருமா னெழுந்தருளிய கோலத்தைப் பின்வருஞ் செய்யுளானறிக.

காஞ்சிப்புராணம்.

பொருப்புச் சிலையில் வாசுகிநாண் பூட்டி யரிகோல் வளியீர்க்கு
நெருப்புக் கூராம் படைதொடுத்துப் பிரம வலவ னெடுமறைமா
விருப்பிற் செலுத்து நிலத்தேர்மே னின்று தெவ்வூர் வெந்தவிய
வருப்புக் குறுவெண் ணகைமுகிழ்த்த வந்த னுளன் றிருவுருவம்.

திருவிரட்டைமணிமாலை.

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்சமென்பாய்
தளர்ந்திங் கிருந்த தவிர்திகண் டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டுவெள்ளை
யிளந்திங்க ளும்மெருக் கும்மிருக் குஞ்சென்னி யீசனுக்கே. க

"வந்திடும் போதஞ்சி "என்றும் பாடம்.

ஈச னவனல்லா தில்லையென நினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாது காக்கும் பிரான் உ

"பிறவாமை" என்றும் பாடம்.

பிரானென்று தன்னைப்பன் னாள்பர வித்தொழு வாரிடர்கண்
டிரானென்ன நிற்கின்ற வீசன்கண் டீரின வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க் கிடந்துபொம் மென்
[றுரைவா
யராநின் றிரைக்குஞ் சடைச்செம்பொ னீண்முடி யந்தணனே. ௩

அந்தணனைத் தஞ்சமென் றாட்பட்டா ராழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன்—கொந்தணைந்த
பொன்கண்டாற் பூணாதே கோணாகம் பூண்டானை
யென்கண்டாய் நெஞ்சே யினி. ௪

இனிவார் சடையினிற் கங்கையென் பாளையங் கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணிலென் செய்திங்கை யிற்சிலையான்
முனிவார் திரிபுர மூன்றும்வெந் தன்றுசெந் தீயின்மூழ்கத்
தனிவார் கணையொன்றி னான்மிக்க கொற்றவெஞ் சங்கரனே. ௫

"மிகக் கோத்த" என்றும் பாடம்.

சங்கரனைத் தாழ்ந்த சடையானை யச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை—யங்கொருநா
ளாவாவென் றாழாமைக் காப்பானை யெப்பொழுது
மோவாது நெஞ்சே யுரை. ௬

உரைக்கப் படுவது மொன்றுண்டு கேட்கிற்செவ் வான்றொடை
[மே
லிரைக்கின்ற பாம்பினை யென்றுந்தொ டேலிழிந் தோட்டத்
[தெங்குந்
திரைக்கின் றகங்கையுந் தேனின்ற கொன்றையுஞ் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித் தலைவைத்த வேதியனே. ௭

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை யாதிரைநன் னாளானைச்—சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனு மாட்டாது
கில்லேன மாவென்றான் கீழ். ௮

கீழா யினதுன்ப வெள்ளக்க டற்றள்ளி யுள்ளுறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமென் பீர்விர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டனெண் டோளன்பைம் பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்துபன் னாளுந் தலைநின்மினே. ௯

தலையாய வைந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யினவுணர்ந்தோர் காண்பர்—தலையாய
வண்டத்தா னாதிரையா னாலால முண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல். ௧௦

கழற்கொண்ட சேவடி காணலுற் றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா வினைநிக ரேதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனியெம் மானைக்கைம் மாமலர்
[தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி நம்மடுந்தொல்வினையே. ௧௧

தொலலை வினைவந்து சூழாமுன் றுழாமே
யொல்லை வணங்கி யுமையென்னு—மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை. ௧௨

நினையா தொழுதிகண்டாய் நெஞ்சமே யிங்கோர் தஞ்சமென்று
மனையா ளையுமக்க டம்மையுந் தேறியோ ராறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்பனந் தாதைநொந் தாதசெந்தீ
யனையா னமரர் பிரானண்ட வாண னடித்தலமே. ௧௩

அடித்தலத்தி னன்றரக்க னைந்நான்கு தோளு
முடித்தலமு நீமுரித்த வாறென்—முடித்தலத்தி
லாறுடி யாறு வனலாடி யவ்வனலி
னீறுடி நெய்யாடி நீ. ௧௪

நீநின்று தானவர் மாமதின் மூன்று நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட வாறென் றிரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா டரங்காப் பெயர்ந்துநட்டம்
போய்நின்று பூதந் தொழச்செய்யுமொய்கழற் புண்ணியனே. ௧௫

புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
யெண்ணியோ ரைந்து மிசைந்தனவாற் — றிண்ணிய
கைம்மாவி னீருரிவை மூவுருவும் போர்த்துகந்த
வம்மானுக் காட்பட்ட வன்பு. கசு

அன்பா லடைவதெவ் வாறுகொன் மேலதோ ராடரவந்
தன்பா லொருவரைச் சாரவொட் டாததுவே யுமன்றி
முன்பா யினதலை யோடுகள் கோத்தவை யார்த்துவெள்ளை
யென்பா யினவு மணிந்தங்கோ ரேறுகந் தேறுவதே. கஎ

ஏறலா லேறமற் றில்லையே யெம்பெருமா
னேறலாம் பாயு மவிர்சடையார் — வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர் சூழ்ந்த
தடங்கட னஞ்சுண்டார் தமக்கு. கஅ

"படங்குவளை" என்றும் பாடம்.

தமக்கென்று மின்பணி செய்திருப் பேமுக்குத் தாமொருநா
ளெமக்கொன்று சொன்னா லருளுங்கொ லாமிணையா துமின்றிச்
சுமக்கின்ற பிள்ளைவெள் ளேறொப்ப தொன்றுதொண் டைக்
[கனிவா
யுமைக்கென்று தேடிப் பெறுதுட னேகொண்ட வுத்தமரே. கக

"ளெமக்கென்று" என்றும் பாடம்.

உத்தமராய் வாழ்வா ருலந்தக்கா லுற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமு — னுத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்றிறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. உ0

"கேள்வாழி" என்றும் பாடம்.

54. **கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன் றோடு வார்கள்**
கொண்டதோர் வேடத் தன்மை யுள்ளவா கூறக் கேட்டே
யண்டர்கா யகனு ரென்னை யறிவரே லறியா வாய்மை
யெண்டிசை மாக்க ளுக்கியா னெவ்வுரு வாயென் னென்பார்.

"அண்டர் நாயகன் என்னையறிவாரே லறியாவாய்மை எண்டிசை மாக்களுக் கியா னெவ்வுருவா யென்னென்பார்" என்றமையானே அடியார்களுடைய பெருமையை உலகம் அறியுமாற்றலுடைய தன்று என்பது இனிது பெறப்படும். இதனைப்பின்வரும் செய்யுளானும் உணர்க.

இராமலிங்கசுவாமி பாடல்.

ஈடறி யாதமுக் கண்ணுநின் னன்ப ரியல்பினையிந்
நாடறி யாதுன் னருளன்றி யூண்சுவை நாவையன்றி
மேடறி யாதுநற் பாட்டைக்கற் றோரன்றி மேற்சுமந்த
வேடறி யாதவை யேனறி யாதென் றிகழ்வரன்றே.

55· வடதிசைத் தேச மெல்லா மனத்தினுங் கடுகச் சென்று
தொடையவி ழிதழி மாலைச் சூலபா ணியனார் மேவும்
படரொளிக் கைலை வெற்பிற் பாங்கணை தாங்குக் காலி
னடையினைத் தவிர்ந்து பார்மேற் றலையினா னடந்துசென்றார்.

"கடிதிற் சென்று" என்றும் பாடபேதமுண்டு.

"வடதிசைத் தேசமெல்லா மனத்தினுங் கடுகச்சென்று, தொடையவி ழிதழிமாலைச் சூலபா ணியனார்மேவும், படரொளிக் கைலைவெற்பின் பாங்கு" என்றதனாற் கைலைமலை வடக்கிலுள்ளதென்பது பெறப்பட்டது. இதனைப் பின் வருஞ் செய்யுளைக்கொண்டு தெளிக.

கம்பராமாயணம்.

வடகுண திசையிற் றேன்று மழுவலா னியாண்டும் வைகுந்
தடைவரை யதனை நோக்கித் தாமரைச் செங்கை கூப்பிப்
படர்குவான் றன்னை யன்ன பரமனும் பரிவிற் பார்த்துத்
தடமுலை யுமைக்குக் காட்டி வாயுவின் றனைய னென்றான்.

"படரொளிக் கைலைவெற்பு" என்று விசேடித்தார் வெள்ளிமலையாதலின் வெண்சுடர் விரிந்துவிளங்குதலை நோக்கி. இதனைப் பின்வருஞ் செய்யுட்களா னுணர்க.

பிரபுலிங்கலீலை.

விளங்கொளி துளும்பு மந்த வெள்ளியங் கிரியி னுச்சி
துளங்கொளி விரிக்குஞ்செம்பொற்சுடர்மணிச்செய்குன்றொன்று
களங்கறு பரரரைத் தூய்ய கருப்புரக் குவாலின் மீது
வளங்கெழு சுடரோன் றுற்று வயங்குதல் போலு மன்றே.

படைக்க லங்களி னொளியிமை யவரொளி பரித்த
தொடைக்க லங்களி னொளியரம் பையர்பணைத் தோளி
னிடைக்க லங்களி னொளியெலா மிருளிறை மிடற்றி
னடைக்க லம்புக நிறைந்தன பரந்தபே ரவையில்.

பெரியபுராணம்.

நிலவு மெண்ணிற லங்களு நீடொளி
யிலகு தண்டளி ராக வெழுந்ததோர்
உலகை மென்னு மொளிமணி வல்லிமேன்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை.

கந்தபுராணம்.

பாச நீக்கித்தன் பாற்படு நல்லரு
ளீச னல்கு மியல்பென வெய்தினோர்
தேசு மாற்றிச் சிறந்ததன் மெய்யொளி
வீசு கின்றது வெள்ளியங் குன்றமே.

ஷை

பொதியு மின்னமு தோடு பொருந்துவ
கதிரின் மிக்க கரையறு காட்சிய
மதிய மாயிர கோடி மணந்துதா
முதய மானது போன்றதவ் வொண்கிரி.

56. **தலையினு னடந்து சென்று சங்கர னிருந்த வெள்ளி
மலையின்மே லேறும் போது மகிழ்ச்சியா லன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுத லொருபா கத்துச்
சிலைநுத லிமய வல்லி திருக்கணேக் குற்ற தன்றே.**

"காலினடையினைத்தவிர்ந்து பார்மேல் தலையினால் நடந்து சென்றார்" என்றதனாற் கைலைமலையைப் பாதங்கொண்டு மிதித்தலாகாதென்னும் மகத்துவம் வெளிப்பட்டது. அம்மகத்துவத்தைப் பின்வருஞ் செய்யுளானறிக.

கந்தபுராணம்.

மாடு சூழ்தரு மேருவே யாதியாம் வரைகள்
பாடு சேரினு முலகெலா மழியினும் பரந்து
கூடு மண்டங்கள் குலையினுங் கொள்கையோ டியல்பாற்
கேடி லாமலை யமர்வது கைலையங் கிரியே.

கைலையங்கிரியின்மீது அம்மையாருக்கு விளங்கிய பத்தியை நம்பியாண்டார் நம்பி தமது திருவந்தாதியில் வியந்துகூறிய வாற்றைப் பின்வருஞ்செய்யுளிற் காண்க.

நம்பன் திருமலை நான்மிதி யேனென்று தாளிரண்டு
மும்பர் மிசைத்தலை யாலடந் தேற வமைமங்கையருந்
செம்பொ னுருவனென் னம்மையென் னப்பெற் றவளைப் பெருந்தேன்
கொம்பி னுக்குகாரைக் காலினில் மேய குலதனமே.

• சங்கரனிருந்த வெள்ளிமலையின்மேல் என்றபடியால், அம்மலையில் அவனெழுந்தருளியிருந்தலைப் பின்வருஞ்செய்யுட்களானறிக.

பிரபுலிங்கலீலை.

அன்ன மண்டபத் தங்கண் மேருவாகனை
மின்னு மாமணி வேதிகை மேயமர்ந் தோனை
மன்னு செங்கதிர் மண்டலத் துற்றனை
னென்ன வந்தங் கிருந்தனள் மென்னடையே.

குழவி யாயுடற் கூனிக ரைத்ததோர்
விழவு வாண்மதி வேணியின் மேவுறக்
கிழவி யாகிக் கிரிக்கோன் மகப்பெறு
மழகு நீர்மக ளாயிடை வாழ்வுற.

அங்கி யென்றற் கடுப்பமே மேருகிய
செங்க ணென்று திருநுதல் சேர்தரக்

திங்க ளென்றுந் தினகர னென்றும்வா
ழுங்கண் மல்கு மருண்மடை போன்றுற.

எண்ணு மன்ப ரிதயமென் புட்படு
கண்ணி போன்றுவார் காதிடைத் தோடுற
நண்ணு மாதுமை நன்னுதற் பொட்டென
வண்ண நீல மணிமிடற் றொன்றுற.

நகந்த ருங்கொடி கண்களை நாணியே
முகந்தி ரும்பு முறையிற் றிரும்புமான்
மகிழ்ந்தி டங்கதிர் வீர மழுவலந்
தருந்த குந்தகு மென்று தயங்குற.

சொற்றெ ரிந்த சுடர்மணி கங்கண
முற்றி லங்க வொருகருங் கேழலின்
பற்றி ருந்த மதாணியிற் பட்டென
புற்ற ருங்கலை யுற்றரை பொற்புற.

புரத்தை வென்ற நகைக்குமென் போதினோன்
சிரத்தை வென்றசெங் கைக்குஞ் சிலைமத
னெரித்த கண்ணிற்கு மின்றெனக் கூற்றுதைத்
தரித்த வீரக் கழலொடு தாளுற.

“சிலைநுத லிமயவல்லி திருக்கணோக் குற்றதன்றே” என்றதனால், கைலை மலையில் உமாதேவியார் எழுந்தருளி யிருக்குந்தன்மை பெறப்பட்டது. அதனைப் பின்வருஞ் செய்யுட்களா னறிக.

பிரபுலிங்கலீலை.

இருந்த வாதி யிடத்தி லிருந்தனள்
பரந்த வானும் படியு முயிர்களு
மொருங்கு தோன்ற வுதவிக் கருவுறீஇ
வருந்தி லாத மணிவயிற் றன்னையே.

இறைவ னங்க ணொருமுச் சுடர்களு
முறவு கொண்ட விருளொரு மோதிமே

லறவ னென்றவவ் வண்ணல் புனைந்தரு
ணறவு மிழ்ந்த நறுமலர் தாழ்ந்திட.

ஏற்று வார்கொடி யெந்தை சடைப்பிறை
யாற்றுள் வீழ்வுற் றிறப்பதற் கெண்ணுறத்
தோற்ற மேவு சுடர்த்திரு நெற்றியின்
ஞாற்று மோர்மணிச் சுட்டி நலந்தர.

ஈச னார்முக மென்னு முளரியி
லாசை கூரு மளிவிழிக் காரருள்
வாச மாமலர் வாய்க்கிள வெண்ணைத்
தேக லாமணி யாகச் சிறந்துற.

மாணப் பூண்புனை மற்றை யுறுப்பெனப்
பூணும் பட்டுடைத் தோலையின் பூணென
யாணர்ச் செம்பொ னிலங்கொளி யோலைபோற்
காணக் காதெனும் வள்ளை நவின்றெய.

ஓங்கு வாவுடை யும்ப னயனரி
தாங்கு மாவி தணந்தொழி நாளினும்
வீங்கு ருவெழின் மங்கல நாணொளி
தேங்கு பூணா சென்னச் சிறந்திட

அரவு லாஞ்சடை யண்ணலைப் பிள்ளைநான
பருவ மூன்றினிற் பாடலின் பாறருப
பொருவில் கொங்கைப் புகறெனப் பொங்கொளி
மருவு மார மணிவடந் தாழ்ந்துற.

பறந்தி டாமணி வண்டு படுமலர்
சிறந்த நீல மலரொடு சீர்பெற
மறந்தி டாது மறைமுடி யின்பொரு
ளறைந்து பைங்கிளி முன்கை யமர்ந்திட.

தோளு டைப்பரன் றென்மனை யாட்டிதன்
பால டுத்ததெவ் வாறெனும் பட்டமை
மேலு டுத்து விளங்கவொண் மேகலை
நூலி டைக்குறு நோய்புரி யாதுற.

புத்தளிச்சம் படினார் பொருமையை
யெய்த்து மற்றை யிருமணத் தாம்பியி
லத்தன் வைத்த வடிக்கம லங்களின்
முத்த ரிச்செஞ் சிலம்பு முழங்குற.

57. அம்பிகை திருவுள் ளத்தி னதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் தலையினு னடந்திங் கேறு
மெம்பெரு மானே ரெற்பின் யாக்கையன் பென்னே யென்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான்.

அம்பிகை தாழ்ந்து "என்னே யென்ன" என்றது, உமாதேவியார் சிவ பெருமானைப் பணிவுறக் கேட்டாரென்னும் பொருளது, இங்ஙனமே மற்றோரமயத்தும் பணிவுறக் கேட்டமையைப் பின்வருமாறு காண்க.

பிரபுலிங்கலீலை.

இன்னணா மலையிடை யிருந்த வெம்பிரானை
றன்னொடு வினவுமேமார் தமைநமாம யுன்னாடு
கன்னனு மழுந்தழுங் கைப்ப வொழுடை
யன்னை தன் வாய்திறந் தறையும் மேமயினள்.

58. வருபிவ ணம்மைப் பேறு மம்மைகா ளுமையே மற்றிப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றன ளென்று பின்னை
யருகுவந் தடைய நோக்கி யம்மையே யெனவுஞ் செம்மை
யொருமொழி யுலக மெல்லா முய்யவே யருளிச் செய்தார்

"வடிவும்"— "பின்றை"— "வந்தணைய" என்றும் பாடபேதமுண்டு.

59. அங்கண னம்மை யேயென் றருள்செய வப்பா வென்று[மைச்
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்து வீழ்ந் தெழுந்தார் தம்
சங்கவெண் குழையி னுருந் தம்மைநேர் நோக்கி நம்பா
லிங்குவேண் டுவதெ னென்ன விறைஞ்சிநின் றியம்பு கின்றார்.

" அங்கண ரம்மையே" —"பங்கயச் செய்ய பாதம்"—"நின்றிதனைச் சொன்னார்" என்றுப் பாடபேதமுண்டு.

"பங்கயசசெம்பொற் பாதம்பணிந்து" என்றது, சிவபிரானைப் பிரத்தியக்ஷமாகத் தரிசிக்கப்பெற்ற அம்மையார் ஆனந்தபரவசராகி அவருடைய தாமரை மலர்போலுந் திருவடிகளை வணங்குகின்றார் என்றபடி. இத்தகைய காக்ஷிபெற்ற அகத்தியமுனிவரும் பரமர்தாளைப் பணிந்து புகழ்ந்ததைப் பின்வருஞ் செய்யுளாற்காண்க.

காஞ்சிப்புராணம்.

இந்நா ளெனக்குப் பயன்பட்ட திப்பிறவி
யிந்நா ளெனக்குப் பயன்பட்ட தியான்செய் தவ
மிந்நா ளெனக்குப் பயன்பட்ட தென்னறிவு
மிந்நா ளுனைக்காணப் பெற்றமையி னெங்கோவே.

எண்ணமெலா மெய்தினே னெண்ணமெலா மெய்தினே
னெண்ணமெலா மெய்தினே னெங்கள் பெருமானே
கண்ணனொடு நான்முகனுங் காணாத் துணையடிகள்
கண்ணெதிரே யிற்றைநாள் யான்காணக் காட்டினையால்.

60. இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்று
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
யறவாநீ யாடும் போதுன் னடியின்கீ ழிருக்க வென்றார்.

"பிறவாமை வேண்டும்" என்றார், இங்கே அம்மையார் வேண்டியது போலவே ஞானிகளிரத்த லியல்பாத லென்பதற்குப் பின்வருஞ் செய்யுட்களைப் பிரமாணமாகக் கொள்க.

"பொய்முடங்கும் பூமிசில போட்டலறப் பூங்கமலன்
கைமுடங்க நான்சனனக் கட்டறுவ தெந்நாளோ."

பட்டணத்துப் பிள்ளையார் பாடல்.

கான்சாயும் வெள்ளிமலைக் கரசே நின் கருணைபரிவேனென்
ஊன்சாயுஞ் சென்ம மொழித்திடுவாய் கருவூரனுக்காய்

மான்சாயச செங்கை மழுவலஞ்சாய வணைநதகொன்றைத
தேன்சாய நல்லதிரு மேனிசாய்த்த சிவக்கொழுந்தே.

மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

காதல் தணியேனோ கண்டு மகிழேனோ
சாதல் தவிரேனோ சங்கடந்தான் தீரேனோ.

"இறவாத வின்ப வன்பு வேண்டி" என்றது, என்றுமழியாத பேரின்பத்தை அன்பால் முன்பு குறையிரந்து என்று பொருளபட்டது. அத்தகைய வன்பைப் பத்தரிரத்தலைப் பின்வருஞ் செய்யுளாற் காண்க.

காஞ்சிப்புராணம்.

குன்றாத வன்புனக்கே குன்றாத வன்புனக்கே
குன்றாத வன்புனக்கே மிக்கோங்கு கொள்கையது
வென்றுமெனக குண்டாக வென்றுமெனக் குண்டாக
வென்றுமெனக் குண்டாக வென்றுமோ பெற்றியனே.

"மறவாமை வேண்டும்" என்றா, இங்ஙனம் பகதரிரததலை பின்வருஞ் செய்யுட்களானறிக:—

காஞ்சிப் புராணம்.

வையமிசைத் தோற்றமுதற் சாங்காறு மன்றவனைத்
தெய்வமெனப் பேணுத் திருவிலிக ளென்குலத்தி
லெய்தியொரு ஞான்றும பிறவற்க வெய்துறினும்
வெய்தெனமற் றுங்கே விளிந்தொழிக வெம்மானே.

சிறந்துன்னை தெய்வமெனக் கொள்ளாத சிந்தை
பிறந்தகுலம பிறவா நின்றகுலம பீளி

னுறந்த குலத்து முனைமயொருபான் மேயாய்
மறந்தும் பிறவாத வாழ்வெனக்கு வேண்டுமால்.

"அறவாநீ யாடும்போது" என்றதில் ஆடும்வைபவத்தைப் பின்வருஞ் செய்யுட்களிற் சிறப்பித்தவாறு காண்க:—

திருவிளையாடற்புராணம்.

மின்பயில் பரிதிப் புத்தேள் பாற்கடல் விளங்கி யாங்குப்
பின்பதன் மிசைமா ணிக்கப் பீடமை தோன்றிற் றன்ன
தன்பர்த முளமே யாகு மல்லது வேதச் சென்னி
யென்பதா மஃதே யன்றி யாதென விசைக்கற் பாற்றே.

அன்னதோர் தவிசி னும்ப ராயிரங் கரத்தா லள்ளித்
துன்னிருள் விழுங்குங் கோடி சூரிய ரொருகா லத்து
மன்னின ருதித்தா லொப்ப மனமொழி பக்கங் கீழ்மேற்
பின்முதல் கடந்த ஞானப் பேரொளி வடிவாய்த் தோன்றி.

முந்துறு கணங்கண் மொந்தை நண்ணுமை முழக்கஞ் செய்ய
நந்திமா முழவந் தாக்க நாரண னிடக்கை யார்ப்ப
வந்துகந் திருவ னூலின் மாபுளி யிருவர் பாட
வைந்துதுந் துபியுங் கல்லென் றார்கலி முழக்கங் காட்ட.

மதுமுகத் தலர்ந்த வெண்டா மரைமகள் கருதி கூட்டச்
சதுமுகத் தொருவன் சாம கீதயாழ் தடவிப் பாட
விதுமுகத் தருகு மொய்க்கு மீனென ஞான வெள்ளிப்
பொதுமுகத் தமரர் தூற்றும் பூமழை யெங்கும் போர்ப்ப.

பொருங்கட னிறத்த செந்தீப் பொங்குளைக் குறளன் மீது
பெருங்கடல் வடவைச் செங்கண் பிதுங்கமேற் றிரிந்து நோக்கி
முருங்கட லெரியில் சீற முதுகிற வலத்தா ளூன்றிக்
கருங்கடல் முளைத்த வெய்யோன் காட்சியிற் பொலிந்து நின்று.

கொய்யுஞ்செங் கமலப் போது குவிந்தன வெடுத்துக் கூத்துச்
செய்யும்புண் டரிகத் தாளுந் திசைகடந் துளவீ ரைந்து
கையுந்திண் படையுந் தெய்வ மகளிர்மங் கலநாண் காத்த
மையுண்ட மிடறுஞ் சங்க வார்குழை நுழைந்த காதும்.

செக்கரஞ் சடையுந் தேசார் வெண்டிரு நீறுந் தெய்வ
முக்கணு முரகங் கச்ச முள்ளெயி றிமைக்கு மார்பு
மைக்கருங் கயற்க ணங்கை வலமிபி னொதுங்கி நிற்கும்
பக்கமு மவண்மேல் வைத்த பார்வையு நகையுந் தோன்ற.

கங்கையா றலம்பு மோசை கடுக்கைவண் டிரங்கு மோசை
மங்கல முழவி னோசை மந்திர வேத வோசை
செங்கையா டெரியு மோசை திருவடிச் சிலம்பி னோசை
யெங்கணு நிறம்பி யன்ப ரிருசெவி கமுத மூற்ற.

ஆடினா னமல மூர்த்தி யதொலி முகிழ்த்த கர சென்னி
சூடினா ரடியில் வீழ்ந்தார் கருதியா யிரந்த வாறு
பாடினார் பரமா னந்தப் பரவையிற் பழுந்தா ரன்பு
நீடினார் திருக்கூத் தனைத்துங் காண்பா நியமம் பூண்டார்.

காஞ்சிப் புராணம்.

செறியு நான்மறைச் சிரமிசைப் பயமொரு விநதா
னறிஞர் காண்கிலா வற்புதத் திருநட மெலகருப
பிறிவ ரும்பெருங் கருணையாற் காட்டிடப் பெற்றேன்
மறியு மிவ்வுடல வருபயன் கிடைத்ததென் றனக்கே.

“அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ ழிருக்க வென்றார்” இங்கே அம்மையார் பிரார்த்தித்தவாறு ஏனையரும் வேண்டினர். அதுவருமாறு:

தாயுமான சுவாமிகள் பாடல்.

காட்டுகின்ற முக்கட் கரும்பே கனியே
ஞட்டமெல்லாந் திரவுன தாடலையுங் காண்பேனோ
மன்றுடும வாழ்வே மரகதநேர் மாணிக்கக்
குன்றேநின் றாட்கீழ்க் குடிபெறவுங் காண்பேனோ.

காஞ்சிப்புராணம்

அடியளந் தவன்கறைமிடற் றடிகளை யானந்தக் கூத்தாடனு[டும
முடிவிலே தமெடுத்த தடியனேன் மத்தகம் முழுக்கவும் பெறவேண்
படியிலாப் பெருங்கருணை யஞ்சலி யேயாளி பருமெனப் போற்ற
வடிநெடும் படைக் கழுக்கடையேந்திய வள்ளல்பா லருள்செய்வார்.

51 கூடுமா றருள்கொ டுத்துக் குலவுதென் றிசையி லென்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய வாலங் காட்டி
லாடுமா நடமு நீகண் டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை யென்றான் பரவுவார் பற்றாய் நின்றான்

"தென்றிசையின்" என்று பாடபேதமுண்டு

"நிலவியவாலங்காட்டினிலாடுமா நடம்" என்றார் காளிக்காகத் திருநடனஞ் செய்தருளினனென்பதற்குத் திருவாலங்காட்டுப் புராணத்தில் விருத்திச் சருக்கம்

இன்சுவைப் பொழியுஞ் சாயல் லவிர்பயி ரெங்கச் செவ்விப்
புன்சிறு முறுவல் பூப்பப் புரணை நந்தப் பூர
தனப்புறம் பவையோருளை பாய வியப்பக்டேறப்
விண்படு நடனஞ் சாலி பாடாய வரைத்தேவலே

"பாடுவாய் நம்மை என்றான்" என்றார். இங்கே சிவபெருமான் அம்மையாருக்கு அனுக்கிரகித்தவாறு நாரணனுக்கு மனுக்கிரகித்ததைப் பின்வருங் காஞ்சிப்புராணத்துச் செய்யுளாற் காண்க —

பாப்புப் பாயலோ யித்தனைச் சிறப்புடைப் பரிவின்மைப்
போற்றிக்
காப்புத் தாண்டவ மாயிடைக் காட்டுது மகநட நன்கேற்பக்
கோப்புச் சீர்மை மத்தள முழக்குவா யாசெனக் கொடும்பாசம்
நீப்புச் செய்தமை யாளுடை யண்ணலார் நிகழ்த்திய மொழி
கேட்டு.

வணப்பு ணமப்புகுந் தழுக்கிய பூந்துழாய் வானவன் பெரிதோகை
கொண்டுவல்விரைந் தணுகினன் காஞ்சியிற் கோமுரைத் தனிமாகி

முண்டர் போற்றவா மூங்கணர்க் கணிமையி ளுகம விதியாற்றுற்
கண்டு மத்தள மாதவீச் சரன்றனைப் பூசனைக் கடன்பூண்டார்

"பரவுவார் பற்றாய் நின்றான்" என்பதனாற் பத்திவலையிற் படுவோனாகிய சிவன் அன்பர்க்குச் சரணியனென்பதும் அன்பில்லாதார்க் கடைதற்கரியனென்பதும் பெறப்பட்டன. இவற்றிற்குப்பிரமாணம் பின்வருஞ் செய்யுட்களிற் காண்க.

திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்.

உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலாற்
கள்ள முள்ளவ ருக்கருள் வானலன்
வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பன வர்தம்மை நாணியே.

திருக்களிற்றுப்படியார்.

நல்லசிவ தன்மத்தா னல்லசிவ யோகத்தா
னல்லசிவ ஞானத்தா னனுபிய—வல்லதனு
லாரேனு மன்புசெயி னங்கேத லைப்படுங்கா
ணாரேனுங் காணு வரன்.

திருமந்திரம்.

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகில
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

என்பே விறகா விறைச்சிய றுத்திட்டுப
பொன்போ லெரியிற் பொரியவ றுப்பினு
மன்போ டுருகி யகங்குழைந் தார்க்கன்றி
யென்போன் மணியினை யெய்தவொண் ணாதே.

வாயுசங்கிதை.

கருமமா தவஞ்செ பஞ்செபல் காசறு சமாதி ஞானா
புரிபவர் வசம தாகிப பொருந்திடேம புரையியான றினறித
திரிவறு மன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்து நிற்போ
முறைசெய்வோ மவர்முனெய்தி யவருள தறைறவோமென் றும்.

62\. அப்பரி சருளப் பெற்ற வம்மையுஞ் செம்மை வேத [ந்து
மெய்ப்பொரு ளானார் தம்மை விடைகொண்டு வணங்கிப் போ
செபபரும் பெருமை யன்பாற் றிகழ்திரு வாலங் காட
நற்பதி தலையி னூலே நடந்துபுக கடைந்தா ரன்றே.

'மெய்ப்பொருளானார்' என்றா. அதற்குப் பிரமாணம் பின்வருஞ் செய்யுட்களிற் காண்க:—

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.

காத லாகிக்க சிந்துகண் ணீர்மல்கி
யோது வார்தமமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமசி வாயவே.

திருவிளையாடற் புராணம்.

சீதமணி மூரறிரு வாய்சிறித ருப
மாதவர்கள் காணவெளி வந்துவெளி நின்று
னாதமுடி வாயளவி னூன்மறையி னந்தப
போதவடி வாகிநிறை பூரணப ராணன்.

அளவறு கலைகட் கெல்லா முறைவிட மாகி வேத
விளைபொரு ளாகி நின்ற வேதிய சரண மென்று

வளைவுறு மனத்தினாரைத் தேசிக வள்ள னோக்கிப்
பளகறு தவத்தீர் வேட்கை யாதெனப் பணிந்து சொல்வார்.

நிறைபரா பரம்விஞ் ஞான நிராமய மென்று நூல்க
ளறைபரம் பிரம மாகு மிதனுரு வாகு மேக
மறையதன் பொருளே யிந்தச் சுந்தர வடிவா யிங்க
ணுறைசிவ லிங்க மொன்றே யென்பர்நூ லுணர்ந்த நல்லோர்.

நற்பதி தலையினாலே நடந்து, என்று வருவதினால் அம்மையாருக்கு இத் திருத்தலத்தின்மீதுள்ள அன்பும் பக்தியும் விளங்கின. இவர் திருத்தலை யாலே நடந்தருளிய திருவாலங்காட்டைத் திருஞானசம்பந்தமூர்த்திநாய னார் மிதித்தற்கஞ்சி அத்திருப்பதியின் சமீபத்தைப் பொருந்தச் சென்றமை யைப் பின்வருஞ்செய்யுளாலறிக:—

பெரிய புராணம்.

இம்மையிலே புவியுள்ளோ ரியாருங்காணா வேழுலகும் போற்றி
சைப்ப வெம்மையாளு
மம்மைதிருத் தலையாலே நடந்துபோற்று மம்மையப்பர் திருவா
லங் காடாமென்று
தம்மையுடை யவர்மூதூர் மிதிக்கவஞ்சிச் சண்பைவருஞ் சிகாம
ணியார் சாரச்சென்றார்
செம்மைநெறி வழுவாதபதியின் பாங்கோர் செழும்பதியி லன்றிரவு
பள்ளிசேர்ந்தார்.

63. ஆலங்கா டதனி லண்ட முறநிமிர்ந் தாடு கின்ற
கோலங்காண் பொழுது கொங்கை திரங்கியென் றெடுத்துத்
மூலங்கா ணாதார் தம்மை மூத்தநற் பதிகம் பாடி [தங்கு
ஞாலங்கா தலித்துப் போற்று நடம்போற்றி நண்ணு நாளில்

“காடதனினண்ட”—“மூலங்காண்பரியார்” என்றும் பாடபேதமுண்டு.

திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்

பண் நட்டபாடை.

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற் குழிவ
யிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கணீண்டு பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்
பேய்

தங்கி யலறி யுலறுகாட்டிற் றாழ்சடை யெட்டுத் திசையும்வீசி
யங்கங் குளிர்ந்தனலாடுமெங்களப்பனிடந்திரு வாலங்காடே. க

கள்ளிக் கவட்டிடைக் காலீட்டிக் கடைக்கொள்ளி வாங்கி மசித்துமையை
விள்ள வெழுதி வெடுவெடென்ன நக்கு வெருண்டுவிலங்குபார்த்துத்
துள்ளிச் சுடலை சுடுபிணத்தீச் சுட்டிட முற்றுஞ் சுளிந்துபூழ்தி
யள்ளி யவிக்கநின் றாடுமெங்க ளப்ப னிடந்திரு வாலங்காடே. உ

"விலங்குகாட்டிற்" "துள்ளித்துடித்து" "சுழிந்து" என்றும் பாடம்.

வாகைவி ரிந்துவெண் ணெற்றொலிப்ப மயங்கிருள் கூர்ந்த நள்ளியாங்கே
கூகையொ டாண்டலை பாடவாந்தை கோடதன் மேற்குதித் தோடவீசி
யீகை படர்தொடர் கள்ளிநீழ லீம மிடுசுடு காட்டகத்தே
யாகங் குளிர்ந்தன லாடுமெங்க ளப்ப னிடந்திருவாலங்காடே. ௩

"தோடி வீசி" என்றும் பாடம்.

குண்டிலோ மக்குழி சொற்றைவாங்கிக் குறுநரி தின்ன வதனைமுன்னே
கண்டிலோ மென்று கனன்றுபேய்கள் கையடித் தோடிடு காடரங்கா
மண்டல நின்றங் குளாளமிட்டு வாதித்து வீசி யெடுத்தபாத
மண்டமு றநிமிர்ந் தாடுமெங்க ளப்ப னிடந்திரு வாலங்காடே. ௪

"மண்டில" "குளாளமிட்டு" என்றும் பாடம்.

விழுது நிணத்தை விழுங்கியிட்டு வெண்டலை மாலைவிரவப்பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளியென்று பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொடுத்துப் போயின தாயை வரவுகாணா
தழுதுறங் கும்புறங் காட்டிலாடு மப்பனிடந்திருவாலங்காடே. ௫

'விழுக்கியிட்டு' 'விரவிப்பூட்டி' 'சிருடைத்தாய் வளர்த்துப்'என்றும் பாடம்.'

பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்பேய் பருந்தொடு கூகை பகண்
டையாந்தை
குட்டியிட முட்டை கூகைப்பேய்கள் குறுநரி சென்றணங் காடு
காட்டிற்
பிட்டடித் துப்புறங் காட்டிலிட்ட பிணத்தினைப் பேரப் புரட்டி
யாங்கே
யட்டமே பாயநின் றாடுமெங்க ளப்பனிடந்திரு வாலங்காடே. ௬

"குறுநரிதின்றிணங" "பிணத்தினைப் போக" என்றும் பாடம்.

சுழலுமழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய் சூழ்ந்து துணங்கையிட்
டோடியாடித்
தழலுளெரியும் பிணத்தைவாங்கித் தான்றடி தின்றணங் கா
டுகாட்டிற்
கழலொலி யோசைச்சிலம்பொலிப்பக் காலுயர் வட்டணையிட்டு
நட்ட
மழலுமிழ்ந் தோரி கதிக்கவாடு மப்பனிடந்திரு வாலங்காடே. ௭

நாடு நகருந் திரிந்துசென்று நன்னெறி நாடி நயந்தவரை
மூடி முதுபிணத் திட்டமாடே முன்னிய பேய்க்கணஞ் சூழச்
சூழக்
காடுங் கடலு மலையுமண்ணும் விண்ணுஞ் சுழல வனலைகையேந்தி
யாடு மரவப் புயங்கனெங்க ளப்ப னிடந்திரு வாலங்காடே. ௮

"யாடு மமரர் புயங்க" என்றும் பாடம்.

துத்தங் கைக்கிள்ளை விளரிதார முழையிளி யோசைபண் கெழு
மப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணிதந் துந்துபி தாளம்வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோற் றமருகங் குடமுழா
மொந்தைவாசித்
தத்தனை விரவினோ டாடுமெங்க ளப்பனிடந்திருவாலங்காடே. ௯

"தத்தனமை விஞேடாடு" என்றும் பாடம்

புந்தி கலங்கி மதிமயங்கி யிறந்த வரைப்பறங் காட்டி லிட்டுச்
சந்தியில் வைத்துக் கடமைசெய்து தக்கவரிட்டசெந் தீவிளக்கா
முந்தி யமரர் முழவிஞேசை திசைகது வாசிலம் பார்க்கவார்க்க
வந்தியின் மாநட மாடுமெங்க ளப்ப னிடந்திரு வாலங்காடே. ௧0

ஒப்பிணை யில்லவன் பேய்கள்கூடி யொன்றினை யொன்றடித் தொக்கலித்துப்
பப்பிணை யிட்டுப்ப கண்டைபாடப் பாடிருந் தந்நரி யாழமைப்ப
வப்பனை யணிதிரு வாலங்காட்டெ ளடிகளைச் செடிதலைக் காரைக் காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும்வல்லார் சிவகதி சேர்ந்தின்ப மெய்துவாரே. ௧௧

"பாண்டைபாட" என்றும் பாடம்.

வேறு.

64 மட்டவிழ்கொன் றையினூர்தந் திருக்கூத்து முன்வணங்கு
மிட்டமிகு பெருங்காத லெழுந்தோங்க வியப்பெய்தி
யெட்டியில வம்மீகை யெனவெடுத்துத் திருப்பதிகங்
கொட்டமுழ வங்குழக னாடுமெனப் பாடினர்.

மூத்ததிருப்பதிகம். பண் – இந்தளம்.

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடுமே ௧

நிணந்தா னுருகி நிலந்தா னனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை யெறிந்து சூழு நோக்கிச் சுடலை நவிழ்த்தெங்குங்
கணங்கள் கூடிப் பிணங்கண் மாந்திக் களித்த மனத்தவா
யணங்கு காட்டி லனல்கை யேந்தி யழக னாடுமே. ௨

புட்கள் பொதுத்த புலால்வெண் டலையைப் புறமே நரிகவ்வ
வட்டென்ன றழைப்ப வாந்தை வீச வருகே சிறுகூகை
யுட்க விழிக்க வூமன் வெருட்ட வோரி கதித்தெங்கும்
பிட்க நட்டம் பேணு மிறைவன் பெயரும் பெருங்காடே. ௩

முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே [டுப்
புள்ளி யுழைமான் றோலொன் றுடுத்துப் புலித்தோல் பியற்கிட்
பள்ளி யிடமு மதுவே யாகப் பரம னாடுமே ௪

செத்த பிணத்தைத் தெளியா தொருபேய் சென்று விரல்கட்டிக்
கத்தி யுறுமிக் கனல்விட் டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப் பலபேய் யிரிந்தோடப்
பித்த வேடங் கொண்டு நட்டம் பெருமா னாடுமே. ௫

வாளைக் கிளர வளைவா யெயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும் விழுங்கி முரலு முதுகாட்டுற
ருளிப் பலபேயி னிலைப்பான மயிர்கட் டழல்வா யழல்கட்பேய்
கூளிக் கணங்கள் குழலோ டியம்பக் குழக னாடுமே ௬

நொந்திக் கிடந்த சுடலை கடவி நுகரும் புழுவின்றிச்
சிந்திக் கிருந்தங் குறங்குஞ் சிறுபேய் சிரப்பப் படுகொட்டின
முந்தி யமரா முழவி னோசை முறைமை வழுவாமே
யந்தி நிருத்த மனலகை யேந்தி யழக னாடுமே ௭

வேய்க ளோங்கி வெண்முத்த துதிர வெம்மைகொள் சுடலையு
ளோயு முருவி லுலறு கூந்த லலறு பகுவாய்
பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி யணங்குறப் பெருங்காட்டின்
மாய னாட மலையான் மகளு மருண்டு நோக்குமே ௮

கடுவ னுகளுங் கழைசூழ் பொதும்பிற் கழுகும் பேயுமாய்
யிடுவெண் டலையு மீமப் புகையு மெழுந்த பெருங்காட்டிற் [பாடப்
கொடுவெண் மழுவும் பிறையுந் ததும்பக் கொள்ளென் றிசை
படுவெண் டுடியும் பறையுங் கறங்கப் பரம னாடுமே. ௯

குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கற்பேய்
யிண்டு படர்ந்த விருள்சூழ் மயானத் தெரிவா யெயிற்றுப்பேய்
கொண்டு குழவி தடவி வெருட்டிக் கொள்ளென் றிசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள் தாழ விமல னாடுமே. க0

சூடு மதியஞ் சடைமே லுடையார் சுழல்வார் திருநட்ட
மாடு மரவ மரையி லார்த்த வடிக ளருளாலே
காடு மலிந்த கனல்வா யெயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி யாடப் பாவ நாசமே. கக

65 மடுத்தபுனல் வேணியினா ரம்மையென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்திலவ
ரெடுத்தருளுஞ் சேவடிக்கீ ழென்று மிருக் கின்றாரை
யடுத்தபெருஞ் சீர்பரவ லாரளவா யினதம்மா.

"அடுத்த பெருஞ் சீர்பரவ லாரளவா யினதம்மா" என்றது, சிவனடியாருடைய அளவில்லாப் பெருமையை யுணர்த்தி நின்றது. இதனைப் பின் வருந் திருவிளையாடற்புராணத்துச் செய்யுளானறிக.

மணிதரு மிமையமா தையன் பங்கல வனைப்பு நோக்கிப்
புனிதவா னவரை யொத்தா ரவர்க்குப் புகழ்மா வெந்தை
கனிதரு கருணை நாட்டம் பெற்றவர் கடவு ளோராற்
பணிதரு மலரிட் டேத்தி வழிபடற் பாலா ரன்றோ.

வேறு.

66 ஆதியோ டந்த மில்லா னருணட மாடும் போது
கீதமுன் பாடு மம்மை கிளரொளி மலர்த்தாள் போற்றிச்
சீதநீர் வயல்சூழ் திங்க ளூரினப் பூதி யாராம்
போதமா முனிவர் செய்த திருத்தொண்டு புகல லுற்றேன்.

"ஆதியோ டந்தமில்லான்" என்றது, சிவபெருமான் பிறப்பிறப்பில்லாதவனென்பதை யுணர்த்தி நின்றது. இக்கருத்தே பின்வருஞ் செய்யுளினு முளதாதலைக் காண்க.

காஞ்சிப்புராணம்.

முன்னுறு பொருள்கட் கெல்லா முற்படு பழையாய் போற்றி
பின்னுறு பொருள்கட் கெல்லாம் பிற்படு புதியாய் போற்றி
புன்மதி யாளர் தேறாப் பூரண முதலே போற்றி
சின்மயத் திருவே கம்ப சிவசிவ போற்றி போற்றி.

சேக்கிழார் நாயனார்

அருளிச்செய்த

காரைக்காலம்மையார் புராணமும்

அரும்பொருளுவமைச் செய்யுட்டிரட்டும்

முற்றிற்று.

நல்லூர் ஆறுமுக நாவலரால் வசனரூபமாகச்செய்த

காரைக்காலம்மையார் புராணம்.

சோழமண்டலத்திலே, காரைக்காலிலே, வைசியர் குலத்திலே, தனதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் புனிதவதியார் என்கின்ற ஒரு புத்திரியார் பிறந்தார். அத்தனதத்தன் அப்புத்திரியாரை நாகப்பட்டணத்தில் இருக்கின்ற நிதிபதி என்பவனுடைய புத்திரனாகிய பரமதத்தனுக்கு விவாகஞ் செய்து கொடுத்து தனக்குவேறு பிள்ளையின்மையால அவரை நாகப்பட்டணத்திற்குப் போகவிடாமல் தன்னுடைய வீட்டுக்கு அருகிலே ஒருவீடு கட்டுவித்து அளவிறந்த திரவியங்களையுங் கொடுத்து, கணவனோடும் அதிலிருத்தினான். பரமதத்தன் அந்த செல்வத்தை விருத்திசெய்து இல்லறத்தை ஒழுங்குபெற நடத்திவந்தான். அவன் மனைவியாராகிய புனிதவதியார் பரமசிவனுடைய திருவடிகளிலே அன்பு மேன்மேலும் பெருக இல்லறத்திற்கு வேண்டுவன வற்றை வழுவாது செய்வாராயினார். தம்முடைய வீட்டுக்குச் சிவனடியார்கள் வரின் அவர்களைத் திருவமுது செய்வித்து, அவரவர் வேண்டியபடி பொன் இரத்தினம் வஸ்திரம் முதலாயின உதவுவார்.

இப்படி நிகழுங்காலத்தில் ஒருநாள் பரமதத்தனிடத்திற் காரியமூலமாக வந்தவர்கள் சிலர் அவனுக்கு இரண்டுமாங்கனி கொடுக்க, அவனவைகளை வாங்கிக்கொண்டு அவர்கடங் கருத்தை முடித்து அவைகளை மனைவியாரிடத்திற் கனுப்பிவிட்டான். மனைவியார் அவைகளைவாங்கி வைத்தபின்பு, சிவனடியாரொருவர் பசியினால்வருந்தி அவர் வீட்டிற் சென்றார். புனிதவதியார் அவ்வடியவருடைய நிலையைக்கண்டு கலத்தைவைத்துச் சோறு படைத்து அந்நேரத்திலே கறியமுது பாகம்பண்ணப் படாமையால், "சிவனடியவரே பெறுதற்கரிய விருந்தினராய்வந்தபொழுதே இதைப்பார்க்கினும் பெறவேண்டிய பேறு நமக்கொன்றுமில்லை" என்றுன்னி தங்கணவனனுப்பிய மாம்பழங்களிரண்டினுள் ஒன்றை யெடுத்துக்கொண்டுவந்து படைத்து அவ்வடியவ

ரைத் திருவமுது செய்வித்தார். அடியவரன்னம் மாங்கனியோ டுண்டு புனிதவதியாருடைய செய்கையை யுவந்து போயினர்.

போயபின் பரமதத்தன் நடுப்பகலிலே தம்மனைக்கு வந்து போசனம் பண்ணுகையில், மனைவியாரெஞ்சியிருந்த மாங்கனியைக் கொடுவந்து கலத்திலே வைத்தார். பரமதத்தன் மிகவினிய வக்கனியையுண்டு அதன் இனியசுவையினாலே திருப்தியடையாது மனைவியாரை நோக்கி, "மற்றக்கனியையும் கொண்டுவந்து வை" யென்றான். மனைவியார் கொண்டுவரச் செல்பவர்போலப் போய் நின்றுகொண்டு, யோசித்து, தம்மை விசுவசிக்கின்ற மெய்யன்பர்கட் குற்றவிடத்துதவும் பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்தார். உடனே அக்கடவுளுடைய திவ்விய நற்கருணையினால், அதிமதுரமாகிய வொரு மாங்கனியவர்கையில் வந்திருந்தது. அவர் அதைக்கொண்டுவந்து கணவனுடைய கலத்திலே படைக்க, அவனதனையுண்டு, அதன் சுவை யமிழ்தினுஞ் சிறந்தமையால், "இதுமுன் நான் தந்தமாங்கனியன்று; இது திரிலோகங்களிலும் பெறற்கரிது. இதனை நீயெங்ஙனம் பெற்றாய்" என்றான். மனைவியா ரதைச் செவியுற்று நமக்குத் திருவருளுதவிய திறத்தை வெளிப்படுத்துவது தகுதியன்று என்று நினைந்தமையால் நிகழ்ந்ததைச் சொல்லமாட்டாதவருமாய், கணவனுக்குண்மையை மறைத்துக் கூறுதலுந் தகுதியன்றென்று நினைந்தமையால் அதனைச் சொல்லாது விடமாட்டாதவருமாய், வருந்திநின்று, பின்னிகழ்ந்தபடி சொல்லவேதகுமென்று துணிந்து, "நீவிர் தந்த கனிகளிலொன்றையோரடியாருக்குப் படைத்துவிட்டமையால் இதற்கியான் யாது செய்வேனென்று கவன்று, சிவபெருமானைத் தியானித்துக் கொண்டிருந்தேன். அவருடைய திருவருளினாலிந்தக்கனியென் கையில் வந்திருந்தது" என்றார். பரமதத்தன் அதை நம்பாதவனாகி, மனைவியாரை நோக்கி "இந்தக்கனி சிவபிரானுடைய திருவருளினாலே கிடைத்ததாயின், இன்னும் ஒருகனி அவருடைய திருவருளினாலே அழைத்துத்தா" எனப் புகன்றான். புனிதவதியாரவண் விட்டகன்று பரமசிவனைத் துதித்து, "இன்னுமொருகனி தந்தருளீராகில், அடியேனுடைய வார்த்தை பொய்த்ததாய்விடும்" என்று விண்ணப்பஞ் செய்ய, அடியவரெண்ணத்தைப் பூர்த்திசெய்வதே

கடனாகக் கொண்ட சுவாமியினுடைய திருவருளினாலே யொரு மாங்கனி யவர்கையில் வந்திருந்தது. அவரதைக் கொண்டுவந்து, மணாளன் கையிற்கொடுக்க, அவன் ஆச்சரியமடைந்துவாங்கினான். வாங்கிய பழத்தைப் பின் காணாதவனாகி மிகுந்த பயங்கொண்டு, மனந்தடுமாறி, அப்புனிதவதியாரைத் தெய்வமென நினைந்து அவரைப்பிரிந்து வாழவேண்டும் என்று துணிந்துதன்கருத்தை பிறருக்கு வெளிப்படுத்தாமல், அவரோடு தொடர்பின்றி யொழுகினான்.

ஒழுகுநாளிலே, ஒருமரக்கலஞ் செய்வித்து, தான் செல்ல விரும்பிய தேசத்திலே விரும்பப்படுகின்ற அரும்பண்டங்களை யதனிடத்து நிறையவேற்றி, சுபதினத்திலே சமுத்திரராஜனாகிய வருணனைத் தொழுதுகொண்டு, மாலுமி முதலியவரோடுமேறி அத்தேசத்தை யடைந்து, வாணிகஞ்செய்து சின்னாளாயினபின், மீண்டுமம் மரக்கலத்தேறி, பாண்டிநாட்டுள்ள மேவார் நகரடைந்து, அங்குள்ளவொரு வைசியனுடைய குமாரியை மணந்துகொண்டு பெருஞ்செல்வத்தோடும் வாழ்ந்திருந்தான். அவனுக்கவ் வேந்திழை வயிற்றிலேஒரு பெண்மகவு பிறந்தது. அவன்தான் கூடிவாழ்தற்கஞ்சி நீக்கிய மனைவியாரைத் தான் வழிபடுந் தெய்வமாகக்கொண்டு அவருடைய "புனிதவதியார்" என்னுந்திருநாமத்தையே அப்பெண்ணிற்கிட்டான்.

பரமதத்தனிப்படியே இங்கேயிருக்க, புனிதவதியார்காரைக்காலின்கண்கற்பினோடு இல்லறம்வழுவாது நடாத்திவந்தார். அவருடைய சுற்றத்தார்கள் வாணிபத்தின்பொருட்டுச் சென்றபரமதத்தன் பாண்டிநாட்டிலே மேவார் நகரத்திலே நிதியை விருத்தி செய்துகொண்டு வாசஞ்செய்கின்றானெனக் கேள்வியுற்று அவனிடத்திற் சிலரை யேகவிடுத்து, அவனது நிலையை யுணர்ந்து கவலைகூர்ந்து, புனிதவதியாரைத் தாமேஅவனிடத்திற்குக் கொண்டுபோய் விடவேண்டுமெனவெண்ணி சித்திரச்சிவிகையில் சிறப்புடனேற்றிக்கொண்டு சென்று அவனிருக்கு நகரத்திற்குச் சமீபித்து தாம் புனிதவதியாரைக் கொண்டுவந்தமையை யவனுக்காளனுப்பி யறிவித்தார்கள். அவனதனை யறிந்து அச்சங்கொண்டு தன்னிரண்டா மனைவியோடும் மகளோடும் புனிதவதியாரிடத்தி

ற்குவந்து "அடியேன் உம்முடையகருணையினாலேவாழ்கின்றேன் இச்சேயினுக்கு உமது திருநாமத்தையே யிட்டேன்," என்று சொல்லிக்கொண்டு அவருடைய பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். உடனே புனிதவதியார் தஞ்சுற்றத்தார்களிடத்திலே அச்சத்தோடு மொழுங்கிநிற்க, அவர்கள் வெள்கி பரமதத்தனை நோக்கி "நீயுன்னுடைய மனைவியை வணங்குவதென்னை?" என்றார்கள். அதற்குப் பரமதத்தன் "நானிவரிடத்திலோர் பெரியவற்புதத்தைக்கண்டபடியால், இவர்தெய்வப் பெண்ணே யன்றி மானுடப் பெண்ணல்லர் என்று துணிந்து இவரைப் பிரிந்தேன். இவரையான் தொழுந்தெய்வமென்று கொண்டமையால், நான் பெற்ற விக்குழந்தைக்கு இவர் பெயரைத் தரித்தேன். அதுபற்றியே இவருடைய திருவடியையும் வணங்கினேன். நீங்களுமிவரை வணங்குவீர்" என்றான். அதனைச் செவியுற்ற சுற்றத்தார்கள் "இது வென்ன வாச்சரியம்" எனத்திகைத்து நின்றார்கள். புனிதவதியார் கணவன் பகர்ந்த வார்த்தையைக் கேட்டு பரமசிவனுடைய உபயபாதார விந்தங்களைச் சிந்தித்து, "சுவாமி! இவனுடைய கொள்கையிது. இனி இவன் பொருட்டுத தாங்கிய வழுகுதங்கிய தசைப பொதியை நீக்கி, தேவரீரைச் சூழ்ந்து நின்று துதிக்கின்ற பேய்வடிவை அடியேனுக்குத் தந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அக்கணமே யக்கடவுளுடைய திருவருளினாலே, மாமிசம் முழுதையுமுதறி, எற்புடம்பாக, மண்ணுலகமும், விண்ணுலகமும் வணங்கும் பேய்வடிவ மாயினார். அப்பொழுது தேவர்கள் பூமாரி பொழிந்தனர். தேவதுந்துபிகளொலித்தன. இக்காக்ஷியைக் கண்ணுற்ற சுற்றத்தார்களெல்லாருமஞ்சி அவரை நமஸ்கரித்துக் கொண்டு போய்விட்டார்கள்.

புனிதவதியார், தமக்குச் சிவபெருமானுடைய திருவருளினாலே கிடைத்த ஞானத்தைக்கொண்டு, அற்புதத் திருவந்தாதியும் திருவிரட்டை மணிமாலையும் பாடி, திருக்கைலாசகிரிக்குப் போக விரும்பி, மனத்தினு மிகுந்த வேகத்தோடு சென்று, அந்தத் திருக்கைலாசகிரியின் பக்கத்தை யடைந்து, ஆங்கு காலினா

னடத்தல் தகுதியன்றென்றெழுந்து, தலையினாலே நடந்து போய், மலையிலேறினார். ஏறும்போழ்து, உமாதேவியார் அக் கோலங்கண்டு, எம்போலிகள் புனிதவதியாருடைய திடபத்தி யைக்குறித்து உலகமாதாவாகிய உமாதேவியாரே ஆச்சரிய மடைந்தாராயின், நாம் எவ்வளவு ஆச்சரியம் அடைதல் வேண்டு மென்று சிந்திக்கச் செய்யும் பொருட்டுத் தாம் ஆச்சரிய முடை யவராகி, அவரது பத்தி மகிமையை உயர் வொப்பிலாத சிவ பெருமானுடைய திருவாக்கினாலேயே நமக்குணர்த்துவித்து நம் மை யுய்விக்கத் திருவுளங்கொண்டக்கடவுளை வணங்கி நின்று, "சுவாமி! இங்கே தலையினால் நடந்தேறி வருகின்ற எற்புடம்பை யுடையவரது அன்பின் மகிமை இருந்தபடி யென்னை" என்று விண்ணப்பஞ் செய்ய; பரமசிவன் "இங்கே வருகின்றவள் நம் மைத் துதிக்கின்ற அம்மையென்றறி. இப்பெருமை பொருந்திய வடிவத்தையும் வேண்டிப் பெற்றாள்" என்றார். பின் புனிதவதி யார் அருகே வந்தவுடனே, உலகமெல்லா முய்யும்பொருட்டு, அவரை நோக்கி, "அம்மையே" என்றழைத்தார். அதுகேட்ட புனிதவதியார் "அப்பா" என்று சொல்லிக்கொண்டு, அவரு டைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித் தெழுந்தார். சுவாமி யவரை நோக்கி, "உனக்கு வேண்டும் வரம் யாது?" என்று வினவ; புனிதவதியார் வணங்கி நின்று, "சுவாமி! அடியேனுக்கிறவாத பேரின்பமயமாகிய வன்புவேண்டும்; இனிப்பிறவாமை வேண் டும்; பிறக்கினும் தேவரீரை யொருகாலமும் மறவாமை வேண் டும்; இன்னும், தேவரீர் திருநிருத்தஞ் செய்யும்பொழுது, தேவரீ ருடைய திருவடியின் கீழே சிவானந்தத்தை யுடையேனாகி, தேவரீரைப் பாடிக்கொண்டிருத்தல் வேண்டும்" என்று விண் ணப்பஞ் செய்தார். சுவாமியவரை நோக்கி, "நீ தென் திசையி லுள்ள ஆலங்காட்டிலே நம்முடைய நடனத்தைத் தரிசித்து, பேரானந்தத்தோடு நம்மைப் பாடிக்கொண்டிரு" என்றருளிச் செய்தார். அதுகேட்ட காரைக்காலம்மையார் சுவாமியை நமஸ் கரித்து அநுமதி பெற்றுக்கொண்டு, திருவாலங்காட்டுக்குத் தலை யினால் நடந்துசென்று, சுவாமியுடைய திருநடனத்தைத் தரி சித்து, "கொங்கைதிரங்கி" என்னும் மூத்ததிருப்பதிகத்தை யும், "எட்டியிலவ மீகை" என்னுந் திருப்பதிகத்தையும் பாடினார். அவர் சுவாமியினுடைய தூக்கிய திருவடியின்கீழேசிவா னந்தத்தை யனுபவித்துக்கொண்டு எக்காலமும் இருக்கின்றார்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ வேதவியாச முனிவர் அருளிச்செய்த

பதினெண் புராணங்களுள்

பிரமாண்ட புராணம் பூர்வபாகம்

ஸ்நாநப்ரசம்சா கண்டத்தில

காரைக்கால ஸ்தலமகிமை யுரைத்த

நூற்றுப்பத்தேழாம், பனிரண்டாம்

அத்தியாயங்களின் வியாக்கியானம்.

இ

சித்தாடி இராமாயணம் ப்ரம்மஸ்ரீ

சுப்பராயசாஸ்திரியா ரவர்களைக்கொண்டு

காரைக்கால் ம-ா-ா-ஸ்ரீ

சி பாட பூ. இராமசுவாமிபிள்ளை யவர்கள்

முயற்சித்து வடமொழியினின்று

திராவிடத்தில் மொழிபெயர்க்கச்செய்து

அச்சிடுவித்த பிரதியினின்று

எடுக்கப்பட்டது.

பதினோராம் அத்தியாயம்.

ஓ சௌனகாதி முனீந்திரரே! சாகம்பரிதேவியின் பிரபாவத்தினாலும், அகத்தியர் முதலிய முனிவர் பிரார்த்தனையாலும், பரமசிவானுக்கிரகத்தினாலும் நகரமாயமைந்த அத்தலத்தில், வேதம் கரைகண்ட பிராமணர் பிராமணபத்தியும், வல்லமை யமைந்த அரசர்கள் பிர்மக்ஷத்திரியரிடத்து வணக்கமும், வாணிப வியாபார முற்ற வைசியர் பிராமண க்ஷத்திரிய வைசியரிடத்து மரியாதையும், அடிமைத்தனமையுற்ற சூத்திரர்களும, மற்றெல்லாமரபினரும் சருவசம்பத்துக்களுமுள்ளவர்களாய் வாசஞ்செய்து வருகிறார்கள்.

அந்நகரிற் றெய்வமில்லையென்பவன், தரித்திரன், மூடன், ஞானமிலி, காமவெறியுள்ளோன், உலோபிகிருபணன், பிறர்மனையாளையும் பொருளையும் ஆசிப்பவன், மற்றெவ்வகையினாலும் பாவிகளெந்த மரபுகளிலுமில்லை.

முப்பத்திரண்டிலக்கணம் பொருந்திச் சோழகுலசிகாமணியாகிய சுதாம்சுசுந்தரச் சோழமகாராசன் நால்வகைச்சேனையோடந் நகரைப்பரிபாலித்து, பின் எல்லாத் தேயங்களுக்குந் தலைவனாக ஆயினான். அவ்வரசனுக்குச் சமானரும அதிகரு முலகத்தொருவருமில்லை. இந்திரன் பகைவராகிய வசுரர்களை ஜயித்து உபகரித்ததனால் மூவுலகத்திலும் மிகப் புகழுபடைத்து, எல்லாமண்டலங்களையு மரசாட்சிநடாத்தி நிகழுநாள திங்கள மும்மாரிபெய்து பூமியெங்கும் பயிர்வள முண்டாகி, மழையில்லாமையாலுண்டாயிருந்த வறுமைமாறிற்று. தன்மக்கள்போலப் பிரஜைகளைப் பரிபாலிப்பதனாற்பிள்ளைக்கு பிள்ளைகளாகச் சந்ததிகளோடும் மனையாள்களோடும் அச்சம், நோயற்றவர்களாய்த் தீர்க்காயுளுற்றவர்களானார்கள்.

இவ்வாறு பரிபாலித்துவந்த வரசன் ஸ்ரீ கைலாசநாத மகாலிங்கத்தின்கண் மிகவும் பத்திவைத்து நித்திய, பட்ச, இருது, அயன உற்சவங்களை, முறையாய் நடத்திப் பங்குனி மாதத்தில் கிருத்திகா நட்சத்திரத்தில் துவஜா ரோகணஞ்செய்து, உத்திர

நட்சத்திரத்தில் அச்சோததீர்த்தத்தில் தீர்த்தவாரி யுற்சவஞ் செய்வித்து விதிப்படி பிரமோற்சவத்தைப் பூர்த்திசெய்து, சோமேசர்க்கு மாசிமதி அசுவதி நட்சத்திரத்தில் பிரமோற்சவந்துடங்கி மகநக்ஷத்திரத்தில் சந்திரபுஷ்கரணியில் தீர்த்தவாரியையும், நித்திய கல்யாணப் பெருமாளுக்கு வைகாசிமாதத்தில் பிரமோற்சவத்தையும் ஆகமமுறைப்படி ஆண்டுதோறும் நடத்தி யவரையும் பாதுகாத்து வருவாராயினன்.

அத்தகைய சாகம்பரிபுரமாகிய காரைக்காலில் மேருமலையன்ன பொன்னணிகளும் இரத்தினங்களும் நாட்டோடும் ஆதாயமுள்ள மிக்க செல்வமுடைய தனதத்தனென்னும் வைசியன் தருமவதியென்னும் மனையாளோடு இல்வாழ்க்கை செய்து வாரா நிற்குங் காலத்துப் பரமசிவ பத்திகளையுஞ் சைவாசாரங்களையுந் தானுமியற்றி நிற்கவும். பிள்ளையில்லாமையை மாற்றிக்கொள்ளும் வண்ணம் அஷ்டமி சிவராத்திரி பிரதோஷம் சோமவாரமுதலான சிவவிரதங்களை மியற்றியும் உபவாசமிருந்தும். சிவபூசை செய்து விதிவழி முற்கூறிய விரதங்களை முடித்துச், சிவபத்தருக்கமுதளித்துத் திருத்திசெய்து பின் பாரணை யுண்டும், மகப்பேற்றுக் கெவரெவரெவ்வெவ்விரதங்களைக் கூறினரோ, அவ்வவ்விரதங்களை யனுட்டித்துக் கொண்டு வரும்போது. பரமசிவகடாக்ஷத்தினாலுந் தம்புண்ணிய பரிபாகத்தினாலுஞ் சிவனடியார்க்கமுதளித்து வரும் நற்கருமத்தினாலும் அவ்வைசியன் றேவி தருமவதி கருப்பவதியாகி, பத்தாந்திங்களில், மேனகையீன்ற பார்வதியன்ன மங்களவடிவுடன் சர்வலக்ஷணங்களும் நிறைந்தவோர் பெண்ணைப் பெற்றாள்.

இலக்குமியையுற்ற பாற்கடல்போலும், கங்கையையுற்ற விமையமலைபோலும், அப்பெண்ணையுற்ற வைசியன் றானுங்கொளு மகிழ்ச்சியுற்றுங், கலைமதியொத்த கன்னிகை பிறந்தமையாற் றன் குலம் புனிதமாயினதெனத்தேறி, அப்பெண்ணினுக்குப் புனிதவதி யெனப் பெயரிட்டனன். நந்தனவனத்திற் கற்பகக் கொடிபோல அவ்வைசியனில்லில் அப்பெண்மகவு நாடோறும் வளர்ந்து அழகிய மேனியில் நவரத்தினாபரணங்கள் சிறுபருவமுதல் அழகுற அலங்கரித்

துக் கொண்டிருப்பினுஞ் சிவனடியார்கள் வயது வரா வென்றுகூ
றியளிக்கும் புத்தியையுடைமையுந் தன்னுருவத்தினுலியாவரும்
காமுற வேம்பிராயம் பக்கபின் சித்த சுத்தியுற்று ஓர்நாள் சோம
வாரத்தன்று சந்திரபுட்கரணியில் நீராடிச் சிவதரிசனத்துக்கு
வரும்போது அங்கு அமைக்கப்பெற்ற மடத்திற் படிக்குமமாகி
மதிமானயியங் கேட்டுப் பத்திரத்தையுடன் புராணிகனைவலம்
வந்துதொழுது போற்றுகிறுள.

ஓ மகாபிராமணா! எத்தருமஞ் செய்யிற் பிறப்பு இறப்பு முத
லிய துன்பங்கள் நீங்கும்? முனிவர்களுக்குரியவுத்தருமத்தை
யெற்குபதேசிக்க வேண்டுமெனப் புகலப் புராணிகர் அப்பெண்
பிள்ளையின் விருவையும மனவுக்கத்தையும் வடிவத்தையு நோக்கி
யுபதேசத்துக்குத் தக்கவளெனத் தேறி அறமபொருளின்பம்வீ
டெனனும பெருமபயனகளையும மிக்க நிலைகளை விட்டும விர
தையும உளளிய வெல்லாமுதவு மெனபாட்டினையுத்தரும ஒரு தரு
மத்தை யுபதேசிக்கத் துடங்கினர்.

புண்ணியத்துக்குப் புகலிடமான பெண்ணே! சிதடனையும்
பிரமஞானியாக்கு மோரற்புதமுரைப்பன கேள் உலக கருத்தாவா
கிய சிவபெருமானுடைய புத்தியானும காரணமில்லாமலே விசு
வாசஞ் செய்யுங் குணமுள்ளவர்களாய் மகிமைக் கிருப்பிடமுமாகிய
சிவபத்தர்களுக்க கன்னமளித்துவருவதினுலு மெண்ணிய வெல்
லாமினிதாகமுடிந்து பரமசிவனருளா லிறுதியில் மோக்ஷமுறு
மெனச் சாத்திரங் கூறலால் நீ வைகலுஞ் சோம்பாது சிவபத்தரு
க்குச் சந்தனம் புக்களாற் பூசனையாற்றி யன்னங்கொடுத்துவா,
அன்னக் கொடையினும் பெரிதானவறமில்லை, உடலம்வருந்து
விரதமுனைக்கொனறும வேண்டா. இவ்விரதமொனறுமே தவ
ருதுனுற்றிவா வெனப்புகனற புராணிகர் மொழிவழியே பூதவதி
தான் தருமசொருபியாகவி னன்றுமுதலன்னதான விரதமிடை
விடாது செயதுவருவாள்.

இங்ஙனம் சிகுமுத தனதத்தனனும் வைசியன பூதவதிக்கு
மணமகன வேண்டி யெங்குந் தேடியபின் நாகப்பட்டினத்திற்

குணம், பருவம், உருவம், வித்தை, பொருள் முதலியன வொத்திருக்குமோர் பிள்ளையைக் கண்ணுற்று, அவனுக்கு வதுவையாற்றத் துணிந்து, மணநாளிட்டுக் கல்யாண மண்டபங் கோலஞ்செய்து வேதசாத்திரங்களைப் பொருளாகவுடைய பிராமணர்களையும் புரோகிதனையும் வருவித்து உறவின்முறையார்களையும் மந்திரியுடனே அப்பட்டினத்தரசனையு மழைத்துப் பிறகு, சந்தனம், புஷ்பம், தாம்பூலம், ஆடை ஆபரணம் முதலிய கல்யாண வஸ்துக்களை யீட்டிப் பல்லியமுழுக்கி, யெதிர்கொண்டு சென்று மணப் பிள்ளையை யழைத்து இல்லிலமைத்து. மற்றைநாள் புரோகிதரை விளித்துக் குருவே! மற்றுமந்தணர் கூறாங்களுடன எனகன்னிகையின விவாகஞ்செய்விக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க, புரோகிதர், ஓ பிரபுவே! நல்லவானும் அரசர் முதலிய சுற்றத்தார் இஷ்டமித்திரர் சபமுகூர்த்தங்களுமெல்லாமொத்துகொண்டிருப்பதால் இனிதாப்பப தனமெனக் கூறித் தெரிந்தமட்டில் வதுவை செய்விக்கிறேனென றிணங்கி, சருவாவயவ சுந்தரியாயும சருவாபரண பூஷிதையாயுமுள்ள கன்னிகையை மங்கள ஸ்நானஞ் செய்வித்து, மந்திரத்தாற் கங்கணங்கட்டிக் கல்யாணமண்டப முற்று, விதிப்படி மேடையமைத்து சந்தனபுஷ்பங்களால் நாற் புறத்துமலங்கரித்த பொற்பாலிகைகளும, கெண்டிகளும், தாயங்கள் நிறைந்த மடக்குகளும. தூபம அர்க்கியம் அட்சதை பொரி செய முதலியவற்றுற் பூரணமாகியமற்றைப்பாத்திரங்களும் விடாமல மேடையில் வைத்து, அக்கினியை நாட்டிக் கல்யாணத்துக்குரிய ஓமங்கள்செய்து இனிக்கன்னிகாதானஞ் செயயலா மெனச் செபபததனத்தவணிகர் மனையாளுடனெழுந்து, சந்தோஷமடைந்து, அக்கினிச்சாட்சியாகப பரமதத்தனெனனும் பிள்ளைக்கு வாதக்ஷிணையளித்துப் பெண்ணைக் கன்னிகாதானஞ்செய்து கொடுத்தார்.

அக்கல்யாண மகோற்சவத்தி லொருகோடி செம்பொன்களும, நாலுகோடி வெண்பொனகளும், இலட்சம பசுக்களும மணப்பிள்ளைக்குப பரிசளித்து, அவவளவு பொருள பிராமண தக்ஷிணையாகவு மீந்து, கல்யாணச் சடங்கு முற்றியபின எல்லா

வுறவின் முறையார்களும், சம்பந்தியர்களும, அவர்க்கேகுவா ரவரவர்கட்கு விடையளித்தனுப்பி, மணாட்டியும்மணாளனும் இரதி மன்மதன்போல வெஞ்ஞான்றும் போகவின்ப நுகருமவண்ணமெண்ணிச், சம்பந்தியான கர்மதக்கனைப் பிரார்த்திக்கவவனு மிசைந்தனுமதி யளித்தபடி தன்மருகனைத தன்னில்லத் திருக்கவைத்தனன்.

பின பூதவதியுடன் பரமதத்த மருமகவணிகன நாடோறும் ஆயிரம் சைவர்களுக்கு அன்னமளித்துப் பின புசித்துவருவானாயினன். அப்பொழுது தனதத்தனென்னும் மாமனார் தன் பொருளிற் பாதி கூறிட்டு மருகனுககளித்துப் பெண்ணும் மருகனு மினபநதுயககவோர் சித்திரமாளிகை யமைத்துப் பலபணிப்பெண்களையும் பணிபுரி ஆட்களையும் ஏற்படுத்தி. பாற்கடலில் மகாலட்சுமியும் விஷ்ணுவும் பள்ளிகொள்ளு மிடம்போல பெண்ணும் மருகனு மேகாந்தமாயிருக்கப் படுக்கையறை யமைத்தனன். இளம்பிராயத்தே மூழிவடைந்த வச்செட்டிப்பெண் சர்வபிராணிகளிடத்தும் பரமசிவன வாசஞ செய்துவருகிறாரென மறுககாலமுஞ் சிந்தித்துக்கொண் டொவவொரு தினத்திலுங் காலையெழுந்து தன்கணவனுடன் அச்சோத தீர்த்தத்தில் நீராடிக் கைலாச நாதரைச் சேவித்து நிததியகருமங்கள முடித்துத தம்மில்லிற் போந்து பிராமணர்க்கு வேண்டுவன கொடுத்து, உச்சிப்பொழுதிற சந்திரதடத்திற் படிந்து. சோமேச்சுர தரிசனம் விதிப்படி நிகழ்த்தி, இல்லம்புகுந்து வநதிருக்குஞ சைவர்களைச் சோமநாத சொரூபரென்றுன்னி, தன்னுசா னுணர்த்தியவண்ணம் திருத்தியுற அன்னம் புசிப்பித்துவரா நின்றாள்.

பதினோராம அததியாயம் முற்றிற்று.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

ஓ சௌனகாதி முனிவர்களே! சிவபத்த சிகாமணியாகிய அபபூதவதியானவள் ஒவ்வொரு தினத்திலும் ஒன்று, பத்து, நூறு, ஆயிரத்திற்குக் குறையாமற் சிவபத்த ரெவரெவரா யினுமவர்களைச் சிவ சொரூபரென்றெண்ணி மிகவுபசரித்து, பாலன்னமும் பண்ணியங்களும் மற்றையுணவின பொருள்களுங் கொண்டு, குறைவறத் திருத்திசெய்வித்துக்கொண்டு, தனக்குச் சிவகடாக்ஷமெக்காலங் கிடைப்பதோவெனத் தியானித்து. சரீரமெடுத்து வந்த சிவபத்திபோலவே வந்துவருவாள்.

இங்ஙனம நிகழுமொருநாள் ஒருசிவபத்தர் ஒருகொம்பிலே தொங்குமிரண்டு தேமாங்கனிகளை மருமகர்செட்டியாருக்குக் காணிக்கையாகக் கொடுக்க அவர் வாங்கிப் பூதவதிகையிற் கொடுக்க அவள் வாங்கித் தன்னில்லிற் பத்திரமாக வைத்தாள். பின்னொருநாள் கருணைக் கடலாகிய கைலாசநாதர் குரவனுபவேதசத்தினால் தம்பத்தர்க்கன்னங் கொடுத்து, தம்மையும் பத்தியுடன் கனிகூர்ந்து பூசித்துவரும் அப்பூதவதியைப் பரீக்ஷித்துக் கடாக்ஷிக்கச் சிவபத்த வடிவந்தரித்து, இல்லத்திற்போந்து அவளை நோக்கி மிகப் பசித்தவர்போல ஒருவார்த்தை யுரைப்பார்.

ஓ குழந்தாய்! நான் மிக்கக் கிழவன், பசி நிரம்ப வருத்துகிறது. விரைந்தன்னங் கொடாவிடி லுயிர்நீங்கும்போ லிருக்கின்றது. சீக்கிரம் அமுதளிப்பாயெனப் பரமசிவன் கேட்ப, அப்பூதவதி முதியோனைப் பார்த்துத் தெண்டனிட்டு நிரம்பக்களிப்புடன் ஓ ஸ்வாமி! என்புருஷன் சிவபத்தரோடு புசித்துப் புறஞ்சென்றார். கணப்பொழுதுபொறுத்திருப்பீரேல் அடிசிலட்டு அமுதுபடைக்கிறேன். அதுவரையுந் தாங்காதாயின் இல்லிலிருக்கும் மிச்சிலன்னம்படைக்கிறேனென்ன, அதற்குடன்படவே மிகவும் விரைந்து கிழவனையாசனத்திருத்திப் பாலன்னம் படைத்து உபவசனமாகத் தேமாங்கனியொன்றைப் படைக்கவுண்டு மிகவும் நன்றாயிருக்கிறது நிரம்பவுந் திருத்தியாயிற் றெனப் புகழ்ந்து மறைந்துபோயினார்.

அப்பெண் கிழவோன மறைந்துற்றதை யெண்ணி வியப்புற் றுச சிவனடியார்க கித்தகைய மகிமையுளதாவென்று நினைத்துக் களித்திருக்கும்போது, ஆசிகூறுஞ சிவபத்தர்களுடன கூடிக் கணவன் சாயங்கால உணவின பொருட்டா வந்துற்றார். அப்போ தவள கணவனிஷ்டப்படி, பாலனனங் கலத்திட்டு கட்டிமாங்கனி யையும வைததனள. அமிர்தனனவவினியபழததைச சுவைத்து மிககக்களித்து மற்றோர் கனியையிடென்று முகததைநோக்கிக குறிபபிட்டுக்கேட்க, உண்மைசொலல வசசமுற்றுக கொணாநது வருகிறேனென்று சொல்லி மடைபபளளிக்குட் சென்று தனனிரு கைகளையுநதூக்கி "ஓ சுவாமி! இச்சமயம் ரக்ஷிக்கவேண்டுமெனச் சரணமடைநது பிராாத்தித்துத் துதிக்கப பரமசிவகடாக்ஷத்தினு லொரு மாஙகனி கையுற வதனைக்கொடுவநது புருஷனுக்கு களிமத் தனள. அவவணிந னககனியைச சுவைத்து முனனொரு பழததி னுமமிக்கவினிமையாயிருப்பதைககண்டு வியநது இபபழமேதென்று வினவப பரமசிவகடாக்ஷத்தினாற் கிடைததெதன றவளுண்மைகூற அங்ஙனமாயின அவ்வீசனிடமிருந தின்னுமோர் கனி யேற்றுக் கொடுபபாயென றவன்வேண்ட அவளும மனங்கனவிசைநது பண் டுபோல அன்னசாலை யுட்சென்று உனனடியாாககு அறம பொரு ளினபம வீடென்கிற புருஷார்த்தஙகளை யளித்தருளும அம்பிகா சகாய ஓ ஈசா, மாயையை வெனறோய, சுவாமி, இனனுமொரு பழமீநதருள வேண்டுமெனறிரக்க, நித்திய சந்துஷ்டரான பரம சிவன பின்னுமோர் மாங்கனி பேணியளிக்கக் கொணர்நது அத னையுந தன்புருஷனுக்கிட்டுக்களித்துப் பூரணதிருத்தியுற்றாள்.

அப்பொழுது பரமதததன் தன்மனையாள மகிமையை நேரி லேகண்டு, மனமகிழ்நது "பிரமனாதிதேவர்களுக்கும அறிவரிய பரமசிவன் இவளாதீனமாயினார். இவள்பார்வதிதேவியின் அமிசந் தான். தடையில்லை. இல்லையாயினிவட்கிவ்வளவு சத்தியமையாது. இவளை மனைவியாக வைத்துக்கொண் டிருப்பேனேயாகிற் சிவத் துரோகனு செயதபாவம சமபவிக்கும என்றச்ச முண்டாகின்றது. விட்டுவிடினுந் தோஷமுண்டாகின்றது. நானெனசெய்வேன் சுவா மீ" எனச் சிந்தைகலங்கி வாணிகத்தொழிற்கண்செல்லும் வியா ஜத்தை யிட்டவளைவிட்டுப் புறம்போவதே கருமமெனக் கடைட்

பிடித்துப் பல்பண்டப் பொருள்களைமிகுதியாகக் கப்பலிலேற்
றிக்கொண்டு வர்த்தகஞ்செய்யத் தீவாந்தரம் போய்வருகிறே
னென்று பூதவதிக்குப் புகன்றுகொண்டு மோர்தீவினுக்
குச் சென்றிழிந்து. ஆங்குத்தான் கொடுவந்த பல்பண்டங்
களையும் விற்று, திரவியங்களைக் கைக்கொண்டு பூதவதியின் சரித்
திரத்தைபெண்ணி யெண்ணி, மிகக்களிகூர்ந்து, கடல்வழியே
தன்றீவினுக்குவந்து, பாண்டிநாட்டில் தாம்பிரபரணி நதியென்
னும் பொருநையாறு சமுத்திரத்திற் சேருவதற்குச் சமீபத்தி
லிருக்குங் கனகலமெனனும் நகரத்தில்விலைக்கில் வாங்கிக்கொண்
டும், இரண்டாந்தாரமாக வேறொரு பெண்ணை மணந்துகொண்
டும், வசித்துவரும்போது, சிலகாலத்துக்குப் பின்பு இளைய
தாரத்துக்கோர் பெண்மகவு பிறந்தது. அதனால் மிகவும் மகிழ்
வுற்ற அவ்வணிகன் அநேகம் பிராமணர்களுக்குத் தனத்துடன
தான்யங்களைத்தானங்கொடுத்து. உத்தமியான தன்மூத்தமனைவி
பூதவதிக்குச் சொல்லாமல் வேறு விவாகஞ் செய்துகொண்டது
முதலிய தன குற்றங்களைப் பரிகரித்துக் கொள்ளும்பொருட்டுப்
பிறந்த பெண்குழவிக்குப் பூதவதியெனப்பெயரிட்டு, எக்காலத்
தும் பூதவதியென்கிற மனைவியைச் சிந்தித்துக்கொண்டு வருவா
னாயினான்.

இங்கே பூதவதி தீவாந்தரஞ் சென்றிருக்குந் தனகணவனை
யெப்போதுஞ் சிந்தித்துக்கொண்டு, ஒவ்வொரு தினத்திலுங்
காலையிலசோதை நீராடி, கைலாசநாதரைப்பூர்வம்போல் பூசித்
துத் தன கணவன் தீர்க்காயுளுடன் சுகமாக வந்துசேரவேண்டி
நூறுபிரதக்ஷிணநமஸ்காரங்களைச்செய்து இவ்வண்ணமே அரங்க
நாதர்க்கும் மற்றும் ஆறுமகாலிங்கங்களுக்கும் விதிவழி அர்ச்
சித்து, இல்லம்போந்து சிவபத்தர்க்குக் கட்டின்றி யன்னம்
படைத்து, மட்டில்லா வன்னதானஞ் செய்துகொண்டு தானொரு
காலம் அற்ப வுணவுகொண்டு, கணவன் வரவை யெதிர்நோக்கி
யிருந்தனள்.

சிலநாட் சென்றபின தனதத்தனென்னும் வைசியன், வா
ணிகஞ்செய்ய வெகுகாலத்திற்கு முந்தித் தீவாந்தரஞ் சென்ற
மருகன் பாண்டி நாட்டிற் கனகலமென்னும் பட்டினத்தில்வந்து

வசிக்கிறானெனத் தனக்குற்ற சிலரால் நிச்சிதமாகத் தெரிந்து, பெண்ணை மூடுசிவிகையி லேற்றுவித்துப் பரிவாரங்கள் சுற்றத் தார்களோடு அவனிருக்குமிடம் செல்லவனுப்பினான்.

அப்போது தன்னில்லத்தில்வந்த பூதவதியி னடியிணைகளிற் பரமதத்தன் மனையாளுடன் வந்து வீழ்ந்து, ஓ பூதவதி! உன்னைப் பார்வதிதேவியென்றெண்ணிச் சரணமடைந்தேன். நான் செய்த குற்றங்களைப் பொறுத்தருள்வாய். உனபெயரை யெப்போதுஞ் சிந்தித்து வரவேண்டியே இக்குழந்தைக் குனபெயரிட்டேன். என்னைக் கணவனாக நினைத் திருப்ப தாகத் தோற்றுகிறது. நானின்று மோரிட மோடிச்செல்கிறேன். எனக்கு நீ இல்லாளல்லள், என் குலதெய்வம் ஆதலாலென்னைக் காப்பாற்ற வேண்டுமெனப் பிரார்த்திக்கப், பூதவதி ஓ நாதா! இச்சரீரம் உமக்கென்றெண்ணி யிந்நாள்வரை யிரக்ஷித்துக்கொண்டு வந்தேன். உமக்கிச்சரீரத்திற் பிரிய மில்லையாயில் இப்போதே பரமசிவன் சாமீபம் போகக்கடவேனெனக் கூறிப் புருடனிடத்தில் விடைபெற்று, தான் கொண்டுவந்த திரவியங்களை யங்குள்ள பிராமணருக்குத் தத்தஞ்செய்து, தனனுடலம் விட்டுவிடவெண்ணற் குற்றபோது, அவள சரீரத்திலிருந்து வளை, இரத்தம், மாமிசம் இவைகண்டங்கண்டங்களாகச் சிதறிப்போயினபின் எந்த வடிவை யுற்றுப் பரமசிவனைத் தரிசிப்பதற்குக் கைலாசம் செல்லலாமென்று எண்ணித்தேறிபார்த்த மாத்திரத்தில தேவர்கள், அசுரர்கள் கூடவெருவும்படியான பிசாசவடிவமேற்று, கைலாயத்தைக்குறித் துப் புறப்பட்டுச் செல்லுமவள், இடையில் தேவர்களாலும், முனி வர்களாலும்பண்டே பிரதிட்டைசெய்யப்பட்ட மகாலிங்கங்களையும் சுயம்புலிங்கங்களையும் முறையாகச் சேவித்து, தமிழ்ப்பாஷையி னால் தோத்திரங்கள் பாடி, தன்பிறப்பிடமான காரைவன க்ஷேத் திரத்தில் விசேட அபிமானமுற்று, அந்த க்ஷேத்திரத்திற் சென்று கைலாசநாதர், காளமேகேசர், காளகத்தீசர், அருணா சலேசர், ஏகாம்பரேசர், சோமேசர், அகத்தீசர், நித்தியகல்யா ணப் பெருமா னிவர்களைப் பண்டுபோற் பூசித்து, ஆனந்தங்கொ ண்டு மனக்கவலைவிண்டு, திராவிடபாஷைத் துதிகளினாற் றோத் திரஞ்செய்துகொண் டிருந்தாள்.

அப்பொழுது, ஓ பூதவதி! குழந்தாய், சர்வமங்களாம்பாளுடன் கூடி யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீகண்ட பரமேசுவரருன்னைக் கடாக்ஷிக்கப் பேராசை கொண்டிருக்கிறார், நீ இப்பொழுதே கைலாசம் செலகவென ஆகாசவாக் குண்டாகக் கேட்டப் பொழுதே பூதவதி யவ்விடம் நீங்கிப்போய், சிவபரிவார கணங்களாற் சேவிக்கப்படுங் கைலாசதின் றாழ்வரை சேர்ந்து, இவ்விடம் காலூன்றி யியங்கினாற் சிவாபராத முண்டாமென அஞ்சி, தவத்தின் பெருமையாற் றலைகீழாக நடந்து செல்வாளாயினாள்.

அப்போது பரமேஸ்வரி பரமசிவனை நோக்கி, ஓ சுவாமி! தேவரீர் சமீபத்தை யெண்ணித் தலைகீமாக வரும் மிகப்பயங்கரமான விப்பிசாசம்யார்? கைலாச மலையில இருபத்துநாலாயிரம் யோசனை தூரந் தலைகீழாக நடநது, தேவரீர் சமீபம் வருகிற விவள் தவத்தின் மகிமையை யெனக் குணர்த்தல் வேண்டுமெனப் பிரார்த்திக்க, மகேசுவரன் மநதகாசஞ்செய்து ஓ பார்வதி! இவ ளெந்தாய், நம் பத்தருக் கன்னமிட் டளித்தவள், உன்னாற் பூசிககத்தக்கவளென வுணர்த்தி, அம்பாளுட னெதிருற்றழைத்து, தாயே சுகமாக வநதனையா! இங்குவா விங்குவா வெனக் கைகொடுத் தழைத்தனர். அப்போது காரைக்காலம்மை பகவானை வணங்கி ஓ! சர்வாந்தரியாமியே! தேவ தேவ! என்னைக் காத்தருளல் வேண்டுமென வேண்டப் பரமசிவன், உனக்கு என்னவரம்வேண்டுமெனச் சொல்லுகிறாள்.

சுவாமி, பராசத்தியுடனே கைலாயத்தில் வாசஞ் செய்யுந் தேவரீரைத் தரிசித்த வெனக்கு வேறு வரம் வேண்டுவதென். என்னிலும் பாக்கியமுற்றவ ருலகத்தில் வேறில்லை. எற்கேதேனு மோர் வரமளிக்கத்தான் வேண்டுமெனத்தேவரீருக்குத்திருவுள்ளமாயின், தேவரீர் ஆனந்தத் தாண்டவந் தரிசிப்பிக்க வேண்டுமெனப் பகவான் திருவாலங்காட்டிற் றரிசனமளிப்போம், அங்குப் போதியென்று விடையளிக்க, அவள் அவ்வளவு சேய்மை யேகுவதற் கெனக்குச் சத்தியில்லையே யென்று பாதத்தைப் பற்றிக் கொள்வதற்கு விரைந்தோடி வரும்போது மறைந்து போயினார்.

அப்பொழுது பரமசிவன் றிருவடி கையுறுமையினாற் சோக முற்றிருக்கு மம்மையை, மகாகணபதி பரமசிவ னாக்கினைப்படி தன கைகளினாற் றூக்கி யெடுத்தணைத்துக்கொடுசென்றத் திருவாலங்காட்டிற் சேர்த்துச் சோகந் தெளியும் வண்ணம் செய்தனர்.

பின் அம்மை களை தெளிந்து கண்விழித்து நோக்குழி நவரத்தினங்களா லிழைத்த வோர்பேரம்பலத்தையும், பொற்பிரம்பு தரித் ததிகார வேடம்பூண்ட நந்தீச பகவானையும், யாழிற் கானஞ்செய் கலைமகளையும், வேய்ங்குழலூது மிலக்குமிதேவியையும், மத்தளங் கொட்டும் மகாவிஷ்ணுவையுந், தாளந்தட்டும் பிரமதேவனையும், விளக்காக வமைந்த வேதங்களையும், வியப்புற்று நோக்குஞ் சனக, சனந்தன், சனாதன, சனற்குமார ஜனங்களையும், கூத்தாடும் மனமுருக வமைந்த காயத்திரி, சாவித்திரி சரசுவதிகளையும் வாரியிறைத்திருக்கும் மலருருவகதரித்தவேழுகோடி மந்திரங்களையும், சிங்காசனமாக விளங்கும் பஞ்சாக்கர மந்திரத்தையும், கண்ணாடிகளா விளங்குஞ்சந்திர சூரியரையும், பராசத்தியாகிய நாடக மேற்படுத்தியபிரபுவையுங், கைத்தீவட்டி பற்றியிருக்கு மிந்திராதி தேவர்களையும் நோக்கி, உளங்களித்து, இத்தகைய ஆனந்தத் தாண்டவ மூர்த்தியைத் தரிசனஞ் செய்ய, எனக்காகவே இவ்வனமமைந்த சேவை தரிசிப்பித்தீரேயென மிகவுங்கொண்டாடிப், பிரமாதிதேவர்களோடியுந, தேடியும் மனம்வாடியும், கவலையுடன்கூடியும், காணவொண்ணாத் திருவடி தரிசன மெனக்குக் கைகூடிற்று உம்கிருபையினாலே, என மிகத்துதித்துத் தானுந்தாண்டவமாடித் தனனை மறந்திருக்கு மம்மையை அவ்விடமிருந்து பகவான்சேரி லழைத்துக்கொடு, தன்னுலகமாகிய கைலாயஞ் சென்று சேர்ந்து தம்மிடத்தி லெப்போதுங் கூடவே வசித்துக்கொண்டு வரும்படியான சாமீப்பிய முத்தியென்று சொல்லப்படு மிரண்டாம் முத்தியைத்தந்தருளிக்கூடவே வைத்துக் கொண்டிருக்கிறார்.

முற்றிற்று.

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சா... நூல் நிலையம்
... 20.